# போரா? சமாதானமா?

லங்கையின் தேசிய இனப்பிரச்சினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்தாவும் கருவியும்

சிங்களம் பேசும்
மனிதனும்
தமிழ்ப் பேசும்
மனிதனும்
இச்சிறு பூமித்தீவில்
மனிதனும் மனிதனுமாக
வாழ வேணும்
சிங்களம் ஒரு மொழி
அது
தனித்து வாழ்ந்த
ஒரு மனிதக் கூட்டம்
தமக்குள்ளே
மனிதனும் மனிதனும்
கலந்துற வாடி
வாழ்வதற்காகக்
கண்டு கொண்ட கருவி
தமிழ் ஒரு மொழி
அதுவும் அவ்வாறே
மதமும்
மனிதன் கண்ட
ஒரு கருவியே
மனிதன்
பௌத்தனுயிருப்பதும்
மனிதன்
இந்து வாயிருப்பதும்
மனிதன்
முஸ்லீமாயிருப்பதும்
வாழ்வில்
மனிதனுயிருப்பதற்கே.
தமிழ்ப் பேசும்
மனிதனுக்கும்
சிங்களம் பேசும்
மனிதனுக்கும்
மூலத் தேவைகள்
உணவு உடை வீடே
மனிதப் பிரச்சினைகளின்
மூலமும் இவையே
மொழி மூலம்
மனிதன் கேட்பது
மனிதத் தேவைகளே
மனிதன் சொல்வது
மனித ஆசைகளே
மனிதன் வெளியிடுவன
மனித உணர்வுகளே
மொழிகளின் ஒலிகள்
வேறு வேறு ஆயினும்
உள்ளுறை ஒன்றே!
மனித உயிர்ப்புகளே!
மனிதப் பிரச்சினைகள்
என்றும் எங்கும்
மனிதப் பிரச்சினைகளே
அவற்றிற்கு
சுயநல நோக்கில்
குறுகிய விளக்கமளித்து
மனிதனைக்
குறுக்கு மறுக்காய்
இழுக்காதீர்
மனிதனுக்கு மனிதனை
விரோதி யாக்காதீர்
மனித வீதியில்
மொழி வட்டங்கள் போட்டு
மதச் சுவர்கள் எழுப்பி
கூறு கூறாய் நின்று
அரசியல் நடத்தாதீர்
இன வெறி யூட்டி
எரிகிற நெருப்பில்
எஞ்சியதைப் பிடுங்காதீர்
கருவிகளைக் கருத்தா வாக்கி
கருத்தாவை இம்சிக்காதீர்
கருவிகளால் முகத்தை மூடி
மகத்தான மனிதனை
மறைவாகக் கொல்லாதீர்
அரசியல் வேசிகளே
மனிதனுயிருந்து
மனிதனை நேசித்து
மனிதனுக வாழ
மனிதனை விட்டு விடுங்கள்!

—யோ. பெனடிக்ற்பாலன்

நன்றி: வீரகேசரி (22-4-1979)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரா சமாதானமா?

## இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் : போரா? சமாதானமா?
"யுத்தயத சாமயத?" என்ற சிங்கள நூலின் தமிழாக்கம்
வெளியீடு : விடுதலை தரும ஒன்றியம்,
2/294, நீர்கொழும்பு வீதி, நிட்டம்புவை.
அச்சு : அரசாங்க லிகிதர் சேவைச் சங்க அச்சகம்,
90, சேர். சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை,
கொழும்பு – 2.
முதற் பதிப்பு : நவம்பர் 1982
விலை : ரூபா 5/-

Title : **PORA SAMADANAMA?**
(War or Peace)
Tamil Translation of "Yuddayada Samayada?"
Publishers : Vimukti Dharma Kendraya,
2/294, Negombo Road, Nittambuwa
Printers : G. C. S. U. Press
90, Chittampalam A Gardiner Mawatha,
COLOMBO – 2.
First Edition : NOVEMBER 1982
Price : RS. 5/-

அ. லி. சே. ச. அச்சகம் 3509/82

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இலங்கையின் அண்மைக்கால வரலாற்றில் இனவாதம் தேசிய மட்டத்தில் பல இழப்புகளை ஏற்படுத்தி வருகின்றது. அடிப்படையில் சிங்கள - தமிழ் மக்களுக்கிடையேயான உறவுகள் அல்லது தேசிய இனப்பிரச்சினை இலங்கை சமூகத்தின் பாரிய பிரச்சினைகளுள் ஒன்றாகும். பிரித்தானிய காலனித்துவ வாதிகள் பரவலாகவும் ஆழமாகவும் இலங்கையில் இனவாதத்திற்குத் தூபமிட்டனர். அத்துடன் இனவாதமானது நவகாலனித்துவ குறைவிருத்தி முதலாளித்துவ அமைப்பால் பேணி வளர்க்கப்பட்டது. இவை மிகவும் பிரபல்யமானவை. எனவே சமூக நீதி சமத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட சமூக அமைப்பைக் கட்டியெழுப்பும் வரை இன ரீதியான மோதல்களை முழுமையாக இல்லாதொழிக்க முடியாது. எனினும் தேசிய இனப் பிரச்சினையின் ஆரம்பத்தையும் அதன் உண்மை வடிவங்களையும் புரிந்து கொள்வது இப் பாரதூரமான பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஆரம்ப நடவடிக்கையாகும். அது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எடுக்கப்படும் முதல் நடவடிக்கையுமாகும்.

தேசிய இனப்பிரச்சினை மிகச்சிக்கலானதும் பல்வேறு பிரச்சினைகளுடன் தொடர்புள்ளதாயும் உள்ளதனால் இதனைப் புரிந்து கொள்வது மிகக்கடினமானதாகும். அது, ஒரு தேசிய இனம் மற்றொன்றை இம்சைப்படுத்துவதையோ அல்லது இம்சைப்படுத்தப்படும் தேசிய இனம் சகல இம்சைகளையும் பொறுமையோடு சகித்துக்கொள்வதையோ பற்றிய விடயமல்ல. இலங்கையினது தொன்மைக்கால வரலாறு முழுவதும் சிங்களப் பெரும்பான்மையினர் தமிழ் சிறுபான்மையினரைப் போல இந்த மோதல்களினால் பல இழப்புகளுக்கும் நஷ்டங்களுக்கும் ஆளாகினர். இவ்விழப்புகளுக்

கும், பலாத்காரங்களுக்கும் இரு தேசிய இனங்களுமே பொறுப்பு என்பதை இருபாலருமே ஒத்துக்கொள்ளவேண்டும்.

ஆனாலுங் கூட அண்மைக்காலத்தில் நடந்த இனக்கலவரங் கள், மோதல்கள் காரணமாக தமிழ் மக்களே பெரும் இழப்புகளுக் கும், துன்புறுத்தல்களுக்கும் ஆளாகியுள்ளனர் என்பதை நாம் ஏற்றே ஆகவேண்டும். அதே சமயம் தமிழ் மக்களை இம்சித்துத் துன்புறுத்திய முழுப்பொறுப்பையும் சந்தேகத்திற்கு இடமின்றி குறிப்பாக சிங்கள ஆட்சியாளர்களே ஏற்க வேண்டும். எனவே தமிழ் மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள அநீதி, ஒடுக்குமுறை என்பவற்றை அகற்றி அவர்களின் நியாயமான உரிமைகளை உடனடியாக வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதே நேரத்தில் சிங்கள தமிழ் மக்கள் எதிர் நோக்கும் அநீதிகளையும் முரண்பாடுகளையும் அகற்றுவதற்கு நீண்ட கால வேலைத் திட்டம் ஒன்றையும் ஆரம்பிப்பது மிக அவசியமானதாகும்.

இனவாதிகள் பிரச்சாரம் செய்துள்ள இரண்டு கட்டுக்கதைகளையும் பற்றி மிகச் சுருக்கமாக வேனும் குறிப்பிடுவது மிக அவசியமானதாகும். "இலங்கை ஒரு பௌத்த சிங்கள நாடு. சிறுபான்மை இனங்களையும் சமயங்களையும் சார்ந்தவர்கள் வேறு நாடுகளில் இருந்து இந்நாட்டிற்கு வந்து இலங்கையின் அபிவிருத்திக்கு குந்தகம் விளைவிக்கின்றனர்." என்பது முதலாவது கட்டுக்கதையாகும். இதற்குச் சான்றாக மகாவம்சம் போன்ற ஆவணங்களை முன்வைக்கின்றனர். ஆனால் இந்த ஆவணங்களைக் கூட ஸ்தூல நிலைமைகளுக்கேற்ப ஆராய்ந்தால் வேறு விதமான கதையே வெளியாகும். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் போன்ற காலனித்துவவாதிகள் இலங்கையின் முன்னேற்றத்திற்கு இடையூறு செய்தது உண்மையாகும். ஆனால், தமிழர்கள் - முஸ்லிம்கள் என்போரைப் பொறுத்தவரை இக் குற்றச் சாட்டுகள் முற்றிலும் நியாயமற்றவையும் தவறானவையுமாகும்.

"இலங்கையின் வரலாறு என்பது தனி ஒரு தேசியத்தினது (Nation) வரலாறு அல்ல, மாறாக சிங்களம் தமிழ் ஆகிய இரண்டு தேசியத்தினது வரலாறுகளாகும்." என்பது இரண்டாவது கட்டுக்கதையாகும். பண்டைக் காலந்தொட்டு இவ்விரண்டு தேசியங்களும் வெவ்வேறாக வாழ்ந்ததாகவும் இலங்கையில் இரு வேறு இராஜதானிகளில் வாழ்ந்தனர் என்றும், அவர்களிடையே தொடர்ச்சியாக மோதல்கள் நிகழ்ந்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. இக் கட்டுக்கதையை தகர்த்தெறியும் சாட்சிகளும் சான்றுகளும் அவர்கள் எடுத்துக் கூறும் வரலாற்றிலேயே உள்ளடங்கி உள்ளன.

எமது வரலாற்றின் ஊடாக தேசிய இனங்களுக்கிடையேயான உறவுகள் எவ்வாறு பரிணாமமடைந்தன? காலனித்துவ ஆட்சியுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோன்றிய இனவாதத்தின் சமூக அரசியல் செயற்பாடுகள் எத் தகையவை? என்பன பற்றி "போரா? சமாதானமா?" என்ற நூல் ஆராய்கின்றது. மறுபுறம் இனவாதிகள் பொது மக்களின் உள்ளங்களை மாசு படுத்தியிருக்கும் நம்பிக்கைகளையும் அரை குறை உண்மைகளையும் இந் நூல் அம்பலப்படுத்துகின்றது. தேசப் பற்றுள்ள முற்போக்கு அமைப்புகள் தனி நபர்கள் மீது சுமத்தப் பட்டுள்ள இன்றைய யுகத்தின் பாரிய சமூகத் தேவையை இந் நூல் வடிவில் வெளிக்கொணர முடிந்துள்ளது.

இந் நூல் இரண்டு பகுதிகளைக் கொண்டது. எமது பண்டைக் கால வரலாறு முதல் 1948 வரை சிங்கள - தமிழ் தேசிய இனங்களின் உறவுகள் - மோதல்கள், அவற்றிற்கான சமூக அரசியல் பின்னணி என்பன முதல் பகுதியில் அராயப்படுகின்றது. இலங்கை 'சுதந்திரம்' அடைந்த பின்னர் அல்லது நவகாலனித்துவ யுகத்தில் இனவாதம் இலங்கையின் சகல மூலை முடுக்குகளிலும் எவ்வாறு வேரூன்றியது? பல்வேறு ஆட்சியாளர்களும் அரசாங்கங்களும் எடுத்த நடவடிக்கைகள் காரணமாக இனக்கலவரங்கள் இன மோதல்கள் எவ்வாறு உக்கிரம் அடைந்தன? இலங்கையின் மாக்சிஸ இயக்கமும் முற்போக்கு அமைப்புகளும் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எவ்வாறு முயன்றன? என்பன நூலின் இரண்டாம் பகுதியில் ஆராயப்படுகின்றன. டட்லி - செல்வா ஒப்பந்தம், பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம், தமிழரசுக் கட்சியின் கொள்கைப் பிரகடனம், தமிழர் விடுதலைக் கூட்டணியின் 1977ம் ஆண்டுத் தேர்தல் விஞ்ஞாபனம், பல்வேறு முற்போக்கு இயக்கங்கள் தேசிய இனப்பிரச்சனை சம்பந்தமாக வெளியிட்ட கூட்டுப் பிரகடனங்கள்" என்பன இப்புத்தகத்தின் பின்னிணைப்புகளாக வெளியிடப்பட்டுள்ளன.

இப்புத்தகம் பலரது கூட்டு முயற்சியின் பெறு பேறுகும். இப் புத்தகத்தை தொகுப்பதெற்கென நடத்தப்பட்ட கலந்துரையாடல்களுக்கு பல்வேறு அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கு பற்றினர். ஆரம்பத்திலிருந்து புத்தகமாக முற்றுப் பெறும் வரை உதவிய அமைப்புகளுள், இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கம், அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம், ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பதற்கான இயக்கம், மாவத்தை பிரசுரிப்பாளர்கள், சமூக சமய ஒன்றியம், கிறிஸ்தவ மாணவர் இயககம், தேவசரண அபிவிருத்தி ஒன்றியம், 'பெண்ணின் குரல்' அமைப்பு, என்பவற்றை இங்கு குறிப்பிடாதிருக்கமுடியாது.

**விடுதலை தரும ஒன்றியம்**

2/294, நீர்கொழும்பு வீதி,
நிட்டம்புவை.
1982 மே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாவது அத்தியாயம்

## இலங்கையின் தேசிய இனப்பிரச்சினை பற்றிய சுருக்கமான வரலாறு

### வடக்கு மனிதனும் தெற்கு மனிதனும்

ஏன் இப் பிரிவு?
ஏன் இக் குரோதம்?
சிங்களன் என்றும், தமிழன் என்றும்
சிறந்த முஸ்லிம் நானே என்றும்
ஏன் உமைப் பிரித்தீர்?

வடக்கிலிருந்து வந்துள மனிதா!
தெற்கிலிருந்து திரும்பிய மனிதா!
கிழக்கிலிருந்து தோன்றிய மனிதா!
கேளீர்! இதனைக் கேளீர்!! இதனை.

வடக்கேயிருந்து வந்துள உனக்கும்
தெற்கேயிருந்து திரும்பிய உனக்கும்
கிழக்கேயிருந்து தோன்றிய உனக்கும்
கிளர்ந்துள்ள பிரச்சினை ஒன்றே! ஒன்றே!!


நீங்கள் மூவரும் உழைக்கும் மக்கள்
நீங்கள் மூவரும் கஷ்டப்படுவோர்
நீங்கள் மூவரும் துயர முடையீர்!
நீங்கள் மூவரும் துன்பம் என்ற
வாடைக் காற்றிற் துவண்டுளீர் அறிவீர்!

காலையிற் கழனியில் இறங்கி உழைத்தும்
கடற் கரை சென்றே கனமீன் கொணர்ந்தும்
ஆலைகள் தோறும் வியர்வை உருத்தும்
ஐய! நீர் மூவரும் கண்டது என்ன?

மூவருக்கும் உழைப்பும் ஒன்றே
மூவருக்கும் பிரச்சினை ஒன்றே
மூவரும் உங்கள் எதிர் காலத்தையும்
மூவரும் நும் மக்கள் எதிர் காலத்தையும்
எண்ணி எண்ணி ஏங்குகிறீர்; அறிவேன்.

● மௌன குரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த காலம் முதல் எமது நாட்டில் தேசிய இனங்கள் மத்தியில் இடையிடையே மோதல்கள் ஏற்பட்டு வருகின்றன. இத்தகைய சம்பவங்களால் எந்தவொரு தேசிய இனத்திற்கும் நன்மை ஏற்படப்போவதில்லை. இம்மோதல்கள் தன்னிச்சையாக நடைபெறவில்லை; குறிப்பிட்ட செயல் முறையின் அல்லது உருவாக்கத்தின் விளைவாகும். எப்படியிருப்பினும், அது பாரதூரமான தேசியப் பிரச்சினையாக உருவாகியிருப்பதால் இதற்கு நாம் தீர்வு கண்டேயாக வேண்டும். இப் பிரச்சினையைத் தீர்ப்பதாயின் இதன் இயல்பை புரிந்து கொள்ள வேண்டும். வரலாற்றுக் காரணிகளை உள்ளபடியே எடுத்தால் தவருன முடிவுகளை எடுக்க நேரிடும். ஏனெனில் எமது வரலாறு பல குறைபாடுகளுடன் எழுதப்பட்டிருப்பதே இதற்குக் காரணமாகும். அந்நிய ஆக்கிரமிப்புகளின் பின் குறிப்பாக ஆங்கிலேய ஆட்சியாளரின் நன்மை கருதி எமது வரலாறு திரிபுபடுத்தி எழுதப்பட்டுள்ளது. பிரித்தானியருக்குச் சாதகமான முறையிலேயே அது திரிபுபடுத்தப்பட்டுள்ளது. எவ்வாருயினும் வரலாறு தொடர்பான தகவல்களை நாம் வரலாற்றிலிருந்தே தேடிக்கொள்ள வேண்டும். அதில் திரிபுபடுத்தப்பட்ட தகவல்களை புறக்கணித்து, உண்மையான விஞ்ஞான ரீதியான தகவல்களையே நாம் பயன்படுத்த வேண்டும். வரலாற்றை எழுதியோரை நாம் குறை கூறவில்லை. வரலாற்று ஆசிரியர்கள் அன்றைய நிலைமைகளுக்கு ஏற்ப தமது பணியைச் செய்துள்ளனர்; எமது பிரச்சினையை தீர்ப்பதற்குப் பொருத்தமான பகுதிகளை நாம் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நாட்டில் வாழும் தேசிய இனங்களுள் தூய்மையான இனம் என்று கூறிக்கொள்ள எந்தவொரு இனத்திற்கும் விஞ்ஞான ரீதியான அல்லது வரலாற்று ரீதியான சான்றுகள் இல்லை. இலங்கையின் பூர்வீகக் குடிகள் வாழ்ந்த ஆரம்ப கால கட்டத்தில் வெளிநாட்டவர் பலர் இங்கு வந்துள்ளனர்; விஜயன் அவர்களில் ஒருவன். விஜயனின் வருகை இலங்கை வரலாற்றின் முக்கிய சம்பவம் என மகாவம்சம் கூறுகின்றது. ஆனால் விஜயனின் வருகைக்கு முன்பும் பின்பும் பல்வேறு வகையான மக்கள் பிரிவினர் இலங்கைக்குக் குடிபெயர்ந்துள்ளனர். விஜயனின் வழித்தோன்றல்கள் நீண்ட காலமாக இலங்கையில் வேரூன்றவில்லை என மகாவம்சம் கூறுகின்றது. இது உண்மையாகவோ அல்லது பொய்யாகவோ இருந்தாலும் கூட இந்நாட்டில் வாழ்ந்த மக்களுடன் இரத்த உறவு ஏற்பட்ட பல இனங்கள் இடையிடையே இலங்கைக்கு வருகை தந்ததை நாம் மறுக்க முடியாது. எனவே எமது நாட்டு வரலாற்றில் குறிப்பிட்டதொரு தேசிய இனத்தின் வரலாற்றுக் காரணிகள் எஞ்சியிருந்தால், அது கலப்பு இனங்களின் வரலாருகவே இருத்தல் வேண்டும். அல்லது குறிப்பிட்ட தூய்மையான இனத்தின் வரலாருக இல்லாமல் கலப்பு இனங்களுள் வளர்ச்சியடைந்த இனத்தின் தகவல்களே ஆகும். எனவே எமது வரலாற்றுக் கதைகள் முக்கியமான வரலாற்றுத் தகவல்களை வெளியிட்டாலும் இவை ஒன்றிற்கும் தூய்மையான இனத்தின் வரலாற்றை எடுத்துக் கூற முடியாது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. குறிப்பிட்ட ஓர் தேசிய இனத்திற்கு ஒரு மொழியும், அம்மொழியில் எழுதப்பட்ட நூல்களும், தேசிய சின்னங்களும் இருக்கும் ஒரே காரணத்தால் கலப்பற்ற தூய்மையான தேசிய இனம் உருவாக மாட்டாது. எனவே, நாம் இனவாதத்தைப் புரிந்து கொள்வதாயின் முதலில் 'தூய்மையானது' என்று குறிப்பிடத்தக்க வளர்ச்சியடைந்த ஒரு தேசிய இனமும் கிடையாது, என்பதை ஏற்றேயாக வேண்டும். ஒருபுறம் கலப்பற்ற அல்லது 'தூய்மையான' தேசிய இனம் எனக் குறிப்பிடத்தக்க ஒரு தேசிய இனமும் உலகில் கிடையாது. மறுபுறம் இன்று வளர்ச்சி அடைந்த தேசியம் (Nation) உருவாகியுள்ள அடிப்படையே இந்த இனங்களின் கலப்பினுலாகும். எனவே எந்தவொரு தேசிய இனமும் மற்றுமோர் தேசிய இனத்தைவிட மேன்மையானதல்ல.

தென்னிந்தியாவின் ஊடாக விஜயன் இலங்கைக்கு வருகை தந்த போது இங்கு மக்கள் வாழ்ந்தனர் என்பதும் ஓர் ஆட்சி முறை நிலவியது என்பதும் பிரபல்யமானது. அன்று வாழ்ந்த மக்கட் கூட்டம் 'இயக்கர்' என்ற பூர்வீகக் குடிகளாவர். விஜயன் இலங்கைக்கு வந்து அன்றைய ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த குவேனி என்ற பெண்ணைத் திருமணம் செய்து கொண்டான். திருமணத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின் பின்னர் 'இயக்கர்'களின் ஆட்சி அதிகாரத்தையும் கைப்பற்றி ஞன். பின்னர் குவேனியையும் தனக்குப் பிறந்த இரண்டு பிள்ளை களையும் துரத்திவிட்டு தென்னிந்தியாவில் இருந்து வரவழைக்கப் பட்ட ஓர் அரசிளங்குமரியை மணந்தான். அவர்களுக்கு குழந்தை கள் பிறக்காத காரணத்தால் விஜயன் தனது மருமகனை 'பண்டு வாசனை' தென்னிந்தியாவிலிருந்து வரவழைத்தான். 'பண்டு வாச'வின் மணமகளும் தென்னிந்தியாவிலிருந்தே வரவழைக்கப் பட்டாள். இவ்வரச குமரியுடன் இலங்கைக்கு வந்த அவளது ஏழு சகோதரர்கள் எமது தீவின் பல பாகங்களில் தலைவர்களாக நிய மிக்கப்பட்டனர் என்பதும் வரலாறு கூறும் உண்மையாகும். அதன் பின்னர் இலங்கையின் அரச பரம்பரை இந்தியாவில் இருந்து வர வழைக்கப்பட்டோரை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப் பட்டது. அன்று இலங்கையில் சுதேசிகள் வாழ்ந்தனராயினும் இந்தி யாவிலிருந்து வரவழைக்கப்பட்டோரும் கலந்தே பிற்பட்ட காலத் தில் 'சுதேசிகள்' உருவாகினர் என்று கூறினல் தவருக மாட்டாது. இத்துடன் மற்றுமோர் சம்பவமும் நடந்தது. ஆளும் வர்க்கத்தின் உறவினர்கள் இலங்கைக்கு வருகை தந்தனர். அது மாத்திரமல்ல எமது நாட்டின் வரண்ட வலயத்திலுள்ள ஆற்றுப் பள்ளத்தாக்கு களில் கட்டியெழுப்பப்பட்ட சிற்றரசுகளின் அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கு உதவுமுகமாக பல்வேறு தரத்திலான சிற்பிகளும் தொழில் நுட்பக் கலைஞர்களும் வேறு பலரும் இலங்கைக்கு வர வழைக்கப்பட்டனர். இவ்வாறு குடிபெயர்ந்தோரின் உதவிகளை யும் பெற்று இலங்கை புதிய உருவில் அபிவிருத்தியடையத் தொடங்கியது.

இக் கால கட்டத்தில் இரு நாடுகளுக்கும் இடையே வியா பாரத் தொடர்புகளும் இருந்து வந்தன. அனுராதபுரத்திற்கு எதிரான முதலாவது ஆக்கிரமிப்பு தென்னிந்திய வியாபாரத் தலை வர்களாலேயே மேற்கொள்ளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாக்கிரமிப்பாளர்கள் இலங்கையின் செழிப்பான பிரதேசங் களை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக் கொண்டு இலங்கையி லேயே குடியேறினர். பிற்பட்ட காலத்தில் இப்போராட்டங் களுக்கு இரு பகுதிகளையும் சார்ந்த ஆட்சியாளர்களும் தலையிட்ட னர். ஒரு சமயம் இலங்கை ஆட்சியாளர்களின் உதவியைப்பெற் றுள்ளனர். இத்தகைய சந்தர்ப்பங்களில் உள்நாட்டவர்களை இந்தி யர்களிடமிருந்து பிரித்தறிதல் கஷ்டமாயிருந்தது. அவ்வளவு தூரத்திற்கு இரு இனங்களும் ஒன்று கலந்திருந்தனர் என்று கூறு வது மிகைப்படுத்திக் கூறுவதாக அமையமாட்டாது. அதுமாத்திர மன்றி இச் சந்தர்ப்பத்தில் அவ்வாறு ஆராய்வது ஒருவருக்கும் அவசியப்படவுமில்லை, என்பது வரலாற்று உண்மையாகும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிவிருத்தி செய்தோர் யார்?

வரலாற்றின் ஆரம்ப யுகத்தில் பல்வேறு அலும் குழுக்கள் இருந்தன; இக் குழுக்களிடையே உள்நாட்டவர் - வெளிநாட்டவர் ஆகிய இரு பகுதியினரும் இருந்தனர், என்பதை வரலாறு எமக்கு எடுத்துக்காட்டுகின்றது. இந்த ஆட்சியாளர் யாராக இருந்தாலும் நாட்டை அபிவிருத்தி செய்வது அவர்களது குறிக்கோளாயிருந்தது. எனவே, ஆரம்ப கட்டத்தில் தென்னிந்தியாவில் இருந்து இலங்கையில் குடிபெயர்ந்தவர்களும் இலங்கையின் அபிவிருத்திக்காக உழைத்தனர். வாவிகள், குளங்கள், அணைகள் என்பவற்றை நிருமாணிப்பதற்கும் வயல்களில் விளைச்சலை ஏற்படுத்தவும் இவர்கள் அனைவரும் ஒத்துழைத்தனர். இலங்கைக் கலாச்சாரத்தின் முக்கிய சின்னங்களான டகோபாக்கள், சிலைகள், சிற்பங்கள், மாளிகைகள் என்பன நிருமாணிப்பதற்கும் கூட்டு உழைப்புச் சக்தி ஈடுபடுத்தப்பட்டது. இது நிலப்பிரபுத்துவ அமைப்பின் ஆரம்பக் கட்டமாகவும் இருந்தது. விவசாயிகள் தாழ்ந்தோராகவே கருதப்பட்டனர். விவசாயிகளும் ஏனைய உழைப்பாளிகளும் அரை - அடிமைகளாகவே கணிக்கப்பட்டனர் எஜமானர் என்றழைக்கப்பட்ட சலுகைகள் பெற்ற வர்க்கமே உழைப்பாளிகளின் உழைப்பின் பயனைப் பெற்றனர். கலப்பு இனங்களாலான பொது மக்களுக்கு உரிமைகள் இருக்கவில்லை கலப்பு இனங்களாலான உடைமை வர்க்கத்திற்கே உரிமைகள் இருந்தன. அன்று இனவாதம் தலையெடுக்கவில்லை. வர்க்க பேதம் மாத்திரமே நிலவியது.

## சிங்கள - தமிழ் உறவு முறைகள்

வர்க்க பேதம் நிலவிய இக் கட்டத்தில் சிங்கள - தமிழ் உடைமை வர்க்கத்தினர் மத்தியிலும், சிங்கள - தமிழ் பொது மக்கள் மத்தியிலும் உறவு முறைகள் நிலவின. திருமணங்கள் மூலமே இவ்வுறவு முறை வலுவடைந்தது. சாதாரண மக்களைச் சுரண்டுவதற்கு உடைமை வர்க்கத்தின் கையில் அதிகாரம் இருப்பது அவசியமானது. இதன் பொருட்டு நடைபெற்ற அரசியற் போராட்டத்தில் இனவாதம் செல்வாக்குச் செலுத்தவில்லை. இனவாதத்திற்குப் பதிலாக என்ன நடந்தது? சாக்கிய வமிசத்துடனும் புத்தபகவானுடனும் உறவுமுறைகளைக் கொண்டாடிய அரச குடும்பத்தினர் இந்தியத் தமிழ் அரசிளங்குமாரிகளை திருமணஞ்செய்தனர். இந்திய சைத்திரிய அரசகுமாரிகளையோ அல்லது இலங்கையின் சிங்கள - பௌத்த அரச குமாரிகளையோ திருமணஞ் செய்யாதது குறித்து எவரும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. பௌத்த குருமார் அல்லது சிங்கள பௌத்தர்கள் இதனை எதிர்த்து பேசவோ அல்லது எழுதவோ இல்லை என்பதை வரலாறு எடுத்துக் கூறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயபாகு, மகா பராக்கிரமபாகு காலத்திலிருந்து இலங்கையின் கடைசி அரசன் வரை இத்தகைய கலப்புத் திருமணங்கள் சாதாரண நிகழ்ச்சிகளாகும். இத் திருமணங்களால் ஏற்பட்ட உறவு முறைகள் காரணமாக தமிழ் அரசகுமாரிகளின் உறவினர்களுக்கு பிற் காலத்தில் ஆட்சி அதிகாரமும் உரிமையானது. தமிழர் என்ற காரணத்திற்காக எவரும் இதனை எதிர்க்கவில்லை. அனுலா என்னும் அரசி தனது தமிழ் காதலனை ஆட்சிபீடத்திற்கு நியமித்தாள்.

அரச குடும்பங்களிடையே மாத்திரமல்லாது சாதாரண மக்கள் மத்தியிலும் கலப்புத் திருமணங்கள் நடந்தன. ஒரு சமயம் நிஸ்ஸங்க மல்லவ என்ற அரசன் கலப்புத் திருமணங்களைத் தடை செய்து அரச கட்டளையொன்றைப் பிறப்பித்தான். இனத் துவேஷம் காரணமாக இக் கட்டளை பிறப்பிக்கப்படவில்லை. தனது ஆட்சி அதிகாரத்தை நிலைநாட்டுவதற்கான அரசியல் லாபம் கருதியே இப்படி செய்யப்பட்டது. இவ்வாறு அரசன் ஆணையிடுமளவிற்கு நிலைமை இருந்திருந்தால் கலப்புத் திருமணங்கள் எவ்வளவு பரந்த அடிப்படையில் நடந்திருக்க வேண்டும் என்பதை ஊகிக்க முடியும். ஆனல் மேற்படி அரச கட்டளை காரணமாக மக்கள் மத்தியில் ஒற்றுமையின்மை ஏற்படுவது இயல்பானது. இதனுல் நாட்டின் சாமாதானத்திற்கும் அபிவிருத்திக்கும் பங்கம் ஏற்பட்டிருக்கும். நிஸ்ஸங்க மல்லனின் வரலாற்றை எடுத்து நோக்கும் போது இத்தகைய நடவடிக்கை எடுத்ததையிட்டு ஆச்சரியப்படுவதற்கில்லை.

## சிங்கள - தமிழ் கலாச்சாரங்களுக்கிடையேயான ஒற்றுமை

ஒரே நாட்டில் இணைந்து வாழும் இனங்களின் கலாச்சாரங்களிடையே பரஸ்பரம் செல்வாக்கு ஏற்படுதல் இயல்பானது. இன்றும் வடமத்திய மாகாணத்தின் சில கிராமங்களில் வாழும் மக்கள் உபயோகிக்கும் மொழியில் தமிழ் சொற்கள் அதிகமாக வேரூன்றி உள்ளன. 'கதிராத்தே', 'சிலம்புரால' போன்ற பெயர்கள் தமிழ் மொழியில் இருந்து சிதைந்து வந்து இன்று சிங்களச் சொற்களாகி உள்ளன, என்று எண்ண இடமுண்டு. இக் கிராமங்களின் மூதாட்டிகள் இன்றும் தென்னிந்தியப் பெண்களைப் போல அல்லது இலங்கையின் தமிழ் பெண்களைப் போல் சேலை அணிகின்றனர். அவர்கள் அணியும் ஆபரணங்கள் தமிழர்களின் ஆபரணங்களை ஒத்தவை. வீடுகளில் பாவிக்கப்படும் சில பொருட்கள் யாழ்ப்பாணத்துப் பொருட்களுக்குச் சமமானவை. சாதாரண வாழ்க்கையிலும் இச் செல்வாக்கைக் காணமுடியும். அவற்றை அவர்களின் 'சிங்கள வாழ்க்கையிலிருந்து' பிரிக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோட்டை யுகத்தில் இரு இனங்களையும் சார்ந்த ஆளும் வர்க்கங்களிடையேயான தொடர்புகள் மேலும் வலுவடைந்தன. ஆறும் பராக்கிரமபாகு மன்னர் சிங்களவரா? சிங்களவராக இருந் தாலும் இல்லாவிட்டாலும் அவர் சிங்களவர்களின் அரசராவர். செண்பகப் பெருமாள் அல்லது சப்புமல் குமாரன் என்னும் தமிழ் அரச குமாரனே அவரது மகனாக வளர்ந்தான். இவரையே மகா கவி ஸ்ரீ ராகுல அடிகள் 'பலம் வாய்ந்த சேனாதிபதியாகிய சப்புமல் குமாரன் வரும்' என்று குறிப்பிட்டுள்ளார். லோகநாத்தா அல்லது உலக்குடைதேவி இவ் அரசனின் மகளாவார். அவளது கணவனான நன்னூர் துணையார் தமிழ் அரசகுமாரனவார். இந்த உலக்குடைத் தேவிக்கு ஒரு மகனைத் தருமாறு வேண்டியே ராகுல அடிகள் 'பூவை விடு தூது' என்னும் காவியத்தை விபீஷணனுக்குப் பாடினார். இத் தமிழ் – சிங்கள உறவை எவரும் எதிர்க்கவில்லை. இக் கால கட்டத்தில் மொழி – இலக்கியம் – கலை – கலாச்சாரம் என்னும் துறைகளில் கலப்புத் தன்மை ஏற்பட்டதாயினும் தனித்துவமும் பாதுகாக்கப்பட்டது. தேவைக்கு ஏற்பவும் சுதந்திரமாகவுமே தமிழ் செல்வாக்கு ஏற்பட்டது. எனவே ஒவ்வொரு கலாச்சாரமும் 'தமது தனித் தன்மையையும்' பாதுகாத்துக் கொண்டன. கலாச் சார விருத்திக்கும் இது காரணமாக அமைந்தது.

இலங்கையில் ஆட்சிபீடம் ஏறிய தமிழ் அரசர்களில் பெரும் பான்மையினர் சிங்கள பௌத்தர்களின் கலாச்சாரத்தையும் சம் பிரதாயங்களையும் போற்றிப் பாதுகாத்தனர். சில சந்தர்ப்பங்களில் சிங்கள – பௌத்த அரசர்களாகவும் செயற்பட்டனர். ஆங்கிலே யர்கள் எமது நாட்டைக் கைப்பற்றிய பின்னர் 1817–ஆம் ஆண்டு நடைபெற்ற கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கிய சிங்களவர் 'துரை சாமி' என்னும் தமிழ் பெயரிலேயே தலைமை தாங்கினர். தலைமை தாங்குவதற்கு இத் தமிழ் பெயர் அவருக்குப் பிரயோசனப்பட்டது. இனவாத உணர்வு இருந்திருந்தால் இவ்வாறு நடந்திருக்காது.

## புத்தர் பெருமான் - கடவுள் வழிபாடு

வழிபாடு எமது கலாச்சாரத்தில் முக்கிய இடத்தை வகிக்கின் றது. 'தெவியன் புதுன்' (கடவுள் – புத்தர் பெருமான்) என்ற சொல்லாட்சி பௌத்த சிங்கள மக்கள் மத்தியில் இன்றும் நிலவு கின்றது. பௌத்த மதம் பிறந்த பாரதத்தில் இந்து சமயத்தால் பௌத்தம் விழுங்கப்பட்டுவிட்டது. ஆனல், எமது நாட்டின் நிலை மைகளுக்கு ஏற்ப, இவ்விரண்டு சமயங்களும் பல நூறு ஆண்டு களாக சமாதான சக வாழ்வுடன் நிலைத்துள்ளன. இலங்கையின் செல்வாக்கு காரணமாக தென்னிந்தியாவில் பௌத்த விகாரைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியெழுப்பப்பட்டன. தமிழின் செல்வாக்குக் காரணமாக விஷ்ணு, பிள்ளையார் ஆகிய தெய்வங்களுக்கு கோவில்கள் உருவாகின. வழிபாட்டு முறைகள் எவ்வளவு தூரம் கலந்தன என்று கூறினால், பௌத்த பஞ்சாலைகளில் விஷ்ணு, கந்தன் ஆகிய தெய்வங்கள் உட்புகுந்தன. இது தமிழ் ஆக்கிரமிப்பு என எவரும் கருதவில்லை.

இரண்டறக் கலந்து ஒன்றிணைந்து வாழும் இரு வேறு மக்கள் பிரிவினர் இடையே பரஸ்பரம் மதிப்பு ஏற்படுகின்றது. இது அவர்களது வழிபாட்டு முறைகளிலும் நெருக்கமான இணைப்பை ஏற்படுத்துகின்றது. எனவே சிங்கள பௌத்தர்கள் தமிழ் மக்களின் தெய்வங்களுக்கு உரிய மரியாதையைச் செலுத்தினார்கள். சில பிரதேசங்களிலுள்ள தெய்வங்கள் பௌத்த வாழ்க்கை முறையுடன் நெருக்கமாக இணைந்தன. வடமத்திய மாகாணத்தின் பிள்ளையார் ஆலயங்களுக்கு இன்றும் மிக உயர்ந்த மதிப்பு அளிக்கப்பட்டு வருகின்றது. ('அய்யநாயக்க' என்று சிங்களத்தில் அழைக்கப்படும்) ஐயனார் தெய்வம் வன்னி மக்களின் வணக்கத்துக்குரியவர். கதிர்காமக் கந்தனை சிங்கள பௌத்தர்கள் –தமிழ் இந்துக்கள் ஆகிய இரு சாராரும் வழிபடுகின்றனர். 'கலே பண்டாரா', 'ஹிட்டி பண்டாரா' ஆகிய பிராந்தியத் தெய்வங்களும் வழிபாட்டுக்குரியவை. பஞ்சாலையை முதன்மை ஸ்தானத்தில் வைத்து வழிபடும் சிங்கள கிராம மக்களுக்கு கோவிலும் மிக முக்கியமானது.

சிவனொளிபாதம் பல்வேறு மதத்தினராலும் இனத்தினராலும் வழிபடப்படும் வழிபாட்டுத் தலங்களுள் ஒன்றாகும். இவ் வழிபாட்டு முறைகளைப்பற்றி விஞ்ஞான ரீதியான ஆய்வு நடத்துவதற்கு இது சந்தர்ப்பமல்ல ஆனால், இவற்றுடன் இணைந்த பண்பாட்டுத் தொடர்புகள் இன ஐக்கியம் பற்றிய விஞ்ஞான ரீதியான ஆய்வுக்கு முக்கியமானதாகும். இலங்கையின் சிங்கள – தமிழ் மக்கள் மதரீதியான சகவாழ்விற்கு சிறந்த முன்னுதாரணமாகத் திகழ்கின்றனர், என்று கூறினால் அது மிகைப்படுத்திக் கூறுவதாக அமையாது.

சுதந்திரம்

இவ்வாறு மத ரீதியாகவும் கலச்சார ரீதியாகவும் கலப்புத் தன்மை நிலவிய போதிலும், பௌத்தர் – இந்துக்கள் ஆகிய இரு சாராரும் தமது சுதந்திரத்தையும் தனித்துவத்தையும் பாதுகாக்க முடிந்தமை மிக முக்கிய விடயமாகும். தமிழ் மக்கள் சிங்கள பௌத்தர்களின் கலாச்சார சுதந்திரத்திற்கு என்றுமே இடையூறாக இருக்கவில்லை; தீங்கு விளைவிக்கவும் இல்லை. எனவே, பிரச்சினைகள் எழுவதற்கு இடமிருக்கவில்லை. தமது விருப்பத்திற்கு ஏற்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல தனி நபர்களும் தாம் விரும்பிய நம்பிக்கையை செயற்படுத்தும் உரிமையையும் சந்தர்ப்பத்தையும் பெற்றனர். பிறர் மீது மதத்தை பலவந்தமாக திணித்தல் என்றுமே பௌத்த – இந்து சம்பிரதாய மாக இருக்கவில்லை.

ஐரோப்பிய காலனித்துவ வாதிகள் இலங்கையை ஆக்கிர மிக்கும் வரை சிங்கள – தமிழ் – முஸ்லிம் மக்களிடையே இனப்பிரச் சினை தோன்ற வில்லை. வெளிநாட்டு ஆக்கிரமிப்பாளர்களை எதிர்த்து தாய் நாட்டின் சுதந்திரத்திற்காக மேற்படி மூன்று இனங்களும் ஒன்றிணைந்து போராடி உள்ளன. வெளிநாட்டு ஆக்கிரமிப்புகளின் பின்னர் இலங்கையில் நிலவிய நிலப்பிரபுத்துவ சமூக அமைப்பு பாரிய மாற்றங்களுக்குள்ளானது, இதற்கு முன்னரும் இந்தியா வுடன் மோதல்களும் உறவுகளும் இருந்து வந்தன. இவை ஒன்றும் எமது பொருளாதாரத்தில் அல்லது கலாசாரத்தில் பா.ரிய மாற்றத் தை ஏற்படுத்தவில்லை.

எமது கடந்த கால வரலாற்றில் நிலவிய நிலைமைகளை கற் பதற்குப் பதிலாக சிலர் சிங்கள இனத்தின் மகிமையையும் சீரும் சிறப்பையும் பற்றிய யுகத்தைப் பற்றி அலட்டுகின்றனர். ஆனால் சாதாரண மக்களுக்கு இந்த சீரும் சிறப்பும் இருந்ததா என் பது பற்றி சிந்திக்கின்றார்கள் இல்லை. தேசம் என்ற வகையில் அபி மானத்தை ஏற்படுத்திய பல காரணிகள் இருந்தாலும், சிங்கள – தமிழ் பொது மக்கள் துன்பமான வாழ்க்கையையே நடத்தினர் என்பதை நாம் மறந்து விடலாகாது. சலுகைகளைப் பெற்ற வர்க் கங்களுக்கிருந்த சீரும் சிறப்பும் சாதாரண மக்களுக்கு இருக்கவில்லை. விவசாயிகளும் உழைப்பாளிகளும் ஒடுக்கபபட்டனர்; சிலர் அடி மை நிலையில் வாழ்ந்தனர் என்பது தான் உண்மை. முழு வாழ் நாளும் வயலில் உழைத்த ஒரு விவசாயி வயோதிப வயதில் பிச்சை எடுச்க நேர்ந்த கதையையே 'பூஜாவலிய' என்ற பிரசித்தி பெற்ற சிங்கள நூல் எடுத்துக் கூறுகின்றது. அன்றைய யாதார்த்தத்தை யே நாம் இதன் மூலம் அறியக்கூடியதாக உள்ளது.

## பௌத்த மறுமலர்ச்சி

பௌத்தர்களுக்கு பௌத்த மதம் ஒரு பண்பாட்டுச் சொத் தாகும். அதே நேரத்தில் வெளிநாட்டு ஆக்கிரமிப்புகளின் போது அவற்றை எதிர்த்துப் போராடுவதற்கான ஓர் அரசியல் ஆயுதமாக வும் பௌத்த மதம் பயன்பட்டது. வெளிநாட்டு ஆக்கிரமிப்பா ளர்களும் எமது நாட்டை அடக்குமுறைக்குள்ளாக்குவதற்கு பௌத்த மதத்தை பலவீனப்படுத்தும் உபாயத்தைக் கையாண்ட னர். பல நூற்றுண்டுகளாக வெளிநாட்டு ஆக்கிரமிப்புகளை எதிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கியபடியால் கண்டிப் பிரதேசத்தின் மனித வளமும், பொருளாதார வளமும் சீரழிந்தது. இக் காரணங்களால் கலாச்சார வாழ்வு பாதிக்கப்பட்டது. பௌத்த சாசனம் சீரழிவதற்கு அடையாளமாக பௌத்த மத குருமாருக்குரிய உப்பசம்பதாவ என்ற உயரிய சமயத் தீட்சையேனும் கிடைக்கவில்லை. இதனால் அவர்கள் வெறும் காவி உடை தரித்தவர்களின் நிலைக்குப் பின் தள்ளப்பட்டனர். நாடு அரசியல் ரீதியாகவும் கலாச்சார ரீதியாகவும் ஊசலாட்டங் கண்டது. இத்தகைய கால கட்டத்தில் பௌத்த மறுமலர்ச்சியை ஏற்படுத்துவது மிக முக்கியமானதாகும். பௌத்த மத குருமார் 'உப்பசம்பதாவ' நிலையை அடைதல் பௌத்த மறுமலர்ச்சிக்குக் காரணமாக அமைந்தது. தாய்லந்திலிருந்து 'உப்பசம்பதாவ' நிலையை எய்திய பௌத்த மத குருமாரை இலங்கைக்கு வரவழைப்பதற்கு கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்கன் என்ற தமிழ் அரசனே கைகொடுத்து உதவினான். வெலிவிட்ட சரணங்கர என்ற தலைமை பௌத்த மத குருவிற்கு சங்கராஜ பதவியை வழங்க நடவடிக்கை எடுத்தமையால், அன்று ஐரோப்பிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக சவால் விடுவதற்கு தேசிய கலாச்சாரம் ஒன்று மிஞ்சியது. அரசன் என்ற முறையில் இராஜசிங்கன் அன்று செய்த தியாகங்கள், அன்றைய நிலைமைகளோடு ஒப்பிடும்போது மகத்தானவை. அது வேறு எந்த பௌத்த அரசனது தியாகத்திற்கும் இரண்டாந்தரமானதல்ல. வரலாற்றில் குறிப்பிடப்படுவதற்கு அமைய, பெரும்பான்மையான அரசர்கள் சமாதானமான சூழ்நிலைமைகளின் கீழேயே சமயத்திற்குத் தொண்டு செய்துள்ளனர். தாய் நாட்டின் உரிமைகளுக்கும் தேசத்தின் விடுதலைக்கும் பயமுறுத்தல் ஏற்பட்ட ஒரு கால கட்டத்திலேயே இராஜசிங்க மன்னன் இப் பணிகளைச் செய்தான். பௌத்த மதத்தில் இத்தகைய மறுமலர்ச்சி ஏற்படுத்துதல் தேசத்தின் விடுதலைக்காக எடுத்த முக்கிய நடவடிக்கையாகும். எனவே இத் தமிழ் அரசனை உண்மையான தேசிய வீரன் என்று கருதுவதில் எதுவித தவறுமில்லை.

## புத்தபகவானின் இரத்த உறவுகள்

"சிங்களத் தேசிய இனம் புத்தபகவானின் இரத்த உறவினர்களுடன் தொடர்பு கொண்ட இனம், தமிழர்களுடன் சிங்கள இனத்திற்கு எதுவித கலப்பும் இல்லை" என்று கூறிக்கொள்ள சில சிங்கள இனவாதிகள் முற்படுகின்றனர். இரண்டாயிரத்து ஐநூறு ஆண்டுகள் கடந்த பின்னர் 'புத்தபகவானின் இரத்த உறவைப் பற்றி ஆராய்தல் உண்மையில் பெரு முட்டாள்தனமாகும்.

இலங்கைத் தீவின் முதல் அரசன் விஜயனுயினும் அவனுக்கொரு பரம்பரை இருக்கவில்லை. புதிய பரம்பரை பண்டுகாப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யனின் ஆட்சிக்காலத்திலிருந்தே ஆரம்பிக்கின்றது. அனுராதபுரத்தின் ஆரம்ப இராச்சியத்தை கிரமமாக ஆரம்பித்து வைத்த பண்டுகாபயனின் தந்தையும், தாயும் நேரடியாகவே சாக்கியர்களின் வமிசத்தைச் சேர்ந்த அமித்தோதன மன்னனின் பரம்பரையிலிருந்து வருபவர்கள். அமித்தோன மன்னர் சுத்தோதன மன்னனின் இளைய சகோதரனுவான். சாக்கியர்களின் எதிரியான 'விடூடப' இந்தியாவிலுள்ள சாக்கியர்களை அழித்தொழித்தான். எனவே புத்த பகவானின் உறவினர்களான சாக்கியர்கள் இலங்கையில் மாத்திரமே எஞ்சியிருந்தனர். ஆனுல், இலங்கையிலிருந்த சாக்கியர்களின் வரலாறு யசலாலக்க திஸ்ஸனுடன் (கி. பி. 52 – 59) முடிவுற்றது.

இவ்வாறே பனுவல் இலக்கியங்கள் எமக்கு எடுத்துக் கூறுகின்றன. இவை கூறுபவை முற்றிலும் தவறற்றவை எனக் கூற முடியாது. அது தவறற்றது எனக் கருதினுலும் சிங்கள இனம் புத்த பகவானின் உறவினர்கள் என்று நிரூபிப்பது எவ்வாறு?

சிங்கள இனத்தை புத்த பகவானின் இரத்த உறவினர்களாக எடுத்துக் கொண்டாலும் கூட புத்தர்பெருமான் உத்தேசிக்காத இனவாதத்தை நாம் ஏற்க வேண்டுமா? அவருடைய உபதேசங்கள் அனைத்தும் அன்பு, கருணை, என்பவற்றையே அடிப்படையாகக் கொண்டிருந்தன. அவர் ஒரு போதும் இனவாதத்தைப் பற்றி உபதேசிக்கவில்லை. தமிழ் விரோதக் கண்ணேட்டத்தை முன் வைத்தால் அது புத்தரின் இரத்த உறவினர்களால் புத்தர் பெருமானுக்குச் செய்யும் அவமானமாக மாட்டாதா?

'புத்தபகவானின் இரத்த உறவினர்கள்' எனக் கூறிக்கொள்பவர்கள் இனத்துவேஷத்தை வெளிப்படுத்துவதற்கு புத்தருக்கும் தமக்கும் உள்ள உறவு முறையைக் கூறுகின்றனர். ஆனுல், புத்தர் பெருமான் வாசிட்ட சூத்திரத்தில் உபதேசித்ததை இவர்கள் ஏற்கவில்லை அல்லவா?

வாசிட்ட சூத்திரத்தின் தமிழாக்கம் பின்வருமாறு:–

வசிட்டன்: "கௌதமர் அவர்களே, எம் மத்தியில் இனவாதம் பற்றிய ஒரு விவாதம் இருந்து வருகின்றது. பாரத்துவாஜ என்னும் இளம் பிராமணர், தான் இனத்தால் பிராமணர்" என்று கூறுகின்ருர். நான் "கருமத்தால் (செய்கையால்) பிராமணர் தீர்மானிக்கப்படுவார்" என்று கூறுகின்றேன். "மகா ஞானியே இவ்விவாதத்தை இவ்வாறு அறிவீராக, இனத்தால் பிராமணர் ஆவாரா? அல்லது கருமத்தால் (செய்கையால்) பிரமணரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரா? என்பதையிட்டு விளக்கமில்லாத எமக்கு சரியான தீர்ப்பைக் கூறுங்கள்.''

புத்தர்:- "வசிட்டா, உயிரனங்களை வகைப்படுத்தி கிரமமான முறையில் விளக்குகின்றேன். இனங்கள் பல வகைப்பட்டன.''

"நாம் புல்லினங்கள் என்றும் விருட்சங்கள் என்றும் புல்லினங்களையும் விருட்சங்களையும் வேறுபடுத்தி அறியமாட்டோமா? அந்தப் புல்லினங்களையும் விருட்சங்களையும் பிரித்து அறிக. இவற்றை இன ரீதியில் வகைப்படுத்தலாம். ஏனெனில், அவை பல இனங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளமையால்.

சின்னஞ்சிறு எறும்புகள், புழுக்கள், சிறு பூச்சிகள் என்பவற்றையும் அவைகள் சார்ந்த இனங்களுக்கமைய வகைப்படுத்தலாம்.

சின்னஞ்சிறிய உயிரினங்களையும், பெரிய உயிரினங்களையும் நான்கு கால்களைக் கொண்ட பிராணிகளையும் அவற்றின் இனங்களுக்கமைய வகைப்படுத்தலாம்.

நீண்ட முதுகைக் கொண்ட ஊர்ந்து செல்லும் பிராணிகள் இனத்தையும் அறிக. இவற்றையும் பல இனங்களாக வகைப்படுத்தலாம்.

நீரில் பிறந்து வாழும் நீரினங்களையும் வகைப்படுத்தலாம். அவற்றில் பல இனங்கள் உண்டு.

சிறகுகளைக் கொண்டுள்ள வானத்தில் பறக்கும் பறவைகளையும் வகைப்படுத்தலாம். பறவைகளிலும் பல இனங்கள் உண்டு.

மேற் கூறிய உயிரினங்களில் பல இனங்கள் உள. ஆனால் மனித இனம் ஒன்றே, மனித இனத்தைப் பல இனங்களாக வகைப்படுத்தமுடியாது.

மனித இனத்தின் தலை மயிரில் இன வேறுபாடு இல்லை; தலையில் இல்லை, கண்களில் இல்லை; முகத்தில் இல்லை; மூக்கில் இல்லை; உதடுகளில் இல்லை; தொண்டையில் இல்லை; வயிற்றில் இல்லை; முதுகில் இல்லை; தோளில் இல்லை; பாலியல் உறுப்புகளில் இல்லை; கைகளில் இல்லை; காலில் இல்லை; விரல்களில் இல்லை; நகங்களில் இல்லை; முழங்காலில் இல்லை; தொடையில் இல்லை; நிறத்தில் இல்லை; குரலில் ஏனைய உயிரினங்களிடையே காணப்படும் வேறுபாடு மனித இனத்தில் கிடையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராமணர்களிடையே வேறுபாடுகளோ மனித உடலமைப்பில் பல வகையான இன வேறுபாடுகளோ கிடையாது. ஆனால் நடைமுறையில் மனிதரிடையே பல வேறுபாடுகள் உள என்று கூறப்படுகின்றது.

(மஜ்ஜிம – நிக்காயம் - பிராமணர் வகை – வசிட்ட, சூத்திரம்)

இங்கு கூறப்பட்டவற்றிலிருந்து கூறப்படாதவை ஏதும் இருப்பின் அதனையும் கவனத்திற் கொள்ளலாம். அதாவது, நடைமுறை வாழ்வில் சகல மனிதர்களையும் வேறுபடுத்தி அறிந்துகொள்ள முடியும். ஆனால் எவ்வினத்தைச் சார்ந்த மானிடனும் மனிதன் என்ற பொதுத் தன்மையிலிருந்து பார்க்கும் போது எதுவித வித்தியாசத்தையும் காணமுடியாது என்பதையே புத்தர்பெருமான் வலியுறுத்தியுள்ளார்.

புத்தரின் இரத்த உறவினர்கள் என்று கூறிக்கொள்பவர்கள் இனத்துவேஷத்தை உபதேசித்த போதிலும் – பௌத்த நெறிக்கும் அவர்களுக்கும் எதுவித உறவுமில்லை என இதன் மூலம் தெளிவாகின்றது.

## ஆக்கிரமிப்பாளர்கள்

இன்று இனவாதத்தைப் பரப்ப விரும்புவோர் வரலாற்றின் சில சம்பவங்களை பயன்படுத்துகின்றனர். தமிழர் படையெடுப்பு பற்றிய சம்பவம் அவற்றுள் ஒன்றாகும். தமிழர்களுக்கு என இன்று ஒரு நாடு இருக்கின்றதென்றும், சிங்களவர்களுக்கு இருக்கும் ஒரே நாடு இலங்கை என்று கூறுவது மூலம் எமக்கு எதனை உணர்த்த முற்படுகின்றனர்? தமிழர்கள் தமக்கென ஒரு நாட்டை வைத்துக் கொண்டு இலங்கையையும் கைப்பற்ற முற்படுகின்றனர்; என்பதேயாகும். இதிலிருந்து இரண்டு உண்மைகள் மூடி மறைக்கப்படுகின்றன. முதலாவது: இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் இலங்கையர்களேயன்றி அவர்கள் இந்தியர்களாக மாட்டார்கள். இரண்டாவது; ஆதியில் இலங்கையின் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு வந்த தமிழ் தலைவர்கள் எமது நாட்டை ஆக்கிரமித்தனர் என்பதேயாகும். இவற்றின் உண்மை நிலைமை என்ன?

தமிழ் மொழியைப் பேசும் பெருந்தொகை மக்கள் தென்னிந்தியாவில் வாழ்வது உண்மை. எனவே, இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு கீழ்த்தரமான இடம் அளிக்கப்படவேண்டும் என்று கூற முடியுமா? சிங்கள மொழி இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்படுவதை எவ்வாறு சிங்கள மக்கள் விரும்பமாட்டார்களோ அதைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போல தமிழ் மொழிக்கு இரண்டாமிடம் அளிக்கப்படுவதையிட்டு தமிழ் மக்கள் விரும்பாவிடின் அது தவறு? நடக்க வேண்டியது என்னவென்றால், சிங்களம் தமிழுக்கோ அல்லது தமிழ் சிங்களத்திற்கோ அடிபணிவதல்ல.

ஆக்கிரப்பு பற்றிய பழைய வரலாற்று விபரங்களை தர்க்கத்திற்காக எடுத்தால் அநாவசியமான அச்சம் ஏற்பட இடமுண்டு. எமது வரலாறுக்கமைய சேன, குத்திக, எல்லாளன் ஆகியோரை முதன்மையாகக் கொண்ட சேர – சோழ – பாண்டியர் பல சந்தர்ப்பங்களில் இலங்கையின் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றி உள்ளனர். 'இவர்கள் இன்னுமொரு இனத்தை அடக்கியொடுக்குவதற்கு இலங்கை மீது படையெடுத்தனர்' என்று இனத்துவேஷத்தை வெளிப்படுத்துவதற்கு ஒருவர் உதாரணமாகக் கூறலாம். ஆனால், வளமும் செழிப்பும் மிக்க பிரதேசங்களைத் தேடி குடிபெயர்ந்தமையே அன்று நடந்த நிகழ்ச்சியாகும் வளமான பிரதேசங்களை தமதாக்கிக் கொள்ள அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றவும் அவர்கள் துணிந்தனர். இது எவ்விதத்திலும் இனவாதம் காரணமாக ஏற்பட்ட சம்பவம் அல்ல. அக் கால கட்டத்தில் இலங்கையில் சிங்களவர் வாழ்ந்திருந்தாலும், தமிழர் வாழ்ந்திருந்தாலும் அல்லது வேறு ஓர் இனம் வாழ்ந்திருந்தாலும் இப்படையெடுப்புகள் நடந்தே இருக்கும். இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையேயான பூகோள அமைப்பு காரணமாக தென்னிந்தியாவிற்கு அண்மித்த யாழ்ப்பாணப் பிரதேசம் அடிக்கடி தமிழர்களின் ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டது.

மேலும் சில தமிழர்கள் இங்கு வியாபாரத்தின் பொருட்டு வந்தனர். இச் சந்தர்ப்பங்களில் அதிக நன்மை பெறும் பொருட்டு பல உபாயங்களில் ஈடுபட்டது உண்மை. மறுபுறம், இந்தியாவிலிருந்து வந்தோர் மத்தியிலும் அதிகாரத்திற்காக பல இழுபறிகள் நடந்ததையும் நாம் வரலாறு மூலம் அறிகின்றோம்.

ஆனால், அன்று நடந்த சம்பவங்கள் இன்றும் நடைபெறும் என்று கூற முடியாது. அத்தகைய நியாயமற்ற தர்க்கத்தை முன்வைத்து இன்று தமிழ் மக்களுக்கெதிராக நடக்கும் அநியாயங்களை அங்கீகரிப்பதாயின், அடிப்படையில் ஜனநாயக சூழ் நிலையேனும் இலங்கையில் இருக்கமாட்டாது.

சிங்கள மக்கள் வடமத்திய மாகாணத்திலிருந்து தென் மேல் மாகாணத்திற்கு குடிபெயர்ந்ததாக ஏற்கனவே குறிப்பிடப்பட்டது. இவ்வாறு குடிபெயர்ந்தமைக்குக் காரணம் தமிழர்களின் படையெடுப்புகளே என இனவாதிகள் பிரச்சாரம் செய்கின்றனர். அன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கிரமிப்புகள் நடைபெற்றதாயினும் அவற்றின் அடிப்படை நோக்கம் இனவாதம் அல்ல என்பதை நாம் வரலாற்றில் இருந்து மூடி மறைக்க முடியாது.

மேற்படி குடிபெயர்ச்சிக்கு வேறு பல காரணங்களும் அமைந்தன. அனுராதபுர - பொலன்னறுவை ஆகிய இராச்சியங்கள் வீழ்ச்சியடைந்தமைக்கான ஒரே காரணம் தமிழர் ஆக்கிரமிப்புகளே என சிலர் கூறுகின்றனர். எனினும், உலர் வலயத்தில் அமைந்த அனுரதபுர இராச்சியத்தின் சனத்தொகை பெருகிப் பரவுதல்; காடுகள் அழிக்கப்பட்டமையால் ஏற்பட்ட மழை வீழ்ச்சிக் குறைவு; நீண்ட கால வரட்சி; மல்வத்து ஓயாவின் நீர் வற்றிவிடுவதனுல் நீர்ப்பாசன வசதிகள் செயலிழந்தமை; தொற்று நோய்கள் பரவுதல்; நிலத்தின் செழிப்பு குன்றுதல்; என்பன காரணமாக பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்குதல் இயல்பாகும். இப் பெரும் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்காக தாதுசேன மன்னன் கலா ஓயாவின் மேலைப் புலத்திலே ஒரு பெரும் அணையைக் கட்டுவித்தான். 'யோத எல' என்று பெயர் பெற்ற கால்வாய் மூலமாக அனுரதபுரத்திற்கு நீர் வழங்கப்பட்டது. எனினும் பிரச்சினையை முழுமையாகத் தீர்க்க முடியவில்லை.

மேலே குறிபபிட்ட பொருளாதார இயற்கைக் காரணிகளும், உள்நாட்டு யுத்தங்கள் வெளிநாட்டு ஆக்கிரமிப்புகள் போன்ற அரசியற் காரணிகளும் அன்றைய இராச்சியங்களில் பல மாற்றங்கள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்தன என வரலாறு மூலம் அறிகின்றோம். ஆனல், இனவாத நோக்கங்களை பூர்த்தி செய்யு முகமாக இராஜதானிகளை மாற்றுவதற்கு வெளிநாட்டு ஆக்கிரமிப்புகள் மாத்திரமே காரணமாக அமைந்தன என்று சொல்வது வரலாற்றை திரித்துக் கூறுவதாகும்.

## எல்லாளன் - துட்டகைமுனு யுத்தம்

துட்டகைமுனு - எல்லாளன் யுத்தத்தை மீண்டும் ஞாபகப் படுத்தி, "இன்றும் சிங்கள - தமிழ் யுத்தம் ஒன்று செய்ய வேண்டியுள்ளது." என 1981 இனவாத மோதல்கள் நடைபெற்றபோது ஒரு பாராளுமன்ற உறுப்பினர் கூறினர். இக் கூற்றை வேறு பலரும் கூறிவருகின்றனர். இன்னுஞ் சிலர் கேட்டு மகிழ்ச்சியடையுமளவிற்கான இனவாதக் கூற்ருக இது திகழ்கின்றது. மேற் குறிப்பிட்டுள்ள வரலாற்றுச் சம்பவங்களுள் துட்டகைமுனு எல்லாளன் யுத்தம் குறிப்பாக ஞாபகப்படுத்தப்படுவதால் அது பற்றிய உண்மை நிலையை இங்கு எடுதது்க் கூறுவது மிகவும் பொருந்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று ஆட்சி அதிகாரத்தைப் பெறுவதற்கு இலங்கையர் மத்தியில் பல மோதல்கள் இடம் பெற்றன. அதே சமயம் இந்தியாவிலிருந்தும் பல தலையீடுகள் இடம் பெற்றன. இந்தியாவிலிருந்து வந்த எல்லாளன் அசேலனைக் கொன்று அனுரதபுரத்தின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினான். அவனின் ஆட்சி நிருவாக அமைப்பு பற்றி அவ்வளவாகக் குறிப்பிடப்படாவிட்டாலும், 44 ஆண்டுகள் எல்லாளன் ஆட்சி புரிந்தான் என பனுவல் இலக்கியம் கூறுகின்றது. இப் பனுவல் இலக்கியத்தில் குறிப்பிடுவதற்கமைய எல்லாளன் நீதிக்கும் சட்டத்திற்கும் அமைய ஆட்சி புரிந்த ஓர் அரசனுவான். 'அவன் பௌத்தர்களின் சமய வழிபாட்டிற்கு அவசியமான சகல வசதிகளையும் செய்து கொடுத்து பௌத்த சமயத்திற்கு மதிப்பளித்தான்.' என வரலாறு கூறுகின்றது. அனுரதபுர இராச்சியத்தின் கீழ் பெருமளவிலான பௌத்தர்கள் வாழ்ந்னர் என்பதும் அவர்களின் சமயச் சுதந்திரம் பாதுகாக்கப்பட்டது என்பதும் வரலாற்று உண்மைகளாகும்.

துட்டகைமுனுவை ஒரு வீரன் எனக் குறிப்பிடும் பனுவல் இலக்கியம், எல்லாளன் நீதி வழுவாத அரசன் எனவும் ஏற்றுக் கொள்கின்றது. இத் தகவல்களுக்கமைய துட்டகைமுனு ஓர் வீரன்; எல்லாளன் நீதிவழுவாத ஓர் அரசன். நடு நிலை நின்று ஆட்சி புரிந்த படியால் எல்லாளனுக்கு மக்கள் மத்தியில் பெரும் மதிப்பும் அங்கீகாரமும் செல்வாக்கும் இருந்து வந்தது. எனவே அவனை தோற்கடிப்பதும் இலகுவான காரியமாக இருக்க வில்லை.

எல்லாளன் இந்நாட்டுப் பௌத்தர்களின் நன்திமப்பைப் பெற்று ஆட்சி புரித்தான். தமிழர்களின் ஆக்கிரமிப்புகளைக் கண்டித்தும் பல நூல்களை இயற்றிய பௌத்த பிக்குமாரின் நன்மதிப்பையும் எல்லாளன் பெற்றிருந்தது மூலம் இது உறுதிப்படுத்தப்படுகின்றது. மறுபுறம் எல்லாளன் இறந்த பின் அவனது சமாதிக்கு வணக்கஞ் செலுத்தியது, சிங்களவர்களின் இயற்கையான குண வியல்பு என்று எண்ணினுல் அது உண்மை நிலைமையை தவருகப் புரிந்து கொள்வதாகும். இத்தகைய நடுநிலையான - நீதி வழுவாக அரசனைக் கொலை செய்வதால் மக்கள் மத்தியில் ஏற்படக்கூடிய அமைதியின்மையை தவிர்ப்பதற்கும் இது ஓர் சிறந்த உபாயமாகும். எல்லாளனுக்கு பலத்த எதிர்ப்பு இருந்திருந்தால், இவ்வளவு தூரம் மதிப்பளிப்பதற்கு ஒருவரும் ஆர்வம் காட்டமாட்டார்கள். நீண்ட காலமாக எல்லாளனின் சமாதிக்கு வணக்கஞ் செலுத்தப்பட்டது. இவ் விபரங்களிலிருந்து வெளிப்படுவது என்ன? கைமுனு - எல்லாளன் யுத்தம் ஆட்சி அதிகாரத்தைப் பெறுவதற்காக நடந்த ஓர் போராட்டமாகும். அக் காலத்தில் ரஜரட்டையிலும் (அனுரதபுரி) உருகுணை ரட்டையிலும் இரண்டு இராச்சியங்கள் நிலவின. அனுர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தபுரி செழிப்பான வளர்ச்சியடைந்த பிரதேசமாக இருந்த காரணத்தால் எல்லாளன் மிகப் பலம் வாய்தவனுகத் திகழ்ந்தான். இப் போராட்டம் ஆட்சி அதிகாரத்திற்கான போராட்டமேயொழிய இனவாதப் போராட்டமாக இருக்கவில்லை. எல்லாளனின் ஆட்சியின் கீழ் சிங்களப் பௌத்தர்கள் துன்புறுத்தப்படவில்லை. துட்டகைமுனு எல்லாளனிடமிருந்து ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் அங்கு வாழ்ந்த தமிழ் மக்களை துன்பப்படுத்தவில்லை. எல்லாளனின் சமாதிக்கு வணக்கஞ் செலுத்தக் கட்டளையிட்டது தமிழ் மக்களின் ஆதரவை வென்றெடுக்க துட்டகைமுனு மேற்கொண்ட ஓர் உபாயம் எனக் கருதுவது தவறு? துட்டகைமுனு எல்லாளன் ஆகிய இருவருக்குமே இன வைராக்கியம் இருக்கவில்லை. எனவே தமக்கு ஆட்சி அதிகாரம் இருந்த போது மற்றைய இனத்தை அழிக்க அவர்கள் சிந்தித்ததே கிடையாது. அன்று இருக்காத ஓர் இனவாதத்தை, இன்று இன வாத மோதல்களின் போது உதாரணமாகக் காட்டுவது வரலாற்றைத் திரித்துக் கூறுவதாகவே அமையும். எனவே இன்று அச் சம்பவத்தை ஞாபகப்படுத்துவோர் இனவாதத்தால் சீரழிந்தவர்களாவர்.

## ஐரோப்பிய ஆக்கிரமிப்புகள்

புராதன இலங்கையில் இனங்களிடையே சில மோதல்கள் நிலவிய போதிலும் இன்று நிலவுவது போன்ற இனவாத மோதல்கள் இருந்ததற்கு எதுவிதச் சான்றுகளும் இல்லை. எனவே அன்றைய சம்பவங்களை இன்றைய நிலைமைகளோடு ஒப்புநோக்க முடியாது.

இனவாதம் எக் கால கட்டத்தில் எத்தகைய சூழ் நிலைகளின் கீழ் உருவானது என்பதை நாம் புரிந்து கொள்வது இச் சிக்கலை தீர்ப்பதற்கு உதவியாயிருக்கும். ஆங்கிலேயரின் ஆட்சி காலத்தில் இனவாதத்தைப் பரப்புவதற்கு பல அரசியல் உபாயங்கள் மேற்கொள்ளப்பட்டன என்பது தெளிவு. எனினும் போர்த்துக்கேயரின் ஆட்சிக் காலம் முதல் இப் பிரச்சினையை ஆராய்வது மிக முக்கியமானது.

## போர்த்துக்கேயர் காலம்

போர்த்துக்கேயர் எமது தீவில் வந்திறங்கிய போது பல்லாண்டுகளாக இலங்கையின் உலர் வலயத்தின் ஆற்றுப்பள்ளத் தாக்குகளை அண்மித்த பிரதேசங்களில் நிலவிய தன்னிறைவுப் பொருளாதாரமும், அரசியற் தலைமையும் சீர்குலைந்திருந்தது. முழு இலங்கையையும் ஐக்கியப்படுத்திய அரசியல் அதிகாரம் சீர்குலைந்ததன் காரணமாக நாடு பூராவும் பிராந்திய ஆட்சியாளர்கள் தோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றினர். உலர் வலயத்தை செழிப்பாக்கிய குளங்கள் சீழிந்தமையால், குடியிருப்புகள் தென்மேற்கின் ஈரலிப்பான பிரதேசங்களுக்கும் மலை நாட்டிற்கும் குடிபெயர்ந்தன. முன்னர் முழு இலங்கைக்கும் மன்னனான ஆறும் பராக்கிரமபாகுவின் காலத்தில் முக்கிய இராச்சியமாகத் திகழ்ந்த கோட்டை வீழ்ச்சியடைந்தமையால் கண்டியிலும், யாழ்ப்பாணத்திலும், வன்னிப் பிரதேசத்திலும் சுயேச்சை அரசுகள் நிறுவப்பட்டன.

மிளகு, கறுவா, பாக்கு போன்ற ஏற்றுமதிப் பொருட்களில் கூடிய கனவஞ் செலுத்தப்பட்டது. இக் கால கட்டத்தில் இப் பொருள்களின் வியாபாரம் முஸ்லீம்களின் கையிலேயே இருந்து வந்தது.

போர்த்துக்கேயரின் ஆக்கிரமிப்பு மிகக்கொடியது. வஞ்சனையாலும் துப்பாக்கியாலும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றிய இவர்கள் தமது சமயத்தை பலவந்தமாகப் பரப்பினர். வியாபாரத்தை வாணிப நோக்கில் நடத்தாமல் மக்களை அடிமைகளாக்கும் நோக்கிலேயே நடத்தினர். நிலப்பிரபுத்துவ அமைப்பில் நிலவிய 'இராசகாரிய முறையை'ப் பயன்படுத்தி சில சாதியினரை கறுவாத் தோட்டங்களில் அடிமைகளாக ஈடுபடுத்தினர். முஸ்லிம்களின் கையிலிருந்த வியாபாரத்தைக் கைப்பற்றிய போர்த்துக்கேயர் தமது அரசியல் அதிகாரத்தை உபயோகித்து வியாபாரஞ் செய்தனர்; என்றுமில்லாதவாறு இலங்கையில் ஊழலும் கொலைகளும் தலைவிரித்தாடின. கோட்டையை ஆண்ட அரசர்களின் பலவீனங்களைப் பயன்படுத்தி போர்த்துக்கேயர் அவர்களை தமது கைப்பொம்மைகளாக்கினர். 'நன்கொடை உறுதி' மூலம் இலங்கையின் அரசியல் அதிகாரத்தை ஏற்குமளவிற்குப் போர்த்துக்கேயர் ஏமாற்றுப் பேர்வழிகளாயிருந்தனர்.

அது மாத்திரமன்றி அவர்களின் கலாச்சாரத்தையும் சமயத்தையும் பரப்புவதன் மூலம் போர்த்துக்கேயரின் ஆதிக்கத்துக்குட்பட்ட பிரதேசங்கள் புதிய வாணிப கலாச்சாரங் கொண்ட பிரதேசங்களாக மாற்றியமைக்கப்பட்டன. மக்களின் பாரம்பரிய வாழ்க்கை முறை சீர்குலைக்கப்பட்டது. காலப் போக்கில் கரையோரப் பிரதேசங்களின் சூழலும் பொருளாதாரமும் ஐரோப்பிய கலாச்சார ஆதிக்கத்திற்குட்படுத்தப்பட்டது. வெளிநாட்டு ஆட்சியாளர்களுக்கு அடிபணிந்த மக்கள் அங்கு உருவாக்கப்பட்டனர்.

எனவே சம்பிரதாய முறையிலான வாழ்க்கை அமைப்பை பாதுகாத்த கண்டிப்பிரதேச வாசிகள் போர்த்துக்கேயரின் ஆதிக்கத்திட்குட்பட்ட தமது சகோதர மக்களை வெறுப்புடனேயே நோக்கினார்கள். சில்வா, பர்ணாந்து, பெரேரா, பொன்சேக்கா, என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னும் பெயர்களை கரையோரப் பிரதேச மக்கள் ஏற்ற காரணத்தாலும், கிறிஸ்தவ சமயத்தை தழுவிக் கொண்டமையாலும் வேற்றுமைகள் மேலும் விரிவடைந்தன. ஒரே சிங்கள இனம் கண்டி சிங்களவர் கரையோரச் சிங்களவர் (உடரட்ட - பஹத்த ரட்ட) என பிளவுபடத் தொடங்கியது.

கோட்டை இராச்சியத்தின் இறுதிக் கட்டத்தில் யாழ்ப்பாணமும் போர்த்துக்கேயரின் தாக்குதல்களுக்கு இலக்காகியது. இக் கால கட்டத்தில் சிங்களவர் - தமிழர் - முஸ்லீம்கள் ஆகிய பல இன மக்களும் ஐக்கியப்பட்டு போர்த்துக்கேயருக்கு எதிராகப் போராடினர். எமது தாய் நாட்டின் சுதந்திரம் பற்றி அன்று அனைவரும் கவலைப் பட்டனர். போர்த்துக்கேயருக்கு எதிரான போராட்டத்தில் யாழ்ப்பாணம் தோல்வியடைந்தது. மலைநாட்டில் அமைந்த புவியியல் நிலைமைகள் யாழ்ப்பாண இராச்சியத்தில் இல்லாமை காரணமாக மறைந்திருந்து தாக்குதல் நடத்தும் சாத்தியக் கூறு அங்கு இருக்கவில்லை. யாழ்ப்பாண இராச்சியம் தோல்வி கண்டதற்கு இதுவும் ஒரு காரணமாகும். பின்னர் யாழ்ப்பாணத்திலும் கத்தோலிக்க சமயம் பரப்பப்பட்டது. ஆனால் சிங்களப் பிரதேசங்களில் போர்த்துக்கேயரின் கலாசாரம் ஊடுருவியதைப் போல தமிழ் மக்களின் வாழ்வில் அது செல்வாக்குப்பெற முடியவில்லை. ஆனால், உள்நாட்டவர்கள் பத்தியில் முன்பு நிலவிய உறவு முறை சீர்குலையத்தொடங்கியது.

ஒல்லாந்தர் ஆட்சிக் காலம்

போர்த்துக்கேயர் செய்தவற்றை ஒல்லாந்தர் மிகவும் ஸ்தாபன ரீதியாகவும் கிரமமாகவும் செய்தனர். வியாபார - பொருளாதார வாழ்வும், கலாச்சார ஆக்கிரமிப்பும் தொடர்ந்து நிலவின. ஆனால், ஒல்லாந்தர்கள் உள்நாட்டவர்களுடன் கலப்பு திருமணங்களைச் செய்வதை அனுமதிக்கவில்லை. சிங்கள - தமிழ் மக்களுடன் ஒல்லாந்தர் விவாகம் செய்வதைத் தடை செய்து தாம் உன்னத இனமாகத் திகழ முயன்றனர். ஒல்லாந்தரும் கறுவாத்தோட்ட தொழிலாளர்களை அடிமைகளாகவே நடத்தினர். அவர்களின் கலாச்சாரம் பரவாது விட்டாலும், வாணிபம் மலைநாட்டுக் கிராமங்களிலும் பரவின. இலங்கையில் இன்றும் சிறு பான்மை இனமாக வாழும் மலாய் இனத்தவர், ஜாவா - இந்தோனேசியா போன்ற நாடுகளிலிருந்து சிப்பாய்களாக ஈடுபடுத்துவதற்கு வரவழைக்கப்பட்டவர்களின் வம்சாவழியினராவர். தஞ்சாவூரிலிருந்தும் தமிழர்கள் இங்கு கொண்டுவரப்பட்டனர். கொழும்பு காலி போன்ற பிரதேசங்களில் பல பரமபரைகளாக வியாபாரஞ் செய்த முஸ்லீம்கள் வியாபாரஞ் செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டது. அவர்கள் மேற்படி பிரதேசங்களிலிருந்து விரட்டியடிக்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டமையால் நாட்டின் மத்தியிலுள்ள பல பிரதேசங்களுக்குச் சென்று விவசாயத்திலும் சிறு வியாபாரத்திலும் ஈடுபட்டனர்.

இவ்வாறுகப் பலம் வாய்ந்த இரண்டு மேலை நாட்டவர்கள் இலங்கையின் கரையோரப் பிரதேசங்களைக் கைப்பற்றியமையால் கண்டி இராச்சியத்தின் மக்கள் தாய் நாட்டின் விடுதலைக்காகப் போராடி வந்தனர். அபாயமிக்க இக் கால கட்டத்தில் தாய் நாட்டினதும், தேசத்தவர்களினதும், கலாச்சாரத்தினதும் பாதுகாப்பிற்காக நடந்த தேசிய எழுச்சிகளுக்கு தமிழ் அரச வமிசத்தைச் சேர்ந்தவர்களே தலைமை தாங்கினர் என்பதை நாம் மறந்துவிட முடியாது.

அன்று இலங்கையில் வாழ்ந்த சகல மக்களும் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தில் பங்கு கொண்டனர். போர்த்துக்கேய – ஒல்லாந்த ஆட்சியின் போது சிங்கள – தமிழ் அல்லது வேறு இனங்களிடையே மோதல்களை ஏற்படுத்துதல் அவர்களுக்கு அவசியப்படவில்லை. முழு நாடும் தமது ஆட்சிக்குட்படாமை ஒரு காரணம், அவர்களின் முக்கிய நடவடிக்கையாக வியாபாரம் அமைந்தது மற்றைய காரணமாகும். எனவே இனவாதத்தைத் தூண்டுவதால் அன்று அவர்களுக்கு எதுவித பயனும் கிடைத்திருக்க மாட்டாது.

**பிரித்தானியர் ஆட்சிக் காலம்**

முழு நாடும் பிரித்தானியரின் காலனியாக்கப்பட்ட பின்னர் இலங்கையில் பாரிய வரலாற்று மாற்றங்கள் ஏற்பட்டன. பிரித்தானியரின் பிரித்தாளும் கொள்கையின் கீழ் இனவாதத்திற்குத் தூபமிடப்பட்டது. இதன் மூலம் அவர்களின் ஆட்சி அதிகாரம் நிலை நாட்டப்பட்டது.

இந் நிலைமையை விளங்கிக் கொண்டு தவறற்ற செயல் மார்க்கங்களை கூட்டாக எடுப்பதற்குப் பதிலாக, சிக்கல்களையும் பிணக்குகளையும் உருவாக்கிக் கொண்டு திண்டாட வேண்டிய நிலையே ஏற்பட்டுள்ளது. இன்றும் நாங்கள் பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளின் இத்துப்போன கயிறுகளையே பற்றிக் கொண்டிருக்கின்றோம்.

ஆரம்பத்தில் கிழக்கிந்திய வர்த்தக கம்பனியின் கீழ் தாழ்நிலப் பிரதேசங்கள் ஆட்சி செய்யப்பட்ட போது பிரித்தானியருக்கு எதிராக நாட்டின் சகல பகுதி மக்களும் போராடத் துணிந்தனர். வரிப்பணம் அறவிடுவதற்காக மதுரையிலிருந்து தருவிக்கப்பட்ட தமிழ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்ட போது அதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்த்து ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் இனவாதப் போராட்டமாக மாட்டாது. அது ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டமாகும். நியாயமற்ற முறையில் வரி அறவிடப்பட்டது மாத்திரமன்றி அது பற்றிய வழக்கு விசாரணைகளும் மேற்படி உத்தியோகத்தர்களாலேயே நடத்தப்பட்டது. எனவே மக்களின் எதிர்ப்பு வலுவடைந்தது. இப் போராட்டத்தின் இறுதியில் வர்த்தகக் கம்பனி தோல்வி கண்டது. எனவே கம்பனியின் நிருவாகத்தில் மாற்றம் ஏற்பட்டது. மேற்படி போராட்டத்திற்கு சிங்கள – தமிழ் – முஸ்லீம் மக்களின் ஒத்துழைப்பு கிடைத்தது. அன்று இன வாதம் தலை காட்டாததன் காரணமாகவே போராட்டம் வெற்றியீட்டியது.

ஆங்கிலேயர் தாழ் நிலப் பிரதேசங்களைக் கைப்பற்றிய பின்னர் கண்டி இராச்சியத்தின் ஒற்றுமை சீர்குலையத் தொடங்கியது. கண்டி அரசனுக்கெதிராக தாழ் நில சந்தர்ப்பவாதத் தலைவர்கள் மத்தியில் இன வாதம் பரப்பப்பட்டது. இரண்டு ஐரோப்பிய ஆக்கிரமிப்புகளை உறுதியுடன் எதிர்த்து நின்ற சுதந்திர ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. கண்டி இராச்சியத்தின் அரசர்கள் மத்தியிலும் இனவாதத்திற்கு தூபமிடப்பட்டது. இவை மூலம் முழு நாட்டையும் ஆங்கிலேயர் கைப்பற்றிக் கொண்டனர். தர்மபால அரசன் 'நன்கொடை உறுதி' மூலம் இலங்கையை போர்த்துக்கேயரிடம் ஒப்படைத்தான். கண்டி இராச்சியத்தின் தலைவர்கள் உடன்படிக்கை மூலம் இலங்கையை ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தனர்.

இக் காட்டிக்கொடுப்புகளின் பின்னரும் இலங்கையின் தேசபக்தர்கள் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக கிளர்ச்சி செய்தனர். பிரித்தானியர், தொடர்ந்தும் இனவாதத்தை தூண்டும் நோக்கில் முஸ்லீம் பிரதேசங்களுக்கு முஸ்லீம்களை நியமித்தனர். கிளர்ச்சியின் தலைவர்களைப் பிடிப்பதற்கு முஸ்லீம் படைகளை ஈடுபடுத்தினர். ஆங்கிலேயர் கையாண்ட உபாயங்கள் விடுதலைப் போராட்டம் பலவீனமடைவதற்கு ஒரு காரணமாக அமைந்தது. அன்று வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அப்போராட்டத்திற்குத் தலைமை தாங்கிய நபர் 'துரைசாமி' என்னும் பெயரிலேயே தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். அவர் அரச வமிசத்தைச் சாராத ஒரு சிங்களவர் என பின்னர் அறிந்த போது அவரது தலைமையும் நிராகரிக்கப்பட்டது. பிரித்தானிய காலனித்துவவாதிகளுக்கு எதிரான போராட்டத்தில் ஒரு தமிழ் தலைவனின் கீழ் அணிதிரள சிங்கள மக்கள் விரும்பினர் என்பதற்கு இது மிகச் சிறந்த உதாரணமாகும். 1820, 1823, 1824 முதல் 1848 வரை எழுச்சியுற்ற போராட்ட அலைகள் ஒற்றுமை இன்மை காரணமாக தோல்வி கண்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழு நாட்டையும் அடிமைப்படுத்திய பின்னர், துப்பாக்கியைக் கையில் ஏந்திய வண்ணம் சட்டப்புத்தகம் மூலம் தமது தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வது ஆங்கிலேயருக்கு இலகுவாயிருந்தது. தோட்டப் பயிர்ச் செய்கையின் பொருட்டு காணிகளைக் கொள்ளையடிப்பதே அன்று அவர்களின் பொருளாதாரத் தேவையாக இருந்தது. 'தரிசு நிலச் சட்டம்' அவர்களால் திணிக்கப்பட்ட மற்றுமோர் சட்டமாகும்.

## கண்டி இராச்சியத்தில் உண்டான மாற்றங்கள்

முதலில் ஆங்கிலேயர் கோப்பிப் பயிர்ச் செய்கையை ஆரம்பித்தனர். போர்த்துக்கேயர் கறுவாத் தோட்டங்களில் அடிமைகளைக் கொண்டு எவ்வாறு சுரண்டல் நடத்தினார்களோ, அவ்வாறே ஆங்கிலேயரும் கோப்பிப் பயிர்ச்செய்கை மூலம் சுரண்டத் தொடங்கினர் 'இராசகாரிய முறை' என்னும் சட்டத்தைப் பயன்படுத்தி இலவசமாக வேலை வாங்கப்பட்டது. பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்கென சிங்கள விவசாயிகளின் காணிகள் அபகரிக்கப்பட்டன. சிங்கள விவசாயிகள் தமது மரபுவழிக் காணிகளிலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர். கண்டி கிராமவாசி தான் தனது தாய் நாட்டில் வாழவில்லை என முதன் முறையாக உணரத்தொடங்கினான்.

எவ்வாறாயினும் கண்டிக் கிராமவாசிகளை பெருந்தோட்டங்களில் அடிமைகளாக ஈடுபடுத்துவது அவ்வளவு சுலபமான காரியமாக அமையவில்லை. கம்பளைக்கு அண்மையில் முதன் முதலில் கோப்பித் தோட்டம் ஒன்றை ஆரம்பித்த 'ஜோர்ஜ் ஃபேர்ட்' இந்தியாவிலிருந்தே கூலிகளை வரவழைக்க வேண்டியிருந்தது. இலவசமாக அல்லது கட்டாயத்தின் பேரில் உள்நாட்டுத் தொழிலாளர்களிடமிருந்து வேலை வாங்க முடியாத போது மிகக் குறைந்த சம்பளத்திற்கு இந்தியாவிலிருந்து கூலிகள் இறக்குமதி செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கோப்பி, தேயிலை அல்லது ரப்பர் பயிர்ச் செய்ய முடியாத காரணத்தால் கண்டி இராச்சியத்தில் காணிகள் கொள்ளையிடப்பட்டது போல் யாழ்ப்பாணத்தில் காணிகள் அபகரிக்கப்படவில்லை. எனவே யாழ்ப்பாணத்து மரபு வழி விவசாயி கண்டி இராச்சியத்தின் விவசாயியைப் போல பயமுறுத்தல்களுக்கு இலக்காகவில்லை. புதிய பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைக்கு கண்டிய கிராமவாசிகளைப் போலவே யாழ்ப்பாணத்து தமிழ் கிராமவாசிகளையும் ஆங்கிலேயரால் ஈடுபடுத்த முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டிக் கிராமவாசியின் வாழ்க்கையில் அனைத்தையும் பெற்றுத் தந்த வளமான காணிகளை இழக்க நேரிட்டமையால் ஆங்கிலேயர்களுக்கு எதிரான அவர்களின் வைராக்கியம் பல மடங்குகளால் அதிகரித்தது இதன் விளைவாகவே 1848ல் கிளர்ச்சி ஏற்பட்டது. ஒரு புறம் தமது சகல உடைமைகளையும் அபகரித்த எதிரியான ஆங்கிலேயரின் கீழ் பிச்சைச் சம்பளத்திற்கு அடிமைத் தொழில் செய்த இந்தியக் கூலிகளையும் கண்டிக் கிராமவாசிகள் வெறுத்தனர். மறுபுறம் கண்டிக் கிராமவாசிகளுக்கும தோட்டத் தொழிலாளர்களுக்கும் இடையே எதுவிதத் தொடர்பும் ஏற்படாத வகையில் ஆங்கிலேய ஆட்சியாளர் தகுந்த நடவடிக்கைகளை எடுத்திருந்தனர். தொழிலாளர்களுக்கு அவசியமானவற்றை கொந்தராத்துக்காரர் மூலம் பெற்றுக் கொடுத்தமையால், தோட்டத் தொழிலாளர்களுக்கு கிராமவாசிகளுடன் எதுவித கொடுக்கல் வாங்கலும் இருக்கவில்லை. இவ்வாறாக கிராமவாசிகளுடனான தொடர்பு முற்றிலும் தவிர்க்கப்பட்டது.

அப்பாவி தோட்டத் தொழிலாளர்களும் உண்மை நிலைமையை அறிந்திருக்கவில்லை; அறிந்திருந்தாலும் அவர்களால் ஒன்றும் செய்திருக்கவும் முடியாது; அவர்கள் தேயிலைச் செடிகளுக்கே தமது முழு வாழ்வையும் அர்ப்பணிக்க நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தனர். தொடர்ச்சியாகப் பல பரம்பரைகளாக தோட்டத் தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டியே இலங்கையின் பெரும்பான்மையினர் வாழ்ந்துள்ளனர் என்பதே உண்மை நிலைமையாகும். எமது தேசிய வருமானத்தின் பெரும் பகுதியை தோட்டத் தொழிலாளர்களே உற்பத்தி செய்துள்ளனர். இதில் எதுவித விவாதமும் இருக்க முடியாது. அரசியலில்- இலாப மீட்டுவதற்கும், சந்தர்ப்பவாதக் காரணங்களாலும், அறியாமையாலும் தோட்டத் தொழிலாளர்களின் உண்மை நிலையை முழுநாடும் மறந்துள்ளது. பிரித்தானிய ஆட்சியாளர்கள் எமது நாட்டு மக்களின் உரிமைகளை அபகரித்துக்கொண்டு, அவர்களின் பொருளாதாரத்தையும் கல்வியையும், பண்பாட்டையும் சீரழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டனர். 'பிரித்தாளும் கொள்கையை', தேசிய வாழ்வின் சகல அம்சங்களுக்கும் புகுத்தினர். சாதி, இனம், பிரதேசம் என்ற ரீதியிலான சகல வேற்றுமைகளையும் பிரித்தானியர் பிரித்தாள்வதற்குப் பயன்படுத்தினர். ஆனால் இவற்றை எதிர்த்து தேசிய இயக்கங்கள் தோன்றின. இவ்வியக்கங்களை அடக்கியொடுக்குவதற்கும் பல உபாயங்கள் மேற்கொள்ளப்பட்டன.

உள்நாட்டு மக்கள் பிரிவினர் ஐக்கியப்பட்டால் தேசிய இயக்கங்களால் தமக்குப் பயமுறுத்தல்கள் ஏற்படும், என்று அறிந்த பிரித்தானியர் மக்கள் மத்தியில் பிளவுகளை ஏற்படுத்த சகல நட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிக்கைகளையும் எடுத்தனர். கொல்டரூக் ஆணைக்குழுவின் சீர் திருத்தங்கள் இதற்குப் பெரிதும் வழிகோலின.

சட்டவாக்கத்துறைக்கு இனவாத அடிப்படையில் பிரதிநிதிகளை நியமிப்பதற்கு சட்டங்கள் இயற்றப்பட்டன. ஆனால், பிற்பட்ட காலத்தில் பிரதிநிதிகள் நியமனஞ் செய்வதற்குப் பதிலாக தெரிவு செய்யப்பட வேண்டும் என ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. எனினும் 1912லும் மக்கள் பிளவுபடக் கூடிய வகையில் பிரதிநிதிகள் நியமனஞ் செய்யப்பட்டனர். தாழ்நிலச் சிங்களவர் (2) கண்டிச் சிங்களவர் (2), தமிழர் (2), முஸ்லீம்கள் (1) என்ற முறையில் பிரதிநிதிகளை நியமித்து பிரித்தாளும் தந்திரத்தைக் கையாண்டனர். எவ்வாறுயினும் படித்த இலங்கையர் தமது ஏகப்பிரதிநிதியாக திரு. பொன்னம்பலம் இராதநாதன் அவர்களை நியமித்தனர். இது பிரித்தானிய ஆட்சியாளருக்கு பெரும் சவாலாக அமைந்தது.

தேசிய ஐக்கியத்தை ஆங்கிலேயர் சகிக்கவில்லை. எனவே கம்பளையில் நடந்த ஒரு சம்பவத்தை வைத்துக் கொண்டு சிங்கள - முஸ்லீம் இனவாதத்தை தூண்டிவிட்டனர் இதன் மூலம் பெரும்பான்மை இனத்திற்கும் சிறு பான்மை இனங்களுக்குமிடையே அவநம்பிக்கை உருவாக்கப்பட்டது. பெரும்பான்மை சிங்கள பௌத்த மக்களுக்கு எதிராக கொடிய அடக்கு முறை கட்டவிழ்த்துவிடப்பட்டதன் மூலம் இனவாதத்தை மேலும் விரிவாக்க முடிந்தது. சகல இனங்களும் ஒன்றுபட்டு பொது எதிரியான காலனித்துவ ஆட்சியை எதிர்த்துப் போராட வேண்டிய நேரத்தில் இலங்கை மக்கள், இனரீதியாகப் பிளவுபட்டு தத்தமது சிறு உரிமைகளுக்காக போராட்டத்தை திசைதிருப்பினர். இது பிரித்தாளும் கொள்கையின் விளைவாகும். திருவாளர்கள் பொன்னம்பலம் இராமநாதன், பொன்னம்பலம் அருணாசலம் போன்ற தேசபக்தர்களால் கூட இந்நிலைமையை மாற்றியமைக்க முடியவில்லை.

1919ல் தேசிய மகாசபை அமைக்கப்பட்டது. ஆனால் மேற்குறிப்பிட்ட ஐக்கியமின்மை காரணமாக நாட்டில் பரந்துபட்ட ஆதரவு கிடைக்கவில்லை. தேசிய ஐக்கியத்தை சீர்குலைப்பதற்காக 1921ல் மேலும் பல சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. மேற்படி அரசியல் சீர்திருத்தங்கள் மூலம் பல புதிய பிளவுகள் ஏற்பட்டன. கண்டிச் சிங்களர்களையும் இந்திய வம்சாவழியினரையும் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு இரண்டு புதிய ஆசனங்கள் சட்டவாக்கத்துறைக்கு ஒதுக்கப்பட்டன. இதனால், கண்டிச் சிங்களவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ் நிலச் சிங்களவர் என்ற வித்தியாசமும், இந்தியத் தமிழர் இலங்கைத் தமிழர் என்ற வேற்றுமையும் வலுவடைந்தன. பெருந் தோட்டச் சொந்தக்காரர்களுக்கும் தனியான பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டது.

இப்பேதங்கள் காரணமாக, ஐக்கியத்தை சீர்குலைக்கும் அன்னியர்களை விரட்டியடிப்பதற்குப் பதிலாக தமது சகோதர மக்களுடன் பிணக்குகளை ஏற்படுத்திக்கொண்டு ஆட்சியாளரின் இரக் கத்தின் பேரில் ஏதோ சிறு சலுகையை மாத்திரமே பெற முடிந்தது. இதே சமயம் இனரீதியான கோரிக்கைகள் அரசியல் இயக்கங்களி லும் பிரதிபலித்தன. தேசிய மகா சபையில் கண்டிச் சிங்களவர் கரையோரச் சிங்களவர் - தமிழர் ஆகிய மூன்று பிரிவினரும் அங்கம் வகித்தனர். தமக்கு மூன்றிலொரு பகுதி பிரதிநிதித்துவம் கோரிய தமிழர்களில் ஒரு பிரிவினர் இலங்கை தேசிய மகா சபையிலிருந்து விலகிச் சென்றனர். நேரடியாகவே இனவாதம் அரசியலில் புகுந்த இச் சந்தர்ப்பம் காலனித்துவ வாதிகளுக்கு சாதகமாகவே அமைந் தது. தேசிய விடுதலை ஒரு புறமிருக்க, சிங்கள – தமிழ் – முஸ்லீம் மக்கள் பிரிவினர் பிரதிநிதித்துவம் பற்றிய பிணக்குகளை உருவாக் கிக் கொண்டு அரசியல் ரீதியில் மேன் மேலும் பிளவுபட்டனர்.

*1931*ல் அரசுக் கழகம் அமுலாக்கப்பட்ட போது இன வாத மும் நடைமுறைக்கு வந்தது. இந் நிலைமையின் கீழ் ஒரு குறிப் பிட்ட இனத்திற்கு அரசியல் அதிகாரம் கிடைக்கும் என்ற கருத்து ஏற்பட்டால் ஏனைய இனங்கள் சந்தேகத்தின் பேரில் போராடு வதைத் தவிர்க்க முடியாது. *1936*ல் இது நடந்தது. நிருவாக சபையில் சிங்களவர்கள் மாத்திரம் இடம் பெற்றமையால் சிறு பான்மை இனங்களின் கோரிக்கைகள் மேலும் வலுப்படுத்தப்பட் டமை இயல்பானதே. இதன் விளைவாகவே தமிழ் காங்கிரஸ் ''ஐம்பதுக்கு ஐம்பது'' என்ற கோரிக்கையை முன் வைத்தது.

### இலங்கையின் விடுதலைப் போராட்டத்தில் தமிழர்களின் பங்கு

முதலாவது உலக மகா யுத்தத்தின் பின், இலங்கையில் விடு தலைப் போராட்டத்திற்குப் பதிலாக சீர்திருத்தவாத இயக்கமே உருவானது. அது ஆங்கிலம் கற்ற மத்திய வகுப்பினருக்கு வரை யறுக்கப்பட்டிருந்தது. இவ்வியக்கம் இலங்கைக்குப் பூரண சுதந்தி ரம் கோரவில்லை. அதற்குப் பதிலாக பிரித்தானிய சாம்ராச்சியத் தின் ஒரு பகுதியாக இருந்து கொண்டு, பெறக்கூடிய சில சலுகைகளை யே கோரியது. இக் கோரிக்கை விடுத்து 25 ஆண்டுகள் கடந்து விட்ட பின்னரும் - இரண்டாவது உலக மகா யுத்தத்தின் முடிவிலும்- எமது தலைவர்கள் பிரித்தானிய அரசாங்கம் வழங்க விரும்பிய சலு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைகளை மாத்திரமே கோரினர். சர்வஜன வாக்குரிமை மூலம் தெரிவு செய்யப்பட்ட அரசுக் கழகமும் பிரித்தானிய அரசாங்கத்திற்குப் பணிந்து வரையறுக்கப்பட்ட சில அதிகாரங்களுடன் மாத்திரம் திருப்தி கண்டது. இலங்கையின் பாதுகாப்பு – நிதி – நிருவாகம் என்பன பிரித்தானிய அரசாங்கத்தின் கையிலேயே இருந்தது. பூரண விடுதலை பற்றிய கருத்துக்களை ஒரு சிலர் கொண்டிருந்தாலும் அவை விடுதலைப் போராட்டத்திற்கு அடிகோலவில்லை.

இக்கால கட்டத்தில் இந்தியாவிலும் சுதந்திரப் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. மகாத்மா காந்தியின் இயக்கமும் இந்திய சுதந்திரப் போராட்டத்தின் ஓர் அம்சமாகத் திகழ்ந்தது. இலங்கையின் கலாசார மரபுகளைப் பற்றி ஆனந்த குமாரசுவாமி எடுத்து விளக்கினார். அவரின் சுதந்திர வேட்கை இதன் மூலம் தெளிவாகின்றது. கொழும்பு ஆனந்தாக் கல்லூரி போன்ற பௌத்த பாடசாலைகளில் சிங்களம் கற்பித்தல் கைவிடப்பட்டமையை 1905ல் ஆனந்த குமாரசுவாமி கண்டித்தார். இந் நாட்டின் மாணவர்களுக்கு தாய் மொழி மூலம் சிறப்பாக கல்வியூட்டப்படவேண்டும் என்ற பிரேரணையை 1867ல் யாழ்ப்பாணத்து இளைஞர் சங்கம் 'மோகன்' ஆணைக்குழுவிடம் சமர்ப்பித்து 1911ல் 'பெக்வி யொட்' கமிட்டியின் முன்னிலையில், தாய் மொழி மூலம் கல்வியூட்டப்பட வேண்டும் என சேர் பொன்னம்பலம் அருணாசலம் வலியுறுத்தினார்.

பேராசிரியர் ஜே. ஈ. ஜயசூரிய பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"சிங்களவர்கள் ஆங்கில மொழி மூலம் கடமையாற்றத் தயாரான வேளையில் சிங்கள – தமிழ் மொழிகளின் உரிமைக்காகத் தமிழ் தலைவர்களே போராடினார்கள். இதற்கு ஏ. பீ. ப்ரெஸ்ட்டர் என்ற ஆங்கிலேயரின் ஒத்துழைப்பும் கிடைத்தது."

'தாய் மொழி மூலம் கல்வி' என்ற தலைப்பில் 1945ல் திரு. கே. நேசையா முன் வைத்த கருத்துக்கள் முக்கியமானவை. இலங்கைப் பல்கலைக் கழகத்தை ஆரம்பிக்க உழைத்தவர்களில் சேர். அருணாசலம் ஒருவர், இவர் இலங்கைத் தேசிய மகா சபையை ஆரம்பித்து வைத்த உறுப்பினர்களில் முக்கியமானவர். இவ்வாறாக ஏகாதிபத்தியத்தை எதிர்த்து தாய் மொழி மூலக் கல்விக்காக தமிழ்த் தலைவர்கள் முன்னின்று போராடினர்.

தேசிய விடுதலைக்கான அரசியல் இயக்கமாக இலங்கை சம சமாஜக் கட்சி 1935ல் அமைக்கப்பட்டது. சிங்கள மொழியை வளர்ப்பதற்கான இயக்கமும் நாடு பூராவும் பரவியது. அரசாங்கச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருமங்கள் சிங்கள மொழி மூலம் நடைபெற வேண்டும் என்பது இலங்கை சமசமாஜக் கட்சியின் கொள்கையாக அமைந்தது.

“பொலிசாருக்குச் செய்யப்படும் முறைப்பாடுகள் அவை செய்யப்படும் மொழியிலேயே பதிவு செய்யப்பட வேண்டும்.”

“நகர்ப்புற – பொலிஸ் நீதிமன்றங்களில் தேசிய மொழிகளிலேயே வழக்குகள் விசாரணை செய்யப்பட வேண்டும்.” என்ற பிரேரணைகளை 1936ல் திரு. பிலிப் குணவர்தன முதன் முதலில் சமர்ப்பித்தார். 1936ல் இவை அங்கீகரிக்கப்பட்டன.

**யாழ்ப்பாண இளைஞர் சங்கம்**

இலங்கையின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு தமிழர்களின் ஒத்துழைப்பு தொடர்ச்சியாக கிடைத்து வந்தது. ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தை புரட்சிகர வடிவில் நடத்த தமிழ் இயக்கங்கள் முன் வந்தன. யாழ் இளைஞர் சங்கம் அன்று இச் சமூக அரசியல் இயக்கத்திற்குத் தலைமை தாங்கியது. யாழ் இளைஞர் சங்கம் 1927ல் இந்திய விடுதலை இயக்கத்தின் தந்தையாகிய மகாத்மா காந்தி அடிகளை இலங்கைக்கு வரவழைத்தது. சுதந்திரப் போராட்ட இயக்கத்தின் தலைவர்களில் ஒருவர் என்ற முறையிலேயே அவர் இங்கு வரவழைக்கப்பட்டார். யாழ்ப்பாணத்தில் தீண்டத்தகாதோர் என்றழைக்கப்பட்ட மக்களின் பிள்ளைகளை பாடசாலைகளில் சேர்க்கும் இயக்கத்தை யாழ் இளைஞர் சங்கம் முன்னின்று நடத்தியது.

இங்கிலாந்து மன்னனின் பிறந்த தின விழாவை யாழ் இளைஞர் சங்கமே முதன் முறையாகப் பகிஷ்கரித்தது. இச் சங்கத்தின் வருடாந்த மாநாட்டில், 1931 அரசுக் கழக தேர்தலை பகிஷ்கரிக்கத் தீர்மானிக்கப்பட்டது. டொனமூர் ஆணைக்குழுவின் அரசியல் அமைப்பு அரசுக் கழகத்திற்கு பூரண ஆட்சி அதிகாரங்களை வழங்காமையை எதிர்த்தே இப் பகிஷ்கரிப்பு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. 1932 ஏப்ரல் புத்தாண்டுத் தினத்தில் யாழ் மைதானத்தில் முதல் முறையாக (பிரித்தானிய தேசியக் கொடிக்குப் பதிலாக) இலங்கைத் தேசியக் கொடி பறக்கவிடப்பட்டது. தேசிய இனங்களின் ஐக்கியத்திற்காக யாழ் இளைஞர் சங்கம் அளப்பரிய பல சேவைகளைச் செய்துள்ளது.

திரு. ஜே. ஆர். ஜயவர்தனவின் பிரேரணைக்கமைய 1944ல் அரசுக் கழகம் சிங்களம் – தமிழ் ஆகிய மொழிகளுக்கு சம உரிமை வழங்க வேண்டும் என அங்கீகரித்தது. திரு எஸ். டப்ளியூ. ஆர். டி. பண்டாரநாயக்காவும் இதற்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கினர். ஆனால், 1956ல் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்று




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதற்கு 'சிங்களம் மாத்திரம்' என்ற சுலோகத்தைப் பயன் படுத்தினர். சிங்களம் மாத்திரம் என்பது இலங்கை சிங்களவர்களுக்கு மாத்திரம் உரியது என்பதை மறைமுகமாகக் கூறுவதாகுமென இலங்கையின் சனத்தொகையில் 20% சத வீதமான – தமிழர்கள் சொல்வதில் நியாயம் உண்டு. சிங்கள மொழி காரணமாக பல இடையூறுகளை எதிர்நோக்கியுள்ள தமிழர்களின் இச் சந்தேகம் இயல்பானதாகும் ●

(இந்நூலில் இடம் பெறும் கவிதைகள் (1975 ஆம் ஆண்டு தேசிய ஒருமைப்பாட்டு எழுத்தாளர் மாநாட்டு மலரில் வெளியான "வடக்கு மனிதனும் தெற்கு மனிதனும்" என்ற கவிதைத் தொகுதியிலிருந்து மறு பிரசுரம் செய்யப்பட்டுள்ளது.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1981 மே மாதம் 31 ஆந் திகதி இரவு தீயிட்டு அழிக்கப்பட்ட யாழ்ப்பாண பொதுச் சந்தையின் தோற்றம்




அதே தினத்தில் தீக்கிரையாக்கப்பட்ட சுன்னுகம் பொதுச் சந்தையின் சின்னபின்னங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1981 ஜூன் 1 ஆந் திகதி தீக்கிரையாக்கப்பட்ட
யாழ்ப்பாண நூல் நிலையத்தின் வெளிப்புறத் தோற்றம்



மோசமான முறையில் நாசமாக்கப்பட்ட
யாழ் நூல் நிலையத்தின் அகத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரபல தமிழ்க் கவிஞரான
சோமசுந்தரப் புலவரின் உருவச் சிலை நாசமாக்கப்பட்டுள்ளது.




தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமை அலுவலகம்
உடைத்து எரிக்கப்பட்ட நிலையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




*1979* ஜூலை *13*ல் இன்பமும் அவரது மைத்துனர் செல்வமும் நடுத்தெருவில் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.



*1981* ஜூன் 4 ஆந் திகதி த. வி. கூட்டணித் தலைவர் மு. சிவசிதம்பரத்தின் அலுவலகத்தில் பாலஜோதி என்னும் இளைஞர் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தீக்கிரையான ஈழநாடு பத்திரிகை அலுவலகத்தின் தோற்றம்
அருகில் தீக்காயங்களுக்குள்ளான ஊழியர் இருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் அத்தியாயம்

நவ காலனித்துவ சகாப்தம்.

## தமிழனா? சிங்களனா? முஸ்லீமா?

நீ யோர் தமிழனா?
இல்லை, இல்லை
நீ யோர் சிங்களனா?
இல்லை, இல்லை.
நீ யோர் முஸ்லிமா?
இல்லை, இல்லை.

அப்படியானால்—
நாம் யார்?
நாம் யார்?
உரத்த குரலில் மூவரும் கூவினர்.

நீங்கள் மூவரும் இலங்கையின் மக்கள்
நீங்கள் மூவர் இவ்வன்னையின் புதல்வர்
நீங்கள் மூவரும் இந்நாட்டின் உழைப்போர்
நீங்கள் மூவரும் கஷ்டப்படுவோர்
நீங்கள் மூவரும் இந் நாட்டிற்
சுரண்டப்படுவோர், சுரண்டப்படுவோர்.

ஒரு தாய் மக்களே
உழைக்கும் மக்களே
உங்களுக்கென்றொரு காலம் உண்டு

எனவே—
இலங்கை மக்காள்! என் அரும் புதல்வீர்!
உங்கள் பேதம் அகற்றுவீர் முதலில்
ஒருவரை ஒருவர் இப்போ பாரீர்!
நீங்கள் யாவரும் ஒரே அணி, ஒரே வரி

நீங்கள் யாவரும் ஒரே நிறம், ஒரே குரல்
உங்கள் யாவர்க்கும்
நோக்கமும் ஒன்றே, வழியும் ஒன்றே.

இலங்கை மக்காள் என் அரும் புதல்வீர்
உங்கள் உழைப்பின் பெறுமதி மீண்டும்
உமக்குக் கிடைக்கும் புதுயுகம் ஒன்றே
அமைக்க மூவரும் ஒன்றாய் ஆகுக.

● மௌன குரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மைக்கால வரலாற்றுச் சம்பவங்கள் காரணமாக சிங்கள இனத்திற்கும், ஏனைய இனங்களுக்கும் இடையே இனவாதப் பிணக்குகள் ஏற்படுவதற்கான காரணிகள் இவ்வத்தியாயத்தில் ஆராயப்படும். இன்னுமொரு முறையில் கூறுவதாயின், ஏகாதிபத்திய ஆட்சியின் கீழ் விதைக்கப்பட்ட இனவாத விதைகள் எவ்வாறு முளைவிட்டு மரமாகிப் பூத்துக் காய்க்கத் தொடங்கின என்பதே இங்கு எடுத்துக் கூறப்படுகின்றது. 'சுதந்திரத்தன்' பின்னர் ஆட்சிபீடம் ஏறிய சகல அரசாங்கங்களும் தேசிய ஐக்கியத்தை ஏற்படுத்துவதற்குப் பதிலாக இனவாதப் பிணக்குகளை, மேலும் வலுவடையச் செய்யும் முறையிலேயே நடந்து கொண்டுள்ளன.

எமது பரிசீலனைக்கு இலகுவாக அமையும் முறையில் அண்மைக்கால வரலாற்றை பின்வருமாறு பிரித்து, அக் காலகட்டங்களில் நடந்த சம்பவங்களை மிகச் சுருக்கமாகக் குறிப்பிடுகின்றோம்.

1948 முதல் 1956 வரையிலான கால கட்டம்
1956 முதல் 1970 வரையிலான கால கட்டம்
1970 முதல் 1977 வரையிலான கால கட்டம்
1977 முதல் பிற்பட்ட கால கட்டம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1948 முதல் 1956 வரையிலான கால கட்டம்

1948க்குப் பிற்பட்ட காலம் இலங்கையின் வரலாற்றின் ஒரு முக்கிய கால கட்டம் எனச் சிந்திக்க நாம் பழகியுள்ளோம். இலங்கைக்கான 'போலிச் சுதந்திரம்' 1948 லேயே கிடைத்தது. இச் 'சுதந்திரத்திற்கு'ப் பின்னர் தேசிய சிறு பான்மை இனங்களின் சுதந்திரம் படிப்படியாகக் குறைந்தது.

எமது நாட்டின் எந்தவொரு இனத்திற்கும் உண்மையான சுதந்திரம் கிட்டவில்லை. ஆனல், முதலாளி வர்க்கத்திற்கு மிகச் சுதந்திரமாக நடந்து கொள்வதற்கு வசதிகள் செய்து கொடுக்கப் பட்டன. இவ்வாறன நடவடிக்கைகளின் போது சிங்களத் தேசிய இனம் நன்மையடைந்த சந்தர்ப்பங்களும் இல்லாமலில்லை. இதன் காரணமாக ஏனைய தேசிய இனங்களுக்கு ஏற்பட்ட தடைகளையும் இடையூறுகளையும் தவிர்ப்பதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்காது, சிறுபான்மையினருக்கு பெரும் அநீதி விளைவிக்கப்பட்டது. தமக்கு நன்மை ஏற்படும் போது, பிறருக்கு அதனல் தீமை ஏற்பட்டால் அதனைத் தவிர்ப்பதற்கு பொது மக்களை ஊக்கப்படுத்த வேண்டும். ஆனல் குறுகிய அரசியல் இலாப நோக்கோடு இலங்கை அரசியல் வாதிகளின் பெரும்பான்மையினர் இதைச் செய்யத் தவறிவிட்டனர்.

1947 இன் அரசியல் யாப்பு தயாரிக்கப்படுவதற்கு முன்னர் கற்றோரிடமிருந்து ஆலோசனைகள் கோரப்பட்டன. சிங்கள—தமிழ் தேசிய இனங்களைப் பிரதிநிதித்துவஞ் செய்த இலங்கையின் பல கல்விமான்கள் தேசிய இனங்களின் உரிமைகளைப் பற்றி கருத்துத் தெரிவித்தனர்.

29வது வாசகம்

இவ் வரசியல் யாப்பு தயாரிக்கப்பட்ட போது சகல தேசிய சிறு பான்மைச் சமூகங்களைப் பாதுகாக்கும் விதிகள் 29 (2) ஆம் வாசகத் தில் வலிந்து உரைக்கப்பட்டது. பிற் காலத்திலும் இவ்வுரிமை களைப் பாதுகாக்கக் கூடியவாறே அவ்வாசகம் அமைந்தது. பாராளு மன்றத்தின் 2/3 பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றேனும் இவ் வாசகத்தை மாற்றியமைக்க முடியாதிருந்தது. ஆனல் 1972 ஆண்டு குடியரசு அரசியல் யாப்பு மூலம் சிறுபான்மையினருக்கான பாது காப்பு நீக்கப்பட்டது சிறுபான்மைச் சமூகங்களின் பாதுகாப்பிற் கான விதிகள் பின்வருமாறு வலிந்து உரைக்கப்பட்டிருந்தது.

"29 (1) இத் தீவின் அமைதிக்கும் ஒழுங்குக்கும் நல்லாட்சிக்கு மாகப் பாராளுமன்றமானது, இந்தக் கட்டளைகளின் ஏற்பாடுகளுக்கமையச் சட்டங்களை இயற்றும் அதிகா ரத்தைக் கொண்டுள்ளது."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

29 (2) இந்தச் சட்டங்கள் எதுவும்,

(அ) எந்த மதத்தைக் கடைப்பிடிப்பதைக் கட்டுப் படுத்தவும் தடை செய்யவும் கூடாது;

(ஆ) ஏனைய சமூகங்களையோ, மதங்களையோ சார்ந்த வர்கள் உட்படுத்தப்படாத கட்டுப்பாடுகளை யும் குறைபாடுகளையும் ஏதாவது ஒரு சமூகத் தையோ, மதத்தையோ சார்ந்தவர்கள் உட் படுத்தப்படக்கூடாது;

(இ) ஏனைய சமூகங்கட்கோ, மதங்கட்கோ வழங்கப் படாத முன்னுரிமைகளையும் சிறப்புக்களையும் ஏதும் ஒரு சமூகத்திற்கோ மதத்திற்கோ வழங் கக் கூடாது.

**1948ல் குடியுரிமை பறிக்கப்பட்டது**

1948 டிசெம்பர் மாதம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்ட குடியுரிமைச் சட்டம், இலங்கையில் தோட்டப் பகுதிகளில் வாழ்ந்த தமிழ் மக்களின், வாக்குரிமையையும்-ஆட்சியுரிமையையும் அரசுரிமையையும் - குடியுரிமையையும் பறித்தது.

தோட்டப் பகுதிகளில் வாழ்ந்த தமிழ் மக்கள் இரண்டாந்தரக் குடி மக்களாக்கப்பட்டனர். இதனால் ஏனைய குடி மக்களுக்கு வழங் கப்பட்ட பங்கீட்டரிசிப் புத்தகம் இவர்களுக்கு வழங்கப்படவில்லை. இலவசக் கல்வி மறுக்கப்பட்டது; அரசாங்க அல்லது தனியார் துறைகளில் வேலை வாய்ப்பு மறுக்கப்பட்டது; பல்கலைக் கழக கல்வி மறுக்கப்பட்டது. இலங்கையின் ஒரு சிறு துண்டுக் காணிக்கேனும் அவர்கள் உரிமை கொண்டாட முடியவில்லை. தோட்டப் பகுதி களில் வாழ்ந்த ஏழைத் தமிழ் மக்களுக்கே இத்தகைய சகல அடிப் படை உரிமைகளும் மறுக்கப்பட்டன. ஆனால் குடியுரிமை இழந்த ஒரு சில பணம் படைத்தோருக்கு மாத்திரம் கௌரவப் பிரஜாவுரி மை வழங்கப்பட்டது.

இலங்கை 'சுதந்திரம்' அடைவதற்கு முன்னர் இந்திய வம்சா வழித் தமிழ் மக்களுக்கு வாக்குரிமை இருந்து வந்தது. குடியுரி மைச் சட்டம் இவ்வுரிமையையும் பறித்தது. அவர்கள் நாடற்ற வர்களாக்கப்பட்டனர். 1948 ஆம் ஆண்டு பெற்ற சுதந்திரம் 'எமது நாடு எமக்கு உரிமையானது' என்ற போலி உணர்வை ஏற் படுத்தும் அதே நேரத்தில் அதனை உறுதிப்படுத்துவதற்கு இலங்கை 'சுதந்திரம்' அடைந்து 10 மாதங்களுக்குப் பின்னர் தமிழ் தோட் டத் தொழிலாளர்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டது. இது இன வாதம் ஆகமாட்டாதா? இவ் வேற்றுமை பிற்பட்ட காலத்தில் மேலும் பரவலாக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1949**– பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட "இந்திய பாகிஸ்தானிய வதிவாளர் (குடியுரிமை)ச் சட்டம்" இலங்கையில் வாழ்ந்த இந்திய வம்சாவழித் தமிழ் மக்களுள் 95 சத வீதத்தினரை நாடற்றவர்களாக்கியது.

**1949**– "இலங்கைப் (பாராளுமன்ற) தேர்தல் திருத்தச் சட்டம்" தமிழ் தோட்டத்தொழிலாளரின் வாக்குரிமையை பறித்தது. தோட்டத் தொழிலாளருக்கு வாக்குரிமை இருந்த போது 8 பாராளுமன்ற உறுப்பினர்களை அவர்கள் தேர்ந்தெடுத்தனர்; மேலும் 20 தேர்தல் தொகுதிகளில் இடதுசாரி வேட்பாளர்களின் வெற்றிக்குக் காரணமாயிருந்தனர்.

## 1956 முதல் 1970 வரையிலான காலகட்டம்

1956ல் மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் உருவாக்கப்பட்டமை இலங்கையின் பெரும்பான்மையினரான சிங்கள மக்கள் மத்தியில் பெருமகிழ்ச்சியை ஏற்படுத்தியதில் எதுவித சந்தேகமும் இல்லை. 'சிங்கள மொழியை அரசகரும மொழியாக்குதல்' மக்கள் ஐக்கிய முன்னணியால் முன் வைக்கப்பட்ட பிரதான சுலோகமாகும். உண்மையில் அது ஒரு சிறந்த நடவடிக்கையாகும். ஆனால் அதே நேரத்தில் இனவாதத்தை விரிவாக்குவதற்கு இது ஒரு காரணியாக அமைந்தமையை தவிர்ப்பதற்கு எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாமை பெருங் குறைபாடாகும்.

சிங்களம் அரசகரும மொழியான பின்னர் தமிழ் அரசாங்க ஊழியர்கள் பல இடையூறுகளை எதிர் நோக்கினர். அவற்றிற்கு சரியான தீர்வுகள் முன் வைக்கப்படவில்லை. இதனால் தமிழ் அரச ஊழியர்கள் உரிய வயதெல்லைக்கு முன்னரே சேவையிலிருந்து ஓய்வு பெற்றனர்; தொழில் தேடி வெளிநாடுகளுக்குச் சென்றனர். அரசாங்க சேவையில் சேர்வதற்குத் தமிழர் அதிக அக்கறை காட்ட வில்லை.

1956 ஜூன் 14 ஆம் நாள் சிங்கள மொழி மட்டுமே அரச கரும மொழியாகும் என்ற சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேறியது. 1956 இன் 33 ஆம் இலக்க அரச கரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய தமிழ் அல்லது ஆங்கில மொழி மூலம் அரச சேவையில் சேரும் சகல ஊழியர்களும் மூன்று ஆண்டுகளில் சிங்கள மொழியில் தேர்ச்சி பெற வேண்டுமென நிர்ப்பந்திக்கப்பட்டனர். அவ்வாறு தேர்ச்சி பெறத் தவறுவோரின் வழமையான சம்பள உயர்வு இடை நிறுத்தி வைக்கப்பட்டது. குறிப்பிட்ட கால எல்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுள் சிங்கள மொழியில் தேர்ச்சி பெறத் தவறிய அரச ஊழியர்கள் வேலை நீக்கஞ் செய்யப்பட்டனர்.

கோடீஸ்வரன் வழக்கு

திரு. கோடீஸ்வரன் அரச சேவையில் பணிபுரிந்த எழுது வினைஞர்களுள் ஒருவர். சிங்களத் தேர்ச்சி இன்மையைக் காரணங்காட்டி அவருக்கு வழங்கப்படவேண்டிய வழமையான சம்பள உயர்வு இடை நிறுத்தி வைக்கப்பட்டது. இதனை எதிர்த்து திரு. கோடீஸ்வரன் அரசின் மீது வழக்குத் தொடர்ந்தார்.

"1956 ஆம் ஆண்டின் 33வது சட்டமாகிய அரச கரும மொழிச் சட்டம், சோல்பரி அரசியலமைப்பின் 29 (2) வாசகத்திற்கு முரணானது என நீதி மன்றத்தில் கோடீஸ்வரனின் சார்பில் எடுத்துரைக்கப்பட்டது."

அரசு சார்பில் வாதாடிய சட்டமா அதிபர், அரசு ஊழியர் நீதி மன்றத்தில் நீதி கோர முடியாது எனவும், அரச ஊழியர்களின் சேவை நிபந்தனைகளைக் காலத்துக்குக் காலம் மாற்றும் உரிமை அரசுக்கு உண்டு என்றும் வாதாடினார்.

"கோடீஸ்வரனுக்கு வழமை போல் வழங்கப்பட வேண்டிய சம்பள உயர்வுகள், தடைபடாது வழங்கப்படல் வேண்டும்" என மாவட்ட நீதிபதி திரு. ஓ. எல். டி. கிறெட்சர் தீர்ப்பு வழங்கினார். 1956 ஆம் ஆண்டின் 33 ஆவது சட்டமான அரச கரும மொழிச் சட்டம், அரசியலமைப்பின் 29 (2) வது வாசகத்திற்கு முரண்பட்டதால் வலுவற்ற சட்டம் எனக் கூறப்பட்டது. வலுவற்ற சட்டத்தை அமுல் நடத்த முயன்ற அரச சேவை விதிகள் செல்லுபடியாகாதவை என்றும் தீர்ப்பு அளிக்கப்பட்டது. ஆனால் பின்னர் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் இத் தீர்ப்பு மாற்றியமைக்கப்பட்டது. எனினும் பிரிட்டிஷ் அரசவைத் தீர்ப்பில் மீண்டும் கோடீஸ்வரனுக்கு சாதகமாகத் தீர்ப்பு கூறப்பட்டது.

இலங்கை அரசியலமைப்பின் 29 (2) (3) ஆம் விதிகளைத் திருத்தவோ மாற்றவோ இலங்கைப் பாராளுமன்றத்திற்கு இயலாது என்ற கருத்து பிரிட்டிஷ் அரசவைத் தீர்ப்பொன்றில் கூறப்பட்டது.

இந் நிலைமை இலங்கையின் இறைமைக்கு பெரும் சவாலாக அமைந்தது. ஆனால் அதே நேரத்தில் சிறு பான்மையினருக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. நாம் இலங்கையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைமையை வென்றெடுக்கும் அதே சமயம் சிறுபான்மை இனங்களின் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தியிருக்க வேண்டும். எனினும் நடைமுறையில் அது சாத்தியமாக வில்லை.

கோடீஸ்வரன் வழக்கின் தீர்ப்பு 'பிற்போடப்பட்டு' பின்பு இரத்து செய்யப்பட்டது. 1972 அரசியலமைப்பு மூலம் அது சட்ட ரீதியாகவே இரத்து செய்யப்பட்டது.

இத்தகைய பின்னணியிலேயே சமஷ்டி அரசு ஒன்றின் அவசியத்தை வலியுறுத்தும் கோரிக்கையைத் தமிழ் தலைவர்கள் முன் வைத்தனர். இது தமிழ் பிரதேசங்களில் தேர்தல் கோரிக்கையாகவும் முன் வைக்கப்பட்டு மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றது.

சமஷ்டி ஆட்சி என்றால் என்ன? தமிழ் பிரதேசங்கள் தமிழிலும், சிங்களப் பிரதேசங்கள் சிங்கள மொழி மூலமும் ஆட்சி செய்யப்படவேண்டிய அதே நேரத்தில் இப் பிரதேசங்களை மத்திய அரசாங்கம் ஒன்றிணைக்க வேண்டும் என்பதாகும்.

இலங்கையின் அரசகரும மொழி 'சிங்களம் மாத்திரமே' என்ற சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் சிங்களத் தமிழ் ஒற்றுமை சீர்குலைந்தது.

தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முற்போக்கு வாதிகள் அன்றும் வலியுறுத்தி வந்தனர். ஆனால், வகுப்புவாத உணர்வுகளுடன் சிந்தித்துச் செயலாற்றும் தன்மை கொண்ட பலர் இனவாதிகளாகவே செயற்பட்டனர். 'சிங்களம் மாத்திரம்' என்ற கோஷத்தின் மூலம் இலங்கை சிங்களவர்களுக்கு மாத்திரமே உரியது என அவர்கள் வாதிட்டனர். இதனால் விளைந்த தீய விளைவுகள் மிகக் கவலைக்கிடமானவையாகும்.

1957 பண்டா – செல்வா ஒப்பந்தம்

சிங்கள – தமிழ் ஐக்கியம் சீர்குலைவதைத் தடுப்பதற்கு திரு. பண்டாரநாயக்கா, திரு. செல்வநாயகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி ஓர் உடன்பாட்டிற்கு வர முயற்சித்தார். தமிழ்ப் பிரதேசங்களின் ஆட்சியை தமிழில் நடத்துவதற்கும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் சிங்களக் குடியேற்றங்கள் அமைப்பதை நிறுத்தவும் உடன்பாடு காணப்பட்டது.

இவ்வுடன் படிக்கையை எதிர்த்து ஐக்கிய தேசியக் கட்சி கண்டிக்கு 'பாத யாத்திரையை' ஆரம்பித்தது. பெரும்பான்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்த குருமாரின் வற்புறுத்தல் காரணமாக இவ்வுடன்படிக்கையைக் கிழித்தெறிய திரு. பண்டாரநாயக்கா நிர்ப்பந்திக்கப்பட்டார். இதனுல் இனங்களுக்கிடையிலான ஒற்றுமை மேலும் சீர் குலைந்தது.

1948 ஆம் ஆண்டு குடியுரிமைச் சட்டம் காரணமாக தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகள் வரையறுக்கப்பட்டன. இப்படியான சந்தர்ப்பங்களில் மேற்படி உரிமைகளைப் பாதுகாப்பதற்கு தமிழ் மக்கள் பல வழி முறைகளைக் கடைப்பிடிப்பார்கள். இவ்வாருன ஒரு சூழ்நிலையிலேயே திரு. செல்வநாயகத்தை தலைவராகக் கொண்ட தமிழரசுக் கட்சி சமஷ்டி ஆட்சியமைப்பிற்கான ஆர்ப்பாட்டத்தை நடத்த ஆரம்பித்தது. சிறுபான்மை இனம் என்ற வகையில் தமிழர்கள் தம்மைப் பாதுகாப்பதற்கு இரு வழிகள் உண்டு என்ற கருத்து முன் வைக்கப்பட்டது.

1. ஒவ்வொரு மொழி இனத்துக்குமாக இறைமையுடைய தனித்தனி நாடுகளை அமைக்கப் பரந்த நிலப்பரப்பைத் துண்டாடுதல்;

2. ஒவ்வொரு மொழி இனத்துக்குமாகத் தன்ஞட்சியுடைய மாநிலங்களை அமைத்து மாநிலங்கள் சேர்ந்து மத்தியில் அரசை அமைக்கின்ற கூட்டாட்சி அரசை உடைய ஒரே நாட்டை அமைத்தல்.

குடியுரிமையை வரையறுக்கும் சட்டத்தை அமுல் படுத்திய பின்னர் முதலாளித்துவ சிங்கள அரசியல்வாதிகள் தமிழ் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராகச் செயற்பட சந்தர்ப்பம் கிட்டியது. 1920 ஆம் ஆண்டு முதல் இனவாதக் கருத்துக்கள் இடையிடையே பரவின. ஆனுல் இனவாதம் வேரூன்றுவதற்கு மேற்படி குடியுரிமைச் சட்டம் பக்கபலமாக அமைந்தது.

1947 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் இலங்கை இந்திய காங்கிரசைச் சேர்ந்த 6 பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 9 தேர்தற் தொகுதிகளை தமிழ் காங்கிரஸ் கைப்பற்றியது. மறுபுறம் இடதுசாரிகளின் வெற்றிக்கு தமிழ் தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகள் காரணமாக அமைந்தன. இவர்கள் அனைவரும் ஐக்கியப்பட்டிருந்தால் முதலாளித்துவ சிங்கள அரசியற் கட்சிகள் வெற்றியீட்டியிருக்க முடியாது. அன்றும் சிங்கள முதலாளித்துவ சக்திகளின் கட்சியாக ஐ. தே. கட்சியே இருந்து வந்தது. தமிழ் மக்களினதும் இடதுசாரிகளினதும் ஐக்கியம் ஏற்பட்டிருந்தால் ஐ. தே. க. ஆட்சி அதிகாரத்திற்கு வந்திருக்க முடியாது. மேற்படி ஐக்கியத்தை சீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலைப்பதற்கே குடியுரிமைச் சட்டமும் தேர்தற் சட்டங்களும் கொண்டுவரப்பட்டன. 1952 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலின் போது பல்லாயிரக் கணக்கான தோட்டத் தொழிலாளர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து அகற்றப் பட்டன.

மேற்படி சட்டங்களுக்கு அன்றைய இடதுசாரிக் கட்சிகளான சமசமாஜக் கட்சியும், பொல்ஷேவிக் – லெனினிஸ்ட் கட்சியும் எதிர்ப்புத் தெரிவித்தன. கொல்வின் அன்று பின்வருமாறு கூறினார்: "இச் சட்டங்கள் வகுப்புவாத ரீதியானவை உழைக்கும் மக்களுக்கு எதிரானவை." இச் சட்டம் அமுலாக்கப்பட்ட பின்னர் இலங்கை இந்திய காங்கிரஸ் செயலற்றுப் போய்விட்டது. இவ்வமைப்பு ஏற்கனவே வெற்றியீட்டிய தேர்தற் தொகுதிகளை ஐ. தே. க. கைப்பற்றியது. எதிர்க் கட்சியின் 41 தேர்தற் தொகுதிகள் 26 ஆகக் குறைந்தன. எஞ்சிய தேர்தற் தொகுதிகளில் ஐ. தே. க. வெற்றியீட்டியது. சர்வஜன வாக்குரிமையின் சக்தியை வரையறுத்து ஐ. தே. கட்சியின் வாக்குப் பலத்தை அதிகரிக்கச் செய்தே அன்று ஐ. தே. க. அதிக தேர்தற் தொகுதிகளை வெற்றி கொண்டது. அன்று சிங்கள – தமிழ் ஐக்கியத்தை சகல இடதுசாரிக் கட்சிகளும் வலியுறுத்தின. ஐ. தே. க. ஒரு புறம் தமிழ் தோட்டத் தொழிலாளரின் வாக்குரிமையைப் பறிப்பது மூலமும், மறுபுறம் இனத் துவேஷத்தை வளர்ப்பது மூலமும் இடதுசாரிகளைத் தண்டிக்க முயன்றது. இன்றும் சிங்களம் – தமிழ் ஆகிய இரு பகுதியினர் மத்தியிலும் உள்ள இனவாதிகள் இடதுசாரிகளின் வளர்ச்சியைத் தடுப்பதற்கு கையாளும் உபாயம் இனவாதமாகும்.

## 1958 இனக்கலவரம்

1958 மே - ஜூன் மாதங்களில் ஏற்பட்ட இனக்கலவரங்களின் போது பல சிங்களவர்களும், தமிழர்களும் உயிர் துறக்க நேர்ந்தது. பலர் தமது தொழில்களை இழந்தனர்; இன்னும் பலர் உடைமைகளை இழந்தனர். நூற்றுக் கணக்கானோர் தமது பெற்றோரையும் உறவினர்களையும் இழந்தனர். இன்னுஞ் சிலர் மன நோயால் பாதிக்கப்பட்டனர்.

கொழும்பு, யாழ்ப்பாணம், அநுரதபுரி, பொலன்னறுவை, மட்டக்களப்பு, ஏறுவூர், குருணாகலை, பாணந்துறை ஆகிய பிரதேசங்களில் தமிழ் - சிங்கள இனங்கள் மத்தியில் ஏற்பட்ட வடுக்கள் இன்னும் குணமாகவில்லை. 'இக் கால கட்டத்தில் கண்டிப்பான பத்திரிகைத் தணிக்கை அமுல்படுத்தப்பட்டிருந்தமையால் இலங்கைப் பத்திரிகைகளில் இது சம்பந்தமான செய்திகள் வெளியிடப் படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1960 'நீதிமன்ற மொழி' பற்றிய சட்டம் பாராளுமன்றத்தில் நிறைவேறியது. இச் சட்டத்தின் கீழ் இலங்கையிலுள்ள சகல நீதிமன்றங்களிலும் சிங்களம் மாத்திரமே நீதிமன்ற மொழியாகப் பயன்படுத்தப்பட்டது. இக் காரணத்தால் தமிழ்ப் பிரதேசங்களில், வழக்கு விசாரணைகளின் போது தமிழ் மக்கள் பல இடையூறுகளை எதிர் நோக்கினர்.

1960-61 பாடசாலைகளை அரசாங்கம் சுவீகரித்ததன் காரணமாக அது வரை தனியார் துறையினரின் ஏகபோகத்தின் கீழ் இயங்கி வந்த இலங்கையின் தேசியக் கல்வியை அரசாங்கம் பொறுப்பேற்றது. இதன் பின்னர் தமிழ் பாடசாலைக்கான அரசாங்க உதவி குறைந்தது. கிறிஸ்தவ பாடசாலைகளில் தமிழ் மொழி மூலம் நடைபெற்ற போதனை நிறுத்தப்பட்டது. இவ்வாறாகத் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இடையூறுகளுக்குப் பரிகாரம் காணப்படவில்லை.

1961 இலங்கையின் அரச கரும மொழியான சிங்களத்தில் மாத்திரம் கருமமாற்றத் தொடங்கியமையால் அரசாங்க அறிவித்தல்களும் கடிதத் தொடர்புகளும் சிங்கள மொழி மூலம் மாத்திரமே நடைபெற்றது. இதனால் ஏற்பட்ட கஷ்டங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக 1961ல் தமிழ் மக்கள் சத்தியாக்கிரக இயக்கத்தையும் சட்ட மறுப்பு இயக்கத்தையும் ஆரம்பித்தனர். சத்தியாக்கிரக இயக்கத்திற்கு எதிராக ஆயுதப்படைகளும், பொலிசாரும் தாக்குதல் நடத்தியமையால் பலர் காயமடைந்தனர். சில மாதங்கள் வடக்கு - கிழக்கு மாகாணங்களில் இராணுவ ஆட்சி நடைபெற்றது. பல தமிழ் தலைவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர்.

1964 இந்திய வம்சாவழித் தோட்டத் தொழிலாளர்களில் ஒரு பிரிவினரை இந்தியாவிற்கு அனுப்புவது தொடர்பான உடன்படிக்கையை செயற்படுத்துவதில் ஏற்பட்ட சிக்கல்கள் 1965 – 70ல் தோன்றின.

1965 டட்லி - செல்வா ஒப்பந்தத்தின் கீழ் ஏற்படுத்தப்படவிருந்த மாவட்ட சபை நிருவாக அமைப்பு சிங்கள இனவாதிகளின் செல்வாக்குக் காரணமாக கைவிடப்பட்டது.

1966 தமிழ் மொழி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 1958 ஆம் ஆண்டு ஒழுங்கு விதிகளை அமுல் படுத்திய போது சிங்கள அரச ஊழியர்கள் எதிர்ப்புத் தெரிவித்தமையால் மேற்படி விதிகள் அமுல் படுத்த முடியாது போயின. இவை மூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பார்க்கப்பட்ட வரையறுக்கப்பட்ட நீதியேனும் தமிழ் ஊழியர்களுக்குக் கிடைக்கவில்லை. அதே சமயம் இவ் வெதிர்ப்பு மூலம் சிங்கள இனத்திற்கோ சிங்கள மொழிக் கோ எதுவித நன்மையும் கிடைக்கவில்லை. இலங்கையின் தேசிய மொழிகளில் ஒன்றுன தமிழ் மொழி புறக்கணிக்கப் பட்டு இன்று மீண்டும் ஆங்கிலம் மேலோங்கத் தொடங்சி யுள்ளது. அது மீண்டும் ஏகாதிபத்திய ஆட்சிக் கால கட் டத்திற்குப் பின்னேக்கிச் செல்வதாகும். சிங்களவர்களும், தமிழர்களும் இந் நிலைமைக்கு எதிராகப் போராடவேண்டும். ஆனுல், சிங்கள மொழி முதன்மை பெற்றுலும் ஆங்கில மொழி முதன்மை பெற்றுலும் தமிழர்கள் ஒரே விதமான புறக்கணிப்புக்கு ஆளாக்கப்படுகின்றனர். எனவே ஐக்கியத் துடன் தேசிய மொழிகளைப் பாதுகாக்க முன்வர வேண்டிய நிலைமை தடுக்கப்பட்டுள்ளது. இதனுல் முதலாளி வர்க்கத் தின் தேவை பூர்த்தி செய்யப்படுகின்றது.

## 1970 – 77 வரையிலான பகுதி

*1970 - 77* இக் கால கட்டத்தில் ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஆட்சி பீடம் ஏறியது. தொடர்ந்து, தமிழ் மக்களின் உரி மைகளுக்காக ஆர்ப்பாட்டஞ் செய்து வந்த இரண்டு இடது சாரிக் கட்சிகள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் பங்காளர் களானவுடன் தமது முன்னைய நிலைப்பாட்டை மாற்றிய மைத்தன. தமிழ் – சிங்கள மொழிகளின் சமத்துவத் திற்காகப் போராடிய சமசமாஜக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் சிங்களம் மாத்திரமே அரச கரும மொழியா கும் என்ற நிலைப்பாட்டை எடுத்தன.

*1971* ஏப்ரல் கிளர்ச்சிக்கு அடிகோலிய அரசியல் தத்துவத்திலுங் கூட இனத்துவேஷ விதைகளே முளைவிட்டிருந்தன. ''இந்திய விஸ்தரிப்பு வாதம்'' என்ற அரசியல் வகுப்பு மூலம் சிங்கள இனவாதமே போதிக்கப்பட்டது. எனவே ஏப்ரல் கிளர்ச்சி சிங்களப் பிரதேசங்களுக்கு மாத்திரம் வரை யறுக்கப்பட்டது.

*1971* பல்கலைக் கழகங்களுக்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப் பட்ட போது தரப்படுத்தல் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனுல் பின் தங்கிய பிரதேசங்களின் மாணவர்கள் ஓரளவு நன்மையடைந்த அதே நேரத்தில் மிகத் திறமையாக சித்தி யடைந்த தமிழ் மாணவர்கள் இன அடிப்படையில் தரப் படுத்தலைக் காரணங்காட்டி பல்கலைக் கழகத்திற்கு அனு மதிக்கப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதோ நியாயம் கிடைக்கும் எனத்தோன்றும் நடவடிக்கைகளை எடுப்பது மூலமும் எதிர்பாராத அநீதியான பெறுபேறுகள் கிடைப்பதனுல், வேறு தீர்வு இல்லை என்று உணர்த்த ஆளும் வர்க்கம் முயலுகின்றது. ஆனுல் சிக்கலின் ஓரிரு விடயங்களை மாத்திரம் எடுத்து அதன் மூலம் தீர்வுகாண முடியாத அளவிற்கு வரலாற்று ரீதியில் அநீதிகள் பரிணுமம் அடைந்துள்ளன. எனவே சிக்கலை ஆரம்பத்திலிருந்தே ஆராய வேண்டும். 1972 ஆம் ஆண்டு குடியரசு அரசியலமைப்பு மூலம் இலங்கையின் முன்னைய நிலைமையைவிட ஓரளவு சுதந்திரத்தை அனுபவிக்க முடியும் என்பதை சிங்கள மக்கள் மேற்போக்காகக் கண்டனர். இவ்வரசியலமைப்பை தமிழ் பாராளுமன்ற உறுப்பினர் அனைவரும் எதிர்த்தனர். சோல்பரி அரசியலமைப்பின் 29 (2) வது வாசகத்தின் மூலம் பாதுகாக்கப்பட்ட சிறுபான்மையினரின் உரிமைகள் குடியரசு அரசிலமைப்பு மூலம் இல்லாதொழிக்கப்பட்டது. ஆருவது வாசகத்தின்படி புத்த சமயம் அரசாங்க மதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. ஏழாவது வாசகத்தின்படி சிங்களம் மாத்திரம் அரச கரும மொழியாகப் பிரசடனப்படுத்தப்பட்டது. இலங்கையின் பெரும்பான்மையினரான பௌத்த சிங்கள வாக்காளர்களின் வாக்குகளைப்பெறும் நோக்கிலேயே இவ்வாறு பிரகடனப்படுத்தப்பட்டது.

எமது நாட்டின் பெரும்பான்மையினர் புத்த மதத்தைச் சேர்ந்தவர்கள் என்பது உண்மை. அதே நேரத்தில் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் மதங்களை சேர்ந்தவர்களும் இலங்கையில் வாழ்கின்றனர். எண்ணிக்கையில் பெரும்பான்மையினர் என்ற ஒரே காரணத்திற்காக - மேற்படி நான்கு மதங்களைச் சார்ந்த மக்களுக்கென உருவாக்கப்பட்ட அரசியலமைப்பு புத்த மதத்தை மாத்திரம் பாதுகாப்பது நியாயமானதா? ஏனைய மதங்களுக்கு மிகக் குறைந்த பாதுகாப்பு வழங்குவது நீதியானதா?

அரசியலமைப்பில் மதங்கள் சம்பந்தப்பட்ட வாசகத்திற்கு திரு. வீ. தர்மலிங்கம் பின்வரும் திருத்தத்தைக் கொண்டு வந்தார். "இலங்கைக் குடியரசு எந்தவொரு மதத்திற்கும் பாரபட்சம் காட்டக் கூடாது. எனினும் பௌத்தம் - இந்து - கிறிஸ்தவம் - இஸ்லாம் ஆகிய மதங்களைப் பாதுகாப்பதற்கு அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது."

இத் திருத்தம் தவருனது என எந்தவொரு ஜனநாயக வாதியும் கூறமுடியுமா?

## அரசியலமைப்பும் மக்களும்

தற்போது நடைமுறையிலுள்ள முதலாளித்துவ பொருளாதாரச் சுரண்டல் அமைப்பின் கீழ் சகல அரசியலமைப்புகளும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மீது பலவந்தமாக திணிக்கப்படுபவையாகும். அரசியல் யாப்பின் வாசகங்கள் எவ்வளவு சிறப்பாக அமைந்தாலும் இறுதியில் பொது மக்கள் சுரண்டப்படுவதிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது. 1982 இன் குடியரசு அரசியலமைப்பும் இந்தகையதே. எந்த ஒரு பிரசையும் சுரண்டலுக்குள்ளாக்கப்படக் கூடாது என்ற ஒரு வாசகம் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தாலும், மற்றுமோர் வாசகத்தில் சட்டபூர்வமாக அதனை அமுல் படுத்த முடியாது என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே சுரண்டலை சட்டம் அனுமதிக்கும் வரை நாட்டில் பிரச்சினைகள் அதிகரித்துக் கொண்டே இருக்கும். இது பொதுவான நிலைமையாக இருந்த போதிலும் முன்னைய அரசியலமைப்பில் தமிழ் மக்களுக்கு இருந்து வந்த பாதுகாப்பும் தமிழ் மக்களுக்கு இல்லாதொழிக்கப்பட்டது. வேறு ஒரு சட்டம் அல்லது ஒழுங்கு விதி மூலம் தமிழ் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப் படவுமில்லை. எனவே குடியரசு அரசியலமைப்பு தம் மீது பலவந்தமாகத் திணிக்கப்பட்ட ஒன்று என தமிழ் மக்கள் கருதுவதற்கு நியாயமான காரணங்கள் உண்டு.

1972 குடியரசு அரசியலமைப்பின் மூலம் 29 (2) வாசகம் இல்லாதொழிக்கப்பட்டமையால் தேசிய இனங்களுக்கிடையிலான அவநம்பிக்கை மேலும் வலுவடைந்தது. அரசு சட்டங்களை எவ்வாறு மதிக்கின்றது என்பதும் இதன் மூலம் அம்பலமாகியது. கோடீஸ்வரனுக்குச் சாதகமான நீதி மன்றத் தீர்ப்பை அமுல் படுத்தாது அரசாங்கம் தட்டிக் கழித்தது. பின்னர் குடியரசு அரசியல் அமைப்பு மூலம் தனது முன்னைய நிலைப்பாட்டை நியாயப் படுத்தியது. தேசிய ஐக்கியம் பற்றிய சொல்லுக்கும் செயலுக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கின்றது?

1972 காணிச் சீர்திருத்தச் சட்டம் தோட்டப் பகுதிகளில் வாழ்ந்த தமிழ் மக்களை மற்றுமோர் விதத்தில் பாதித்தது. அடிப்படை உரிமைகளில் ஒன்றான வேலை வாய்ப்பு ஒரு புறம் மறுக்கப்பட்டது மாத்திரமல்ல, ஏற்கனவே செய்து வந்த தொழில்களையும் இழக்க நேரிட்டது. தோட்டங்கள் தேசிய மயமாக்கப்பட்ட பின்னர் அவற்றில் தொழில் செய்த தோட்டத் தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்டனர்.

1974 கல்வித் திணைக்களம் ஏற்படுத்திய மாவட்ட பங்கீட்டு முறை (கோட்டா) காரணமாக தமிழ் மாணவர்களுக்கு அநீதி ஏற்பட்டது என்ற முறையீட்டைப் பற்றி அரசாங்கம் பேசா மடந்தையாக இருந்தது.

1974 யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் ஒன்று நிறுவப்பட்டது. இது தமிழ் மக்களின் நீண்ட காலக் கோரிக்கையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனல் பல்கலைக் கழகங்களுக்கு தமிழ் மாணவர்கள் தேர்ந் தெடுக்கப்பட்டபோது அவர்களுக்கு தரப்படுத்தல் மூலம் இழைக்கப்பட்ட அநீதி அகற்றப்படவில்லை. சிங்கள மாணவர்களுக்கும் பாரபட்சம் ஏற்படுத்துவது பிரச்சினைக்கான பரிகாரமாக மாட்டாது. ஆனல், பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படவில்லை. இரு பகுதியினரையும் சார்ந்த இனவாதிகள் கூட்டுச் சேர்ந்து பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கினர். பிரச்சினைகளுக்கான தீர்வை ஓரிடத்தில் வைத்து இன ஐக்கியத்தை சீர்குலைப்பது எவருக்கும் நன்மை அளிக்காது.

1974 யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அனைத்துலக தமிழாராச்சி மாநாட்டு விழாவில் நடந்த சம்பவத்தின் போது 11 பேர் பொலிசாரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். இது பற்றி பொது விசாரணைக்குழு எழுவும் நியமிககப்படவுமில்லை.

1975 தோட்டங்கள் தேசியமயமாக்கப்படல் ஒரு சோசலிச நடவடிக்கை என பிரச்சாரம் செய்யப்பட்ட போதிலும் அது நடைமுறையில் அவ்வாருக அமையவில்லை. தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டமை நல்ல ஆரம்பம் மாத்திரமே. எனினும் பல குறைபாடுகள் கொண்டதாகவே இருந்தது. தேசியமயமான பல தோட்டங்களில் தமிழ் தோட்டத்தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்டனர். தோட்டங்களில் அமைந்திருந்த சில தமிழ் பாடசாலைகள் சிங்கள பாடசாலைகளாக மாற்றப்பட்டன. இதனுல் சிறு பான்மை மக்களுக்கெதிரான அடக்குமுறை உக்கிரமடைந்தது.

1956ன் பின் ஏற்பட்ட நிலைமைகளுக்கு தமிழ் மக்களின் எதிர் தாக்கமாக திரு. செல்வநாயகத்தின் தலைமையில் சமஷ்டி கோரிக்கை முன் வைக்கப்பட்டது. இக் கோரிக்கையும் புறக்கணிக்கப் பட்ட பட்சத்தில் நிலைமை மேலும் மோசமாகி சமஷ்டி கோரிக்கை "தமிழ் ஈழம்" என்ற கோரிக்கையாக பரிணமமடைந்தது.

தமிழ் மக்கள் தொடர்ச்சியாக முகங்கொடுத்த இடையூறுகளுக்கு தீர்வு காணும் அவசியத்தின் நிமித்தமே "தமிழ் ஈழம்" என்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டது. இரு பகுதியின்ரிடையே ஏற்பட்ட மோதுதல்கள் காரணமாகவே "தமிழ் ஈழம் கோரிக்கை" வரையிலான வளர்ச்சி ஏற்பட்டது என்பதை புரிந்து கொள்ளாமல் இதற்கான குறுகிய கால தீர்வுகளைத் தேட முற்படுவோர் தமக்கு அரசியல் இலாபம் தேடிக் கொள்ளும் நோக்கில் செயற்படுபவர்களேயாவர் இது சிங்களம், தமிழ் ஆகிய இரு பிரிவினர் மத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிலும் காணக்கூடியதாகவே உள்ளது. தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும் என்ற கருத்தை நாம் ஏற்றுக் கொள்வோமாயின் தேசிய இனப் பிரச்சினையின் ஆரம்பத்திலிருந்து நாம் அதற்குத் தீர்வுகாண முற்படவேண்டும்.

1977 பொதுத் தேர்தலின் பொருட்டு தமிழர் விடுதலைக் கூட்டணி முன் வைத்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் 'தமிழ் ஈழமே' முக்கிய கோரிக்கையாக அமைந்தது. (நான்காம் பின்னிணைப்பைப் பார்க்கவும்)

## 1977 க்குப் பிற்பட்ட காலம்

1967 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் திரு. ஜே. ஆர். ஜயவர்தனவின் தலைமையின் கீழ் ஐக்கிய தேசியக் கட்சி மீண்டும் ஆட்சி அதிகாரத்திற்கு வந்தது. அதன் பின்னர் இலங்கையின் சமூக பொருளாதார – அரசியல் வாழ்வில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. நேரடியாகவே ஏகாதிபத்தியத்திற்குச் சார்பான பொருளாதாரக் கொள்கைகளை ஐ. தே. கட்சி அமுல் படுத்தியது. மக்களின் அன்றாட வாழ்வில் துரித மாற்றங்கள் ஏற்பட்ட அதே சமயம் பல முரண்பாடுகளும் தோன்றின. இனங்களுக்கிடையே நிலவிய உறவுகளின் தரத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. இன ரீதியான முரண்பாடுகள் புதிய வடிவில் வளர்ச்சியடைந்தன. ஸ்தாபன வடிவத்தைப் பெறாத இன ரீதியான மோதல்கள், நேரடியாகவே ஆளும் கட்சி அரசியல்வாதிகளினதும் அரசு இயந்திரத்தினதும் அனுசரணையைப் பெற்று பயங்கரவாதமாக உருவெடுத்ததை அண்மைக்கால வரலாறு மூலம் காணமுடிகின்றது.

1977 இனவாத வன்செயல்கள் அதிக அளவில் இடம் பெற்றன. கொள்ளையடித்தல், தீயிடல், கொள்ளைகள் என்பன பெருமளவில் நடைபெற்றன. பொலிசாரும் – ஆயுதப்படையினரும் இவ் வன்செயல்களைத் தடுப்பதற்குப் பதிலாக அவற்றை மேலும் தூண்டி விட்டனர்.

1978 எழுபத்திரெண்டின் அரசியலமைப்பு நீக்கப்பட்டு புதிய அரசியல் யாப்பு அமுலுக்கு வநதது. இதன் 9வது வாசகத்தின் படி பௌத்த மதம் அரசாங்க மதமாக ஏற்றுக் கொள்ளப் பட்டது.

22 (1) வாசகத்தின்படி ஆள் ஒருவர் எந்தவொரு தேசிய மொழியிலும் கல்வி கற்பதற்கு உரித்துடையராதல் வேண்டும். ஆனால் நடைமுறையில் அவ்வாறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமையவில்லை. சிங்களப் பிரதேசங்களில் வாழும் தமிழ் பிள்ளைகளுக்கு இவ்வுரிமை மறுக்கப்பட்டது.

22 (1) அரசகரும மொழியான சிங்கள மொழியே இலங்கை முழுவதிலும் நிருவாக மொழியாதல் வேண்டும். எனினும் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் தமிழ் மொழியில் கருமாற்ற ஒழுங்கு விதிகள் இருக்கின்றன. ஆனுல் அது நடைமுறையில் சாத்தியமாகவில்லை. சிங்கள அரசாங்க உத்தியோகத்தர்கள், பொலிசார், ஆயுதப்படைகள் தமிழ்ப் பகுதிகளில் நிருவாகக் கடமைகளில் ஈடுபடும்போது தமிழில் கருமமாற்றுவது கிடையாது.

24 வாசகத்தின்படி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நீதிமன்றங்களின் மொழி தமிழாகவிருந்த போதிலும் அது நடைமுறையில் மிகக் குறைந்த மட்டங்களிலேயே செயற்பட்டது.

மேற்கூறிய விடயங்கள் அனைத்தையும் தனித்தனியாகக் குறிப்பிட்டாலும், அவை மேற்படி ஆண்டுகளுக்கும் கால எல்லைகளுக்கும் மாத்திரம் வரையறுக்கப்படவில்லை. தமிழ் மக்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர் நோக்காத ஆண்டே இல்லை எனலாம். ஏற்கனவே குறிப்பிட்டபடி தமிழ் மக்கள் எதிர் நோக்கிய இன்னல்களின் அளவைக் குறைத்து மதிப்பிட முடியாததன் காரணமாக மீண்டும் அவற்றை சுருக்கமாகக் குறிப்பிடுகின்ருேம்.

வேலை வாய்ப்பு – 1956 இன் பின்னர் பஸ் - பாடசாலைகள் - துறைமுகங்கள் – உணவுப் பொருட்கள் விற்பனை – வங்கிகள் - காணிகள் – தோட்டங்கள் என்பன தேசியமயமாக்கப்பட்டன. இத் துறைகளில் தமிழர்களுக்கு மிகக் குறைந்த வேலை வாய்ப்புக்களே கொடுக்கப்பட்டன.

குடியேற்றத் திட்டங்கள் - சிங்களக் குடியேற்றத் திட்டங்கள் மூலம் பாரம்பரியத் தமிழ் பிரதேசங்களில் சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டனர்; தமிழ் மக்கள் தமது பாரம்பரிய பிரதேசங்களை இழந்தனர். அவர்களின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவத்திலும் சிங்களச் செல்வாக்கு ஏற்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிசாரினதும், ஆயுதப்படைகளினதும் அடக்கு முறை :

1956 லிருந்து தமிழ் மக்களுக்கெதிரான அடக்குமுறை படிப்படியாக அதிகரித்தது, அன்றுட வாழ்வில் அடக்கு முறை பெருகி வருகின்றது.

இனவாத வன்செயல்கள் :

அண்மைக் காலப் பகுதியில் இனவாத வன்செயல்கள் காரணமாகத் தமிழ் மக்கள் பல கொடுமைகளுக்கு ஆளாகி வருகின்றனர். 1958 இன் இனக் கலவரம் ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகள் கடந்துள்ளன. இன்று கூட எந்த நேரத்திலும் மீண்டும் இனவாத வன் செயல்கள் ஆரம்பமாக இடமுண்டு. ஆனால், அன்று முதல் இன்று வரை தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு உரிய பரிகாரம் காணப்படவில்லை. இந் நிலைமையை நீடிக்கவிடுவதாயின் 'அச்சத்தால் பீதியடைந்து வாழும்' ஓர் இனம் இருக்க வேண்டும் எனக் கருதுவதாக அமையமாட்டாதா?

அண்மைக் காலப்பகுதியில் நடந்த பல அசம்பாவிதங்களையும் கொடுமைகளையும் பின்வருமாறு சுருக்கமாகக் குறிப்பிடுகின்றோம்.

1956 அரச கரும மொழிச் சட்டம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னரும் பின்னரும் இனக் கலவரங்கள் ஏற்பட்டன. பலர் உயிரிழந்தனர். உடைமைகள் நாசமாக்கப்பட்டன. வன்செயல்கள் நடைபெறுவதைக் கண்டும் காணாதது போல பொலிசார் நடத்து கொண்டனர்.

1958 கொலைகள், தீயிடல், பெண்களின் கற்பு சூறையாடப்படல், படுமோசமாக காயப்படுத்துதல், உடைமைகள் நாசமாக்கப் படல் என்பன பரவலாக நடைபெற்றன.

1961 மொழிச் சட்டத்தை எதிர்த்து நடைபெற்ற சட்ட மறுப்பு இயக்கத்திற்கு எதிராக பொலிஸ் – ஆயுதப்படைகளின் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது. வடமாகாணத்தில் பல மாதங்கள் பொலிஸ் ஆட்சி நிலவியது. குற்றப்பத்திரிகை எதுவுமின்றி சுமார் 700 பேர் கைது செய்து தடுப்புக் காவலில் வைக்கபபட்டனர்.

1966 திரு. டட்லி சேனநாயக்கா அரசாங்கம் கொண்டு வந்த தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டத்திற்கு எதிராக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிமாவோ பண்டாரநாயக்காவின் தலைமையிலான எதிர்க் கட்சிகள் வன்செயல்களை ஆரம்பித்தன.

**1972 – 77** சிறிமாவோவின் ஆட்சிக் காலத்தில் வடக்கு – கிழக்கு மாகாணங்களில் இராணுவ ஆட்சி நடைபெற்றது. கொடிய அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது.

**1976** புத்தளத்தில் பள்ளி வாசலில் கூடியிருந்த தமிழ் பேசும் முஸ்லீம்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது. அதில் ஆறு முஸ்லீம்கள் கொல்லப்பட்டனர். அது பற்றி விசாரணை செய்ய எது வித நீதி விசாரணைக்குழுவும் நியமிக் கப்பட வில்லை.

**1977** தமிழ் மக்களுக்கு எதிரான பயங்கர அடக்குமுறை கட்ட விழ்த்து விடப்பட்டது. பொலிஸ் – இராணுவ ஆட்சி ஏற்படுத்தப்பட்டது.

**179** மக்களின் எதிர்ப்பை புறக்கணித்து 1979 இன் 19வது இலக்க பயங்கரவாதத் தடைச் சட்டம் அமுலாக்கப்பட்டது.

## 1981 அரச பயங்கரவாதம்

*1981*ல் இனவாத மோதல்கள் புதிய வடிவத்தை எடுத்தன. அது வரை ஸ்தாபன வடிவம் எடுக்காத, அதி தீவிர இனவாதி களின் தூண்டுதலாலான இனவாத வன்செயல்கள் ஆங்காகே இடம் பெற்றன. இவை ஆளுங் கட்சியின் பிரபல அரசியல்வாதிகளின தும் அரச இயந்திரத்தினதும் அனுசரணையுடன் அடிக்கடி தலை யெடுக்கத்தொடங்கின. முன்னர் இடையிடையே இடம் பெற்ற இனவாத வன்செயல்கள், அடுத்தடுத்துத் தோன்றின. ஒரு புறம் இவ் வன்செயல்களின் விளைவாக ஏற்படும் இழப்புகளும் உயிரிழப்பு களும் பெருமளவில் அதிகரித்தன. மறுபுறம் தமிழ் மக்களின் எதிர்ப்பியக்கங்கள் தரத்தில் வேறுபடத் தொடங்கின. முன்னர் இனவாத வன்செயல்களுக்கு வடக்கிலுள்ள மக்கள் அப்பாவிகளாக வே முகங்கொடுத்தனர். தற்போது அம் மக்கள் தமிழர் விடு தலைக் கூட்டணி மூலமும் "தமிழர் விடுதலைப் புலிகள்" என்ற இரகசிய இயக்கத்தின் மூலமும் இனவாதத்திற்கும் அரச பயங் கரவாதத்திற்கும் முகங்கொடுத்து வருகின்றனர்.

**1981** ஏப்ரல் - மே – நீர்வேலியில் இடம் பெற்ற வங்கிக்கொள்ளை யின் பின்னர் பொலிசாரும், இராணுவமும், பலரைக் கைது செய்ததோடு சந்தேக நபர்கள் கொடூரமாக துன்புறுத்தப் பட்டனர். வடக்கிலுள்ள மக்கள் பயமுறுத்தப்பட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1981** மே **31** முதல் ஜூன் **6** – யாழ் மாவட்ட அபிவிருத்திச் சபைக்கு ஐ. தே. கட்சியின் சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் சுட்டுக் கொல்லப்பட்டார். மே 31 ஆந் திகதி யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தின் போது இரண்டு பொலிசார் கொல்லப்பட்டனர். ஒரு பொலிஸ்காரர் காயப்படுத்தப்பட்டார். இச் சம்பவங்களின் விளைவாக வடக்கிலுள்ள கடைகளும் உடைமைகளும் நாசமாக்கப்பட்டன; தமிழ் மக்கள் துன்புறுத்தப்பட்டனர். ஜூன் முதலாம் திகதி அருமையான பெறுமதி மிக்க யாழ் நூல் நிலையம் எரித்து நாசமாக்கப்பட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமையலுவகம், ஈழநாடு பத்திரிகை நிறுவனம், யாழ் பாராளுமன்ற உறுப்பினரின் வீடு, சுன்னுகம் சந்தை உட்பட தொடர் கடைகள் என்பன தீக்கிரையாக்கி அழித்தொழிக்கப்பட்டன. சில படுகொலைகளும் இடம் பெற்றன. இவை அனைத்தும் பொலிசாரின் அனுசரணையுடனேயே நடைபெற்றன. ஜூன் 4 ஆம் திகதி யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல் நடைபெற்றது. அது ஊழல்கள் மலிந்த தேர்தலாகவே அமைந்தது. தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த சில உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டனர்.

**1981** ஜூலை - ஆகஸ்ட் – குறுகிய இடைவேளைக்குப் பின்னர் இனவாத வன்செயல்கள் மீண்டும் ஆரம்பித்தன. ஸ்தாபன ரீதியாக ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இவ் வன்செயல்கள் மட்டக்களப்பு, அம்பாறை, நீர்கொழும்பு, கேகாலை, களனிய, பண்டாரவளை, வவுனியா, எட்டியாந்தோட்டை, இரத்தினபுரி, பெல்மடுல்லை, கஹவத்தை, பலாங்கொடை, கொழும்பு, ஆகிய பல இடங்களில் பரவின. தீ வைத்தல், பயமுறுத்தல்கள், சொத்துக்கள் - உடைமைகள் சேதமாக்கப்படல், படுகொலைகள் போன்ற நாசகாரச் செயல்கள் இடம் பெற்றன. தேயிலை – இரப்பர் தோட்டங்களில் தொழில் செய்த நூற்றுக்கணக்கான தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் தமது குடும்பங்களுடன் தோட்டங்களிலிருந்து வெளியேறி அநாதை முகாம்களில் தஞ்சம் புகுந்தனர்.

ஒக்டோபர் – ஒக்டோபர் 15 ஆந் திகதி இரு இராணுவ வீரர்களும் வேறு ஒரு நபரும் யாழ்ப்பாணத்தில் சுட்டுக் கொல்லப்பட்டனர். இதன் விளைவாக கொடிய இராணுவ அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது. வடக்கிலுள்ள அப்பாவித் தமிழ் மக்கள் இம்சிக்கப்பட்டனர். போக்கு வரத்து வாகனங்கள் சேதமாக்கப்பட்டன. தமிழ் புகையிரதப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரயாணிகள் தாக்கப்பட்டனர். கடைகளும் வியாபார நிறு வனங்களும் தீயிட்டு நாசமாக்கப்பட்டன.

ஒக்டோபர் – 21 ஆந் திகதி கிளிநொச்சி மக்கள் வங்கிக் கிளை கொள்ளையிடப்பட்டது. அங்கு ஓர் இராணுவச் சிப்பாய் சுட்டுக் கொல்லப்பட்டார். இதன் விளைவாக உருவாகிய இலை ொத வன்செயல்கள், எலிசபத் மகாராணியின் இலங் கை விஜயம் தொடர்பான பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் ஒழுங்கு செய்யும் வரை நிலவின.

## தோட்டத் தொழிலாளர்கள்

இலங்கையின் தோட்டங்களில் வேலை செய்வதற்காக இந்தியா விலிருந்து வரவழைக்கப்பட்ட தொழிலாளர்களின் வம்சாவழியின ரான இன்றைய தோட்டத் தொழிலாளர்கள் எமது நாட்டு தொ ழிலாள வர்க்கத்தின் மிக முக்கிய பகுதியினராவர். தென் இந்தி யாவின் பழைய நிலப்பிரபுத்துவ பாணியிலேயே இவர்கள் இன்றும் வேலைக்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். தோட்ட வேலைக்குத் தேவையான உழைப்பாளர் பட்டாளம் கங்காணியால் சேர்த்துக் கொள்ளப்படுகின்றது. தமது உயிரைப் பாதுகாப்பதற்காக இவர் கள் இத் தோட்டங்களிலேயே வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டுள் ளனர், தோட்டத்திலுள்ள கடையிலிருந்தே சகல பண்டங்களையும் வாங்க வேண்டும். இவை காரணமாக தோட்டத் தொழிலாளர் களின் வாழ்வு தோட்டங்களுடன் ஒன்றிணைக்கப்பட்டுள்ளது.

தமிழ் மொழியைப் பேசுதல், இந்து சமயத்தை வழிபடுதல், கலாச்சாரத்திலான தனித்துவம் என்பன காரணமாக தமது அயல வர்களான சிங்களக் கிராமவாசிகளிலிருந்து வேறுபட்ட குண வியல்புகளைக் கொண்ட வாழ்வையே தமிழ் தோட்டத் தொழிலா ளர்கள் நடத்தி வருகின்றனர். இந்நூலின் மற்றுமோரிடத்தில் குறிப்பிடப்படும் சட்டதிட்டங்களை அரசாங்கம் அமுலாக்கியதன் மூலம் இவ்வேற்றுமைகள் மேலும் வலுவடைந்தன. இவை முத லாளி வர்க்க அரசியல் தேவைகளின் நிமித்தம் அவசியப்பட்ட 'சிங்கள இனவெறியை' அதிகரிக்கச் செய்வதாகவே அமைந்தது. எனவே ஒவ்வொரு சகாப்தத்திலும் பிரிவினை மேலும் அதிகரித்தது. ஆரம்ப காலத்தில் இத்தோட்டங்களில் பல தொழிலாளர் போராட் டங்கள் இடம் பெற்றன. இப்போராட்டங்களுக்குத் தலைமை வகித்த தொழிற் சங்கங்கள் இந்திய அரசியற் தலைவர்களின் பெயர் களையே கொண்டிருந்தன. (உதாரணம்: காந்திச் சங்கம், நேரு சங்கம்) ஆனால் இரண்டாவது உலக மகா யுத்தம் இடம் பெற்ற கால கட்டத்தில் இலங்கை சமசமாஜக் கட்சியின் வழி காட்டலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ் தோட்டங்களில் ஏகாதிபத்திய விரோத வடிவத்திலான பொதுப் போராட்டங்கள் இடம் பெற்றன. அவை குறுகிய காலத்திற்கே இடம் பெற்றன. சமசமாஜக் கட்சி தடை செய்யப்பட்டது. அதன் பின்னர் தோட்டத் தொழிற் சங்கங்கள் மூலம் ஏற்பட்ட போராட்டங்களுடன் ஒன்றிணைக்கப்படாமல் வேறு மார்க்கத்தில் வழி நடத்தப்பட்டன. இதனால் ஏகாதிபத்தியவாதிகள் நட்டம் அடையவில்லை. தமிழ் தோட்டத் தொழிலாளருக்கு என வரையறுக்கப்பட்ட தொழிற் சங்கங்கள் இதன் பின்னரே உருவாகின. இவை இனவாதத்திற்கு துணை புரிந்த அதே நேரத்தில் பொதுப் போராட்டங்களிலிருந்து மாறுபட்ட குறிக்கோள்களையே கொண்டிருந்தன.

அண்மையில் ஏற்படுத்தப்பட்ட நிலச் சீர்திருத்த சட்டங்கள் கூட தமிழ் தோட்டத் தொழிலாளருக்கு எதுவித நிவாரணங்களையும் ஏற்படுத்தவில்லை. 1972 இன் 1வது, 1975 இன் 29வது நிலச் சீர்திருத்த சட்டங்கள் தோட்டப் பொருளாதாரத்தில் பல பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தின. இவற்றால் அப்பாவி தோட்டத் தொழிலாளர்களே பெரும் கஷ்டங்களை எதிர் நோக்கினர். உயரும் அதிக வாழ்க்கைச் செலவு, குறைந்த சம்பளம், குறைந்த வாழ்க்கைத் தரம், வேலை வாய்ப்பின்மை, கல்வி - சுகாதார வசதிகள் இல்லாமை ஆகியவற்றால் இன்றும் தோட்டத் தொழிலாளர்கள் பெருந் துன்பம் அடைகின்றனர்.

## அடிப்படை உரிமைகள்

அடிப்படை மனித உரிமைகளைப் பற்றி இன்று இலங்கையிலும் உலகின் ஏனைய நாடுகளிலும் பெருமளவில் பேசப்படுகின்றது. ஆனால், வேறு எப்போதையும்விட இலங்கை மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்கு பெரும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இவ் அச்சுறுத்தலை தற்போதைய ஆட்சியாளர்களே ஏற்படுத்தி வருகின்றனர்.

இவ்வாறாகக் குடியுரிமை, காணியுரிமை, வேலை வாய்ப்பு, இலங்கையில் தாம் விரும்பிய பகுதியில் வதியும் உரிமை, கல்வி வாய்ப்பு, தொழில் பயிற்சி, சுகாதார வசதி, வீட்டு வசதி, பொது நலனேனும் பல், என்பன தோட்டத் தொழிலாளர்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ளன. தோட்டத் தொழிலாளர்கள் மிகவும் கீழ்த்தரமான முறைகளிலேயே கவனிக்கப்படுகின்றனர். இது அடிப்படை மனித உரிமைகளுக்குக் கூட முரணானது. எல்லாவற்றையும் விட தோட்டத் தொழிலாளரின் பிரஜாவுரிமை வழங்கப்படாமை மிகவும் அநீதியானதாக மாட்டாதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோட்டத் தொழிலாளியும் குடியுரிமையும்

1947 க்கு முன்னர் தோட்டத் தொழிலாளருக்கு குடியுரிமை இருந்தது. 1948 லும் 1949 லும் கொண்டு வரப்பட்ட சட்டங்கள் காரணமாக அடிப்படை உரிமையான குடியுரிமையும் பறிக்கப்பட்டது. இதற்கு 1964 இன் சிறிமா சாஸ்திரி உடன்படிக்கையும் 1975 இன் சிறிமா – இந்திரா உடன்படிக்கை மூலமும் ஓரளவு தீர்வு காணப்பட்டது. ஒரு நூற்றாண்டுக்கு மேலாக இலங்கையின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்காகச் செய்த சேவைக்கு மதிப்பளிக்கும் வகையிலேனும் தோட்டத் தொழிலாளருக்கு குடியுரிமை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமல்லவா?

பதிவு செய்யப்பட்ட இலங்கைப் பிரசை ஒருவரின் வம்சாவளியினர் 21 வயதைப் பூர்த்தி செய்யும் போது தொடர்ந்து இலங்கைப் பிரசையாக வாழ உத்தேசித்தால் தாம் இலங்கைப் பிரசையாவதற்கு தகுதிகள் உண்டு என நிரூபிக்க வேண்டும். இவ்வாறு நிரூபிக்கும் நடவடிக்கைகள் இலங்கைக் குடியுரிமையைப் பாதுகாப்பதற்குரிய தடைகளாகும். இது இலங்கையில் பிறந்து வாழும் ஒரு தனி நபரின் குடியுரிமைக்கு எதிரான தடையாக மாட்டாதா?

பரம்பரை இலங்கைப் பிரசைக்கும் பதிவு செய்யப்பட்ட இலங்கைப் பிரசைக்கும் இடையே வித்தியாசம் பாராட்டுவதனால் பதிவு செய்யப்பட்ட பிரசைக்கு அநீதி விழைகின்றது. மலைநாட்டில் வாழும் தமிழர்கள் இலங்கைப் பிரசைகளாவர். ஆனால் இந்தியத் தமிழர்கள் என்று வேற்றுமை பாராட்டுவதால் அவர்களை குறைத்தது மதிப்பிட வழி அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறாக ஒரே நாட்டு மக்களை இரு கூறாகப்பிரித்து பாரபட்சம் காட்டுவதனால் இன ஒடுக்கு முறை சட்ட ரீதியாகவே அங்கீகரிக்கப்பட்டுள்ளது எனக் கூறினால் தவறாகுமா?

### வேலை வாய்ப்பைப் பெறுதலும் இலங்கையில் தாம் விரும்பிய இடத்தில் வதியும் உரிமையும்.

சாதாரணமாக ஒரு தோட்டத் தொழிலாளி தான் பதிவு செய்யப்பட்டுள்ள தோட்டத்திற்கு அப்பாலுள்ள வேறோரிடத்தில் தொழில் பெறுவது கடினம். இதனால் இலங்கையில் தாம் விரும்பிய ஓர் பிரதேசத்தில் குடியேறும் ஜனநாயக உரிமை தோட்டத் தொழிலாளர்களுக்கு மறுக்கப்பட்டுள்ளது. காலனித்துவ ஆட்சியின் போது இதற்கு "சுதந்திர அனுமதிப்பத்திரம்" ஒன்று பெற வேண்டியிருந்தது. அதே முறை இன்று இன்னுமோர் வடிவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயற்படுகின்றது. பங்கீட்டரிசிப் புத்தகங்கள் புழக்கத்தில் இருந்த போது, குடியுரிமையற்ற தோட்டத் தொழிலாளர்களுக்கு பிரத்தியேக பங்கீட்டரிசிப் புத்தகங்கள் வழங்கப்பட்டன. இதுவும் பாரபட்சமான ஓர் நடவடிக்கை அல்லவா?

தோட்டத்தொழிலாளர்கள் சட்ட ரீதியாக வேறு எதுவித தொழிலையும் செய்யும் உரிமையை இழந்துள்ளனர். குடியுரிமை மறுக்கப்பட்டுள்ள காரணத்தால் அரசாங்க – கூட்டுத்தாபன அல்லது தனியார் துறையிலுள்ள தொழில்களுக்கு தோட்டத் தொழிலாளர்கள் விண்ணப்பிக்க முடியாது.

## இலங்கையில் பிரிவினை அவசியமா?

சகல விதமான சுரண்டல்களிலிருந்தும் விடுதலை பெறுவதே உண்மையான சுதந்திரமாகும். அது சகல வழிகளிலுமான பாரபட்ச நடவடிக்கைகளிலிருந்தும் விடுதலை பெறுவதாகும். இதற்குத் தமிழ் மக்கள் நடத்தும் போராட்டங்களில் நாம் இழக்கக் கூடியது என்ன? சிங்கள முதலாளித்துவ ஆட்சியாளர்களுடனுன இணைப்பு மாத்திரமே சுருக்கமாகக் கூறுவதாயின் ஒடுக்கப்படுபவர்களுடனுன இணைப்பு இல்லாதொழிக்கப்படுகின்றது. ஒடுக்கப்படுபவர்களுக்கு இழப்பதற்கு ஒன்றுமில்லை. எனினும் பின்வரும் வினுவை ஒருவர் கேட்க இடமுண்டு. "சிங்கள நாடு எம்முடையது. இது பிரிக்கப்பட்டால் எமது நாட்டின் ஒரு பகுதியை இழந்து விடுவோமல்லவா?"

இலங்கை எமது நாடு என்பது உண்மை. சிங்களம் தமிழ் ஆகிய இரு பகுதி மக்களுக்கும் இலங்கை சொந்தமானது. இரு பகுதியினரும் ஒன்ருக வாழும் போது முழு நாடும் எல்லோருக்கும் சொந்தமானது. ஆனுல் இலங்கை பிரிக்கப்பட்டால் தமிழர்களும் 'எமது' நாட்டின் ஒரு பகுதியை இழப்பார்கள் சிங்களவர்களும் 'எமது' நாட்டின் ஒரு பகுதியை இழப்பார்கள். இங்கு "சிங்கள மக்கள் வாழும் பகுதி சிங்களவர்களுக்கே. தமிழ் மக்கள் வாழும் பகுதி தமிழ – சிங்களம் ஆகிய இரு பகுதியினருக்கும் பொதுவானதாக இருத்தல் வேண்டும் என நாம் கூறமுடியுமா?"

ஒரு சில நபர்கள் தாம் எண்ணியபடி இன்றைய நிலைமையை உருவாக்கவில்லை. இரு பகுதி மக்கள் மத்தியிலுமுள்ள ஒரு சில இனவாதிகள் நிலைமையை தமக்கும் சாதகமாகப் பயன்படுத்தியமையாலேயே இந் நிலை உருவாகியது. ஒரு தேசிய இனம் என்ற வகையில் சாதாரண தமிழ் மக்கள் நீண்ட காலமாக அனுபவித்து வரும் அநீதிகள் காரணமாக சிறுபான்மை இனமாக" தொடர்ந்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழவேண்டி ஏற்பட்டமையாலேயே இது உருவாகியது. இன்று நாம் தவிர்க்க முடியாத விளைவுகளை எதிர்நோக்கியுள்ளோம். எனவே இந் நிலைமைகளை ஏற்படுத்துவதற்குப் பங்காளிகளான சகலரும் இதற்குப் பரிகாரம் காண வேண்டும். இனவாதம் இத்தகைய வரலாறினதும் சமூக நடவடிக்கைகளினதும் தவிர்க்க முடியாத விளைவேயாகும். இப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டிய தீர்க்கமான ஒரு கட்டத்திற்கே நாம் வந்துள்ளோம். இரண்டு இனங்களுக்கும் பொதுவான எமது நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஒன்றுமே செய்யாது, பிளவுபட்ட ஒரு நாடு உருவாகும் விதத்தில் அனைத்தையும் செய்த பின்னர் – "இது எமது நாடு; இலங்கையில் பிரிவினைக்கு இடமளியோம்" எனக் கோஷமிடப்படுகின்றது. இது மேற்படி பிரச்சினையைத் தொடர்ந்து நிலவச் செய்வதற்கு அதிகாரம் பெறும் பொருட்டு எழுப்பப்படும் கூக்குரலாகும்.

பிரித்தானிய காலனித்துவ வாதிகள் எமது நாட்டில் தேயிலைச் செய்கையை ஆரம்பிப்பது மூலமும் 'சுதந்திர வர்த்தக வலயங்களையே' இங்கு உருவாக்கினர். வெள்ளையர்களின் தோட்டங்களில் நாட்டின் ஏனைய பகுதிகளைவிட வித்தியாசமான ஆட்சியே நிலவியது. தோட்டங்களில் இருந்து பெறும் சகல வருமானங்களையும் வெள்ளையர்களே எடுத்துச் சென்றனர். தமது சொந்தக் காணிகளை இழந்த சிங்களக் கிராமவாசிகள் பலவிதமான கஷ்டங்களையும் கொடுமைகளையும் அனுபவிக்கவில்லையா? இன்று உருவாக்கப்பட்டுள்ள சுதந்திர வர்த்தக வலயங்களும் அதே பணியைத் தொடருகின்றன. தமிழ் ஈழம் உருவாக்கப்படுவதை எதிர்ப்பவர்கள் யாரை எதிர்க்கின்றனர்? இலங்கையில் வசிக்கும் ஒரு பகுதி மக்களின் வாழும் உரிமையை எதிர்க்கின்றனர். ஆனால், எமது நாட்டு மக்களின் வாழும் உரிமையை இல்லாதொழித்து ஆட்சியாளர்கள் ஏகாதிபத்தியவாதிகளுக்கு நாட்டைக் காட்டிக் கொடுப்பதை நாம் எதிர்க்காதது ஏன்?

சுதந்திர வர்த்தக வலயம் மாத்திரமல்ல. தற்போதைய ஐ. தே. க. அரசு, விவசாய அபிவிருத்தி வலயங்கள் என்ற போர்வையில் எமது நாட்டுக்குச் சொந்தமான காணிகளை வெளிநாடுகளுக்கு தாரை வார்த்துக் கொடுத்துள்ளது. மேலும் எவ்வளவு காணிகளை இவ்வரசாங்கம் அவ்வாறு கொடுக்கும் என்று கூறமுடியாது. தற்போது அந்நிய முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு பின்வருமாறு:

+ பார்ம் எண்ணெய் பயிர்ச் செய்கைக்காக மலேசியாவின் 'குட்த்திரி' நிறுவனத்திற்கு மகாவலிப் பிரதேசத்தில் 24,000 ஏக்கர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

+ சேருவிலை தொகுதியில் வாழைப் பயிர்ச் செய்கைக்காக ஒல்லாந்து நிறுவனமொன்றிற்கு 10,000 ஏக்கர்

+ மாதுறு ஓய பிரதேசத்தில் கனேடிய நிறுவனமொன்றிற்கு 10,000 ஏக்கர்

+ மாதுறு ஓய பிரதேசத்தில் அவுஸ்திரேலிய நிறுவனமொன் றிற்கு 17,750 ஏக்கர், அதே நிறுவனத்திற்கு அம்பாறை மாவட்டத்தில் 40,000 ஏக்கர்

+ உடுதும்பர பிரதேசத்தில் (கண்டி மாவட்டம்) பிரான்ஸ் நிறுவனமொன்றிற்கு 6,000 ஏக்கர்

+ எண்ணெய் சுத்திகரிப்பதற்காக திருகோணமலைப் பிரதே சத்தில் அமெரிக்க நிறுவனமொன்றிற்கு 2,500 ஏக்கர்

மொத்தமாக ஒரு லட்சத்து பத்தாயிரத்து இருநூற்றி ஐம்பது ஏக்கர் காணி வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி காணிகள் அன்று துப்பாக்கி முனையிலேயே கைப்பற் றப்பட்டன. இன்று வெள்ளையர்களையும் மீறிய வெள்ளையர்கள், இலங்கையின் ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றி, வெள்ளையர்களை அழைத்து நாட்டைத் துண்டாடி விற்கின்றனர். எமது விவசாயி களின் செழிப்பான காணிகளை தாரைவார்த்துக் கொடுக்கும் இச் 'சிங்கள ஆட்சியாளர்களை' இலங்கையின் தேசபக்தர்கள் என நாம் கருத முடியுமா? இவர்கள் எந்த நோக்கத்துடன் 'இலங்கை துண்டாடப்படுவதை' எதிர்க்கின்றனர். வெளிநாட்டு முதலீட்டு நிறுவனங்களுக்கு இலங்கையை காட்டிக் கொடுக்கும் அதே நேரத் தில் மக்களுக்கு அதனை மூடி மறைப்பதற்காக இனவாதத்தைக் கக்குகின்றனர்.

நாட்டுப்பற்றுள்ள சிங்கள மக்கள் இந் நிலக் கொள்ளையை ஏன் எதிர்க்கவில்லை? இப்போலி முதலாளித்துவ வாதிகள் உருவாக்கி யுள்ள வரலாற்றுப் பின்னணியின் கீழ் ஒடுக்கு முறையிலிருந்தும், கீழ்த்தரமாக மதிக்கப்படுவதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்கும், தாம் பாதுகாப்பாக உயிர் வாழ்வதற்கும், தமது பாரம் பரிய பிர தேசத்தை வழங்குமாறு தமிழர்கள் கோரிக்கை விடுக்கும் போது அதனை எதிர்ப்பது ஏன்? நாடு முதலாளித்துவ அமைப்பின் கீழ் இருக்கும் வரையும், தமிழ் ஈழம் அமைக்கப்படாத வரையும் மாத்திரமே தமிழ் பிரதேசங்களின் காணிகளை தற்போதைய ஆட்சி யாளர்கள் வெளி நாட்டு நிறுவனங்களுக்குத் தாரை வார்த்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்க முடியும். ஏகாதிபத்தியச் சார்பு அடிவருடிகள் சுரண்டலை நடத்துவதற்குரிய காணிகளை இழக்க நேரிடும் காரணத்தாலேயே 'தமிழ் ஈழத்தை' எதிர்க்கின்றனர்; தேச பக்தி காரணமாக அவர்கள் தமிழ் ஈழத்தை எதிர்க்கவில்லை

## மற்றுமொருவகைக் காட்டிக் கொடுப்பு

இலங்கைப் "புகையிலைக் கம்பனி இலங்கைக்குச் சொந்தமானதல்ல. பிரித்தானியாவிற்கே சொந்தமானது. மேற்படி கம்பனிக்கு உரிமையான புகையிலைத் தோட்டங்கள் தம்புல்லை, ஹங்குரங்கெத்தை, தெல்தெனியா ஆகிய பிரதேசங்களில் உண்டு. எமது மக்களுக்குத் தேவையான உணவுப் பயிர்களே அங்கு முன்னர் பயிரிடப்பட்டன. இக் காணிகளில் இன்று புகையிலை பயிர் செய்யப்பட்டுள்ளது. புகையிலைப் பயிர் செய்கையால் எமது பூமியும், விவசாயிகளின் உழைப்பும் சுரண்டப்படுகின்றது. இப்பிரதேசத்து காணிகள் இலங்கையர்களுக்குச் சொந்தமாயிருந்த போதிலும் அக் காணிகளில் பிரித்தானியரின் மூலதனமிடப்பட்டு சுரண்டல் நடத்தப்படுகின்றது. விவசாயி தனது காணியின் அடிமையாக்கப்பட்டுள்ளான். மகாவலிப் பிரதேசத்தின் எச் 9 பகுதியின் நிருவாகம் புகையிலைக் கம்பனியிடம் முழுமையாகக் கையளிக்கப்பட்டுள்ளது. மன்னார் – வவனியா – மொனராகலை ஆகிய பிரதேசங்களிலும் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முதலீடு செய்வதற்கு வசதி செய்யப்பட வேண்டுமென ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கமிட்டி ஆலோசனை கூறியுள்ளது. மன்னார், வவனியா போன்ற பிரதேசங்கள் 'தமிழ் ஈழத்திற்கு'ச் சொந்தமானால் இதனை அமுல் படுத்த முடியாது. இது யாரின் நன்மைக்காக? தமிழ் – சிங்கள மக்களின் நன்மைக்காகவா? இல்லை. வெளிநாட்டு ஏகாதிபத்தியவாதிகளின் நன்மைக்கேயாகும். 'தமிழ் ஈழம்' ஏகாதிபத்தியத்திற்கு விரோதமானால் அதன் எல்லைகளுள் அமையும் காணிகளை ஏகாதிபத்தியம் பெற முடியாது. எனவே தமிழ் மக்களின் 'சுதந்திரப் போராட்டத்திற்கும்' விடுதலைக்கும் சிங்கள மக்கள் சார்பாக நடந்து கொண்டால் அது ஏகாதிபத்தியத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக அமைந்து விடும். ஏகாதிபத்தியவாதிகளின் அடிவருடிகள், இலங்கையைப் பாதுகாப்பதற்கோ அல்லது சிங்கள மக்களைப் பாதுகாப்பதற்கோ இனவாதத்தைக் கடைப்பிடிக்கவில்லை. நாட்டுப் பற்று என்ற சாட்டில் சுரண்டுவோருக்குச் சேவை செய்வதற்கே இனவாதத்தைத் தூண்டுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடியேற்றத் திட்டங்கள் அமைத்தலும் காணிகளைத் தாரைவார்த்துக் கொடுத்தலும்

பரம்பரையாக விவசாயஞ் செய்து வந்த விவசாயிகளின் காணிகள் பறிமுதல் செய்யப்பட்டே இலங்கையில் காணிகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இவர்கள் அத்துமீறிக் குடியேறிய விவசாயிகள் என பிரகடனப்படுத்தப்பட்டு பரம்பரையாக விவசாயஞ் செய்து வந்த காணிகளிலிருந்து விரட்டியடிக்சப்படுகின்றனர். மேற்படி காணிகள் வெளிநாட்டு முதலீட்டாளருக்கு வழங்கப்படுகின்றன. அத்துமீறிய விவசாயிகள் என்று அழைக்கப்படுவோர் இந்நாட்டுப் பாரம்பரிய விவசாயிகளின் சந்ததியினரேயாவர். பலவந்தமாக வெளியேற்றப்படும் விவசாயிகள் தாம் விவசாயஞ் செய்து வந்த காணிகளில் மீண்டும் குடியேறினால் ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டும். அல்லது 10 ஆயிரம் ரூபா குற்றப்பணம் அறவிடப்படும். சில சமயங்களில் மேற்படி இரண்டு தண்டனைகளும் வழங்கப்பட இடமுண்டு. சிங்கள மக்கள் தமது காணிகளை இழப்பதையிட்டு கவலைப்படாத நபர்கள், தமிழர்களின் நாடு துண்டாடப்படுவதையிட்டு கவலைப்படுவது ஆச்சரியத்திற்குரியது. 'தமிழ் ஈழம்' அமைக்கப்பட்டால் அக் காணிகளின் உரிமையாளர்களான தமிழர்களுக்கே அவை உரித்தாகின்றன. ஆனால் இன்று எமது காணிகள் உரிமையாக்கக் கூடாத வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கே தாரைவார்த்துக் கொடுக்கப்படுகின்றன.

இவ்வாறாக உண்மை உரிமையாளருக்கு காணிகள் வழங்கப்படுவதை எதிர்ப்பது, உரிமையற்றோருக்கு தாரைவார்க்கப்படுவதையிட்டு எதிர்ப்புத் தெரிவிக்காமை ஆகிய இரண்டும் தேசப்பற்றோ அல்லது இனப்பற்றோ இல்லாதவர்களின் பரம்பரைப் பழக்கமாகும். இந்த ஏமாற்றத்திற்கு நாம் எவ்வளவு தூரம் ஆளாகியுள்ளோமோ அவ்வளவிற்கு எமது நாட்டின் பிரச்சினைகளை மேலும் உக்கிரமாக்கி அவர்கள் அதன் பயனைப் பெறுவார்கள். ஒடுக்கப்படும் சிங்கள - தமிழ் மக்கள் தொடர்ந்தும் அடக்கியொடுக்கப்படுவார்கள்.

இப்படியாக சிங்கள மக்களின் காணிகளை அவர்களிடமிருந்து அபகரித்து, அவற்றை வெளிநாட்டு முதலீட்டாளர்களுச்குத் தாரைவார்த்துக் கொடுத்து விட்டு–சிங்கள மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதாகக் கூறி–அவர்களை தமிழ்ப் பிரதேசங்களில் குடியமர்த்துவது பிரச்சினைக்குத் தீர்வாக அமையாது. இவ்வாறு செய்வதால் ஏகாதிபத்தியவாதிகளின் அடிவருடிகளுக்கு இரண்டு நன்மைகள் ஏற்படுகின்றன. ஒரு புறம் இனத்திற்குச் செய்யும் சேவை எனக் கூறிக் கொண்டு முதலாளித்துவத்திற்குச் சார்பாகப் போராடும் சிங்கள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இனவாதிகளுக்கு இது சாதகமாக அமைகின்றது. மறுபுறம் சிங்கள தமிழ் முதலாளித்துவாதிகளுக்கு இது பெரும் நன்மை அளிக்கின்றது.

'இலங்கையைத் துண்டாட நாம் இடமளியோம்' என்ற கோஷத்தை, கடந்த இனவாத வன்செயல்களின் போதும் இன வாதிகள் பரவலாகப் பயன்படுத்தினர். ஒரு புறம் ஏகாதிபத்திய வாதிவின் சுரண்டலுக்காக இந் நாட்டை தாரைவார்த்துக் கொடுத்துவிட்டு, தாம் இலங்கையைத் துண்டாடுவதற்கு எதிரான தேசபக்தர்கள் என்பதை வெளிக்காட்டுவதால் இனவாதிகளுக்கு ஒரு நன்மை உண்டு. தாம் ஏகாதிபத்தியவாதிகளின் அடிவருடிகள் என்பதை இதன் மூலம் மூடிமறைக்கமுடியும்.

இவர்கள் இலங்கை துண்டாடப்படுவதை எதிர்ப்பதாகக் கூறிக் கொண்டாலும், இன்று இந்நாடு துண்டாடப்பட்டு நிர்வகிக்கப்படு வதையே நாம் கவனிக்க முடிகின்றது. ஆனையிறவைக் கடந்து தென்னிலங்கையை நோக்கிவரும் வாகனங்கள் ஆயுதப்படை களால் கடும் சோதனைக்குள்ளாக்கப்படுகின்றன. ஆனையிறவுக்கு அப்பால், இலங்கையின் ஏனைய பகுதிகளில் நிலவும் நிருவாகம் நடைபெறவில்லை. அங்கு கொடிய அடக்குமுறை ஆட்சியே நிலவி வருகின்றது. மக்களின் அன்றாட வாழ்வில் ஆயுதப்படைகள் அடிக் கடி தலையிட்டு வருகின்றன. இந்நடவடிக்கைகள் மூலமாகவே இலங் கை துண்டாடப்பட்டுள்ளது. இது பெரும் அநீதியாகும். அதே நேரத்தில் ஏனைய மாகாணங்களிலும் இதே அடக்கு முறை ஆட்சி யை ஏற்படுத்துவதற்கான பரீட்சார்த்த நடவடிக்கைகளாக இவற் றைக் கருத முடியாதா?

மேற்படி விடயங்களை நியாயமான முறையில் ஆராய்ந்து பார்த்தோமேயானால், நாம் பின்வரும் முடிவுகளுக்கு வரவேண்டும்.

1. இனவாதம், இலங்கையின் குறிப்பிட்ட ஒரு பகுதியினரின் நன் மைக்காக உருவாக்கப்பட்டுள்ளது.

2. சில விடயங்களில் இனவாதம் சட்டரீதியிலும் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

3. இனவாதத்தால் ஏற்பட்டுள்ள இடையூறுகள் காரணமாக தமிழ் மக்கள் பல வடிவங்களில் எதிர்ப்புத் தெரிவித்து வரு கின்றனர்.

தமக்கு ஏற்படும் இன்னல்களுக்கு எதிராக எதிர்ப்புத் தெரிவிக் கும் உரிமை ஓர் இனத்திற்கு இருத்தல் வேண்டும். மேற்படி எதிர்ப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புக் காட்டல் சமஷ்டி ஆட்சி என்ற முறையிலும் தமிழ் ஈழக் கோரிக்கை என்னும் வடிவத்திலும் தோன்றியுள்ளதை நாம் காண முடியும்.

சிங்களப் பிரதேசங்களில் இளைஞர்களின் பிரச்சினைகளுக்கு சரி யான பரிகாரம் காணத்தவறியமையால் 1971ல் ஓர் கிளர்ச்சி ஏற் பட்டது. தமக்கு எதிராக ஏற்படும் அநீதிகளை அளைஞர்கள் எதிர்ப் பது அசாதாரண நிகழ்ச்சியாகமாட்டாது. யாழ் குடாநாட்டின் இளைஞர்களும் தமது இனத்திற்கு ஏற்பட்டு வரும் அநீதிகளை எதிர்ப் பது மேற்படி அநீகளுக்கெதிரான அவர்களின் எதிர்த்தாக்கமாகும். இவ்வெதிர்தாக்கம் தொடர்பான தீர்ப்பை வழங்க நாம் தகுதியற்ற வர்கள். மேற்படி அநீதிகளை அகற்றுவதற்கு நாம் எதுவித நடவடிக்கையும் எடுக்காமையே அதற்குக் காரணமாகும். எனி னும், இனவாதத்திற்குத் தூபமிடுவதால் எந்தவொரு இனத்திற் கும் நியாயம் ஏற்படமாட்டாது. அதன் மூலம் இனவாத வன் செயல்கள் மேலும் அதிகரிக்கும். என்பதை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

1958ல் கே. எம். பி. ராஜரட்ண போன்ற நபர்கள் இலங்கைப் பொது மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றவில்லை. 1958, 1966, 1977, 1981 ஆகிய ஆண்டுகளில் ஏற்பட்ட இனவாத மோதல்களின் பின்னால் அரசியல்வாதிகள் இருந்து வந்துள்ளனர். இவை கிரம மாக அமைப்பு வடிவிலேயே இடம் பெற்றன, என்பதும் தெளிவு. மறுபுறம் மேற்படி அரசியல்வாதிகளுக்கு இலங்கையின் உக்கிர மான பிரச்சினைகளுக்கு எதுவிதத் தெளிவான தீர்வும் இருக்கவில்லை. நாட்டில் பிரச்சினைகள் உக்கிரமடையும் சகல சந்தர்ப்பங்களிலும் இனவாதப் பிசாசுகள் தலையெடுத்துள்ளன. இந்நிலைமை தொடர்ந்து நீடிக்கும் வரை இலங்கையில் இனவாத வன்செயல் களைத் தடுத்து நிறுத்த முடியாது.

## இனவாதத்திற்கான தீர்வு என்ன?

சோசலிச நாடுகளில் இனவாதப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேற்படி நாடுகளில் முத லாளித்துவ அமைப்பில் நிலவிய ஒரு சிக்கலான இனப் பிரச்சினை சோசலிச சமூக அமைப்பின் மூலமே தீர்க்கப்பட்டது. அவ்வாறு யின் செய்ய வேண்டியது என்ன? ஒன்றில் நாம் சோசலிச சமூக அமைப்பைக் கட்டியெழுப்ப வேண்டும்; அல்லது சகல இன மக் களினதும் ஜனநாயக உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டும்.

இரண்டு தேசிய இனங்களும் பொதுவான ஒடுக்குமுறைக்கு ஆளாக்கப்படுவதற்கு எதிராகப் போராடுவது இதற்கான ஒரே தீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாகும். அதே நேரத்தில் சிறுபான்மை தேசிய இனம் என்ற வகையில் தமிழ் மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ள விசேட அடக்கு முறையையும் கொடுமைகளையும் இல்லாதொழிக்க வேண்டும். இதற்கான போராட்டத்தின் போது தமக்கு உசிதமான நடவடிக்கைகளை எடுக்கும் உரிமை தமிழ் மக்களுக்கு உண்டு என்பதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஒரு தேசிய இனத்திற்கு உள்ள சுயநிர்ணய உரிமை சம்பந்தமாகத் தட்டிக்கேட்க வேறு எந்த இனத்திற்கும் உரிமை கிடையாது.

சிங்கள மக்களுக்கென ஒரு பூமிப் பிரதேசம் இருத்தல் வேண்டும் என சிங்கள மக்கள் கருதுகிறார்கள். அவ்வாறாயின் அதே உரிமை ஏனைய இனங்களுக்கும் உண்டு என்பதை சிங்கள மக்கள் ஏற்க வேண்டும். சிங்களமக்களுக்கென பிரத்தியேகமானதொரு கலாச்சாரம் உண்டு என்பதையும் சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்வார்களாயின், தமிழ் மக்களுக்கும் அது அவ்வாறாகவே இருத்தல் வேண்டும் என்பதையும் ஏற்கவேண்டும். சிங்களவர்களுக்கு ஒரு மொழி உண்டு. தமிழர்களுக்கும் அது அவ்வாறே. நாடு, மொழி, கலாச்சாரம் என்பன தமிழர்களுக்கும் புனிதமானவை.

## இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்குப் போராடியோர் யார் ?

முதலாளித்துவ வர்க்கத்தின் ஆட்சி அமைப்புக் காரணமாகவே தேசிய இனப்பிரச்சினை இவ்வளவு தூரம் உக்கிரமடைந்துள்ளது. இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முதலாளித்துவ வர்க்கம் முன்வைத்த உபாயங்கள் அனைத்தும் வெறும் கண் துடைப்புகள் மாத்திரமே. இனவாதித்தின் மூலம் தமது துட்டத்தனமான சுரண்டலை தொடர்ந்து நடத்தும் நோக்கிலேயே முதலாளித்துவம் இனவாத வேற்றுமையை மேன் மேலும் வளர்த்தது.

சிங்களவர்கள் என்று தாம் குறிப்பிடும் போது விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சில சிங்களவர்களைக் குறிப்பிடவில்லை. பெரும்பான்மை சிங்கள மக்களின் சரியான கருத்தை இலங்கையின் இடதுசாரி இயக்கமே பிரதிநிதித்துவப்படுத்தியது. இலங்கையின் தேசிய இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கு இலங்கையின் இடதுசாரி அணியினர் நீண்ட காலமாகப் போராடினர். இடதுசாரிகள் பல தவறுகளை இழைத்திருப்பினும், தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக நியாயமான நிலைப்பாட்டிலிருந்து போராடிய பெருமை இடதுசாரி அணியையே சாரும். இங்கு லங்கா சமசமாஜக் கட்சியையும், ஸ்ரீ லங்கா கம்யூனிஸ்ட் கட்சியையும் குறிப்பிடாதிருக்க முடியாது. பிற்பட்ட காலத்தில் சில இடதுசாரிகளின் நிலைப்பாட்டில் மாற்றங்கள் ஏற்பட்டாலும், ஆரம்பத்தில் அவர்கள் தேசிய இனப்பிரச்சினையைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்ப்பதற்கு முன் வைத்த கொள்கைகளை நாம் பாராட்டாதிருக்க முடியாது. தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இலங்கைத் தொழிற்சங்க இயக்கத்திற்கு இருந்த ஆர்வத்தையும் நாம் மறந்து விடலாகாது. 1947ல் நடந்த பொது வேலை நிறுத்தப் போராட்டத்தில் தோழர் கந்தசாமி பொலிசாரின் துப்பாக்கிச்சூட்டிற்குப் பலியானார். இக் கால கட்டத்தில் இலங்கையில் இனவாதப் பிரச்சாரங்களும் முளைவிடத் தொடங்கின. ஆனால் சிங்களவர்களைப் பெரும்பான்மையினராகக் கொண்ட தொழிற் சங்கமான அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத்தின் தலைமைப் பதவிகளை வைகுந்தவாசன், நித்தியானந்தன் போன்ற தமிழர்கள் வகிக்க முடிந்தது. அன்றைய தொழிற் சங்க இயக்கம் இனப்பிரச்சினை தொடர்பாகக் கொண்டிருந்த மிகச் சிறந்த கண்ணோட்டத்தையே இது எடுத்துக் காட்டுகின்றது.

இதுவரை உருவாகிய சகல இடதுசாரிக் குழுக்களும் சிறு கட்சிகளும், தேசிய இனப்பிரச்சினை தொடர்பாக சரியான நிலைப்பாட்டை எடுத்துள்ளன. தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பல தீர்வுகளை முன் வைத்துள்ளன. நவசமசமாஜக் கட்சி, இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி, ஜனதா சங்கமய, புரட்சிர மாக்சிஸக் கட்சி, நவலங்கா கம்யூனிஸ்ட் கட்சி, ஜனநாயகத் தேசிய முன்னணி உட்பட வேறு பல சிறு கட்சிகளும் குழுக்களும் மேற்கொண்ட முயற்சிகள் பெரிதும் பாராட்டத்தக்கவை.

தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பெரும்பான்மை இனமான சிங்களவர்கள் மத்தியிலிருந்து எதுவித ஒத்துழைப்பும் கிடைக்கவில்லை எனக் கூறினால் அது பெருந்தவறாகும். பல்வேறு சமூக கலாச்சார அமைப்புகள், நீண்டகாலமாக இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வகையிலான பல கருத்தரங்குகளையும் கலந்துரையாடல்களையும் நடத்தியுள்ளன; பல பிரசுரங்களை வெளியிட்டுள்ளன. இனவாதத்திற்கு எதிரான கருத்துக்களை வெளியிடுவதில் பல அமைப்புகள் அளப்பரிய சேவைகளை ஆற்றியுள்ளன. அவற்றுள் சில பின்வருமாறு:

இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் (MIRJE)

ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பதற்கான இயக்கம் (MDDR)

இலங்கை சமூக விஞ்ஞானிகளின் சங்கம் (SSA)

தொழிலாளர் ஐக்கியத்திற்கான கமிட்டி (Committee for the Workers' Unity)

சத்யோதய (Satyodaya)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக சமய ஒன்றியம் (Centre For Society and Religion)

அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் (Samstha Lanka Govi Sammelanaya)

மக்கள் இயக்கம் (Janatha Viyaparaya)

மக்கள் எழுத்தாளர் முன்னணி (Janatha Lekaka Peramuna)

இலங்கை பகுத்தறிவாளர் சங்கம் (Sri Lanka Rationalist Association)

மாவத்தை வெளியீட்டாளர்கள் (Mawatha Publishers)

விடுதலை தரும ஒன்றியம் (Vimukthi Dharma Kendra)

ஹட்டன் சமூக சேவை மத்திய நிலையம் (Hatton Social Services Centre)

கிறிஸ்தவ தொழிலாளர் இயக்கம் (Christian Workers Fellowship)

பெண்ணின் குரல் அமைப்பு (Kantha Handa Organisation)

வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் மூலம் இனங்களுக்கிடையில் நல்லெண்ணத்தை வளர்ப்பதற்கான மன்றம்

கிறிஸ்தவ மாணவர் இயக்கம் (Christian Students' Movement)

அரசியல் செயற்பாடுகளைக் காட்டிலும் கலாச்சாரத் துறையில் ஏற்பட்ட இத்தகைய நடவடிக்கைகள் மிகவும் பயனுள்ளவையாகும். குறுகிய வேற்றுமைகளை நீக்குவதற்கு இத்துறையில் பல கல்விமான்களும் அளப்பரிய முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர். ❁



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டட்லி சேனநாயக்கா – செல்வநாயகம் ஒப்பந்தம் – 1965 மார்ச்

அன்றைய பிரதமரான திரு. டட்லி சேனநாயக்காவும் தமிழரசுக் கட்சித் தலைவரான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகமும் 1965 மார்ச் மாதம் 24 ஆந் திகதி சந்தித்து தமிழ் பேசும் மக்கள் எதிர் நோக்கும் சில முக்கிய பிரச்சினைகளைப் பற்றி பேச்சு வார்த்தை நடத்தினர். ஒரு நிலையான அரசாங்கத்தை உறுதிப் படுத்துவதற்காக பின்வருமாறு நடவடிக்கைகளை மேற்கொள் வதற்கு திரு. சேனநாயக்கா உடன் பட்டார்.

1. வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியை நிர்வாக மொழியாகவும், அறிக்கைகளைப் பதிவு செய்யும் மொழியாகவும் அமுல் படுத்துவதற்கு, தமிழ் மொழி விசேட ஏற்பாடுகள் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்தல்; தமிழ் மொழி பேசும் நபர் ஒருவருக்கு தீவின் எப்பகுதியிலும் தமிழில் கரும மாற்றும் உரிமை உரித்தாக்கப்படல் என்பன தமது கட்சியின் கொள்கை என திரு. சேனநாயக்கா எடுத்து விளக்கினர்.

2. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள நீதிமன்றங்களில் தமிழில் கருமமாற்றுவதற்கும், அறிக்கைகளைத் தமிழில் பதிவு செய்வதற்கும் ஏற்ற வகையில் நீதிமன்ற மொழிச் சட்டத்தை திருத்துவது தமது கட்சியின் கொள்கை எனவும் திரு. சேனநாயக்கா குறிப்பிட்டார்.

3. இரு தலைவர்களாலும் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையிலான அதிகாரங்களைக் கொண்ட மாவட்ட சபைகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். எனினும், தேசிய அவசியங்களைக் கருத்திற் கொண்டு மேற்படி சபைகளுக்கு பணிப்புரை வழங்கும் அதிகாரம் அரசாங்கத்திற்கு இருத்தல் வேண்டும் எனவும் உடன்பாடு காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் இலங்கைப் பிரசைகளுக்கு காணிகளை குறித்தொதுக்கக் கூடிய வகையில் மேற்படி கட்டளைச் சட்டத்தைத் திருத்தி அமைத்தல். குடியேற்றத் திட்டத்தின் கீழ் வடக்கு கிழக்கு மாகாணங்களில் காணிகளைப் பகிர்ந்து கொடுக்கும் போது பின்வரும் முன்னுரிமைத் திட்டத்தை அமுல் படுத்தவும் திரு. சேனநாயக்கா உடன்பட்டார்.

(அ) வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள காணிகளில் அம் மாவட்டங்களில் வாழும் நிலமற்றவருக்கே முதலில் காணிகள் வழங்கப்படவேண்டும்.

(ஆ) இரண்டாவதாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கு காணிகள் வழங்கப்பட வேண்டும்.

(இ) மூன்றாவதாக இலங்கையின் ஏனைய பகுதிகளில் வசிக்கும் தமிழ்க் குடி மக்களுக்கு முதலிடங்கொடுத்து ஏனைய குடிமக்களுக்கும் காணிகள் வழங்கப்படும்.

ஒப்பம்/டட்லி சேனநாயக்கா 24-3-65
ஒப்பம்/எஸ். ஜே. வி. செல்வநாயகம் 24-3-65



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்டாரநாயக்கா — செல்வநாயகம் ஒப்பந்தம் 1957 ஜூலை 26

### ஒப்பந்தித்தின் பொதுக் கொள்கைகள் பற்றிய பிரகடனம்

நாட்டின் அமைதிக்குப் பங்கம் விளைவிக்கக்கூடிய வகையில் உக்கிரமடைந்து வரும் வேற்றுமைகளுக்குத் தீர்வு காண்பதற்காக தமிழரசுக் கட்சியின் பிரதிநிதிகள் பிரதம அமைச்சருடன் பல முறை பேச்சுவார்த்தை நடத்தினர்.

பேச்சு வார்த்தைகளின் ஆரம்பத்திலேயே தமிழரசுக் கட்சியின் சில கோரிக்கைகளுக்கு உடன்பட முடியாதென பிரதம அமைச்சருக்குத் தோன்றியது.

அரசாங்கத்தின் கொள்கைகளுக்கமைய சமஷ்டி அரசியலமைப்புத் திட்டத்தை உருவாக்குவது பற்றியோ அல்லது பிரதேச சுய ஆட்சி அமைப்பைப் பற்றியோ அல்லது அரசகரும மொழிச் சட்டத்தை இரத்து செய்யும் வகையிலான நடவடிக்கைகளை எடுப்பது பற்றியோ பேச்சுவார்த்தை நடத்தத் தாம் தயாராக இல்லை என பிரதம அமைச்சர் பிரகடனஞ் செய்தார். தமிழரசுக் கட்சி தனது அடிப்படைக் கொள்கைகள் அல்லது குறிக்கோள்கள் என்பவற்றில் ஒன்றையேனும் கைவிடாமல் அல்லது காட்டிக் கொடுக்காமல் வேற்றுமைகளுக்குத் தீர்வுகாணும் வகையிலான வேலைத் திட்டம் ஒன்றை அமைப்பது பற்றி ஆராய முடியுமா என்ற பிரச்சினை எழுந்தது?

தமிழரசுக் கட்சியின் சில கோட்பாடுகளையேனும் நியாயமான முறையில் தீர்த்து வைப்பதற்கு அவசியமான ஏற்பாடுகளை மேற்கொள்ள முடியுமா என்பது பற்றி ஆராய்வதற்காக அரசாங்கம் தயாரித்துள்ள மாவட்ட சபைகள் அமைப்பது பற்றிய சட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலத்தை பரிசிலனை செய்யுமாறு பிரதம அமைச்சர் இக் கட்டத்தில் பிரேரித்தார்.

இதற்கிணங்க ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கை தனிப்பட்ட ஆவணமாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

தமிழ் சிங்களம் ஆகிய இரு மொழிகளுக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்ற அடிப்படைக் கொள்கைக்கமையவே தமிழரசுக் கட்சி மொழிப் பிரச்சினையை அணுகியது. எனினும், இது பற்றி பிரதம அமைச்சர் பின் பற்றும் கொள்கைகளுக்கமைய பிரச்சினைகளை சரிப்படுத்திக் கொள்வதற்கு தமிழரசுக் கட்சியினர் உடன்பட்டனர். தமிழ் மொழியை ஒரு தேசிய மொழியாக அங்கீகரிப்பதையும், வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிருவாக மொழியாகத் தமிழ் மொழியை ஏற்றுக் கருமமாற்ற வேண்டியதன் முக்கியத்துவத்தையும் தமிழரசுக் கட்சி வலியுறுத்தியது.

ஏற்கனவே குறிப்பிட்டது போல அரச கரும மொழியை இரத்து செய்யும் வகையிலான எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்க முடியாது என பிரதம அமைச்சர் வலியுறுத்தினர்.

## தமிழ் மொழியின் பாவனை

தமிழ் மொழி இலங்கையில் வாழும் ஓர் சிறுபான்மை இனத்தின் மொழியென அங்கீகரிக்கும் ஏற்பாடுகளை உத்தேசச் சட்டங்களில் உள்ளடக்குதல் வேண்டும்; அரச கரும மொழியின் அந்தஸ்த்துக்கு பாதகம் ஏற்படாத வகையில் வடக்கு – கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியை நிருவாக மொழியாக்குவதற்கான ஏற்பாடுகள் பிரதம அமைச்சரின் நான்கு அம்சத்திட்டத்தில் உள்ளடக்கப்பவேண்டும்; வடக்கு – கிழக்கு மாகாணங்களில் தமிழ் மொழியைப் பேசாத சிறுபான்மையினரின் நலன் கருதி அவசியமான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும்; என்றும் பேச்சுவார்த்தைகளின் பின்னர் உடன்பாடு காணப்பட்டது

இந்திய வம்சாவழி மக்களுக்கு இலங்கைக் குடியுரிமை வழங்கும் பிரச்சினை பற்றியும் குடியுரிமைச் சட்டத்தை திருத்துவது பற்றியும் தமது கருத்துக்களை தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் பிரதம அமைச்சரிடம் முன் வைத்தனர். இப் பிரச்சினையை இயன்றளவு விரைவில் தீர்த்து வைக்குமாறும் வலியுறுத்தினர்.

இப் பிரச்சினையை வெகு விரைவில் தமது கவனத்திற்குக் கொண்டுவருவதாக பிரதம அமைச்சர் பிரகடனப்படுத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி தீர்வுகளுக்கமைய தமது உத்தேச சத்தியாக்கரகப் போராட்டத்தைக் கைவிடுவதாகத் தமிழரசுக் கட்சி பகிரங்கப்படுத்தியது.

மாவட்ட சபைகள் தொடர்பாக பிரதம அமைச்சரும் - தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளும் பகிரங்கப்படுத்திய கூட்டு அறிக்கை பின்வருமாறு:

(அ) மாவட்ட சபைகளின் எல்லைப் பிரதேசங்களை உப அட்டவணை மூலம் சட்டத்திலேயே உத்தரவாதம் செய்தல்.

(ஆ) வட மாகாணத்தை ஒரு மாவட்ட சபைப் பிரதேசமாகப் பிரகடனப் படுத்தி, கிழக்கு மாகாணத்தை இரண்டு அல்லது மூன்று மாவட்ட சபைப் பிரதேசங்களாகப் பிரித்தல்;

(இ) மாகாண எல்லைகளை மீறியேனும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்ட சபைகள் ஒன்றிணையக் கூடிய வகையில் சட்டத்தில் ஏற்பாடுகளைச் செய்தல்; பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்ற பின்னர் ஒரு மாவட்ட சபைப் பிரதேசம் பல பிரிவுகளாகப் பிரிவதற்கு இடமளித்தல்; பொதுத் தேவைகளுக்கு ஏற்ப விசேடக் கருமங்களுக்காக ஒரு மாவட்ட சபை அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட மாவட்ட சபைகள் கூட்டாக இணைந்து செயற்படக்கூடிய விதத்தில் சட்ட மூலத்தில் ஏற்பாடுகள் செய்யப்படுதல்;

## நேரடித் தேர்தல்

(ஈ) மாவட்ட சபைப் பிரதிநிதிகளை நேரடியாகத் தேர்ந்தெடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தல். மேற்படி தேர்தற் தொகுதிகளை நிர்ணயிப்பதற்கான ஆணைக்குழு அல்லது ஆணைக் குழுக்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல். மாவட்ட சபைப் பிரதேசங்கள் உள்ளடங்கிய மாவட்டங்களைப் பிரதிநிதித்துவஞ் செய்யும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாவட்ட சபைத் தலைவர்களாகக் கருமமாற்றுவதற்கு அதிகாரமளிப்பது பற்றி கவனத்திற் கொள்ளல். அரசாங்க அதிபர்களை மாவட்ட சபை ஆணையாளர்களாக நியமிப்பது பற்றிய பிரச்சினையைக் கவனத்திற் கொள்ளல். பெரிய பட்டினங்கள், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அமைந்த பட்டினங்கள், நகர சபைகள் என்பனவற்றை மேற்பார்வை செய்யும் பிரச்சினையைப் பற்றியும் ஆராய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசேட அதிகாரங்கள்

(உ) "பாராளுமன்றத்தின் மூலம் அதிகாரங்களை ஒப்படைத்தல்; அவ்வதிகாரங்களை சட்டப்படி விரிவாக விளக்குதல்; கமத்தொழில், கூட்டுறவுத்தொழில், காணி – காணி அபிவிருத்தி, குடியேற்றத் திட்டங்களை அமைத்தல், கல்வி, சுகாதாரம், கைத்தொழில், மீன் பிடிக்கைத்தொழில், வீடமைப்பு, சமூக சேவைகள், மின் சக்தி, நீர்வழங்கல், தெருக்கள் என்னும் விடயங்களைப் பற்றி மாவட்ட சபைகளுக்கு இருக்க வேண்டிய அதிகாரங்களையிட்டு உடன்பாடு காணப்பட்ட வாறு, சட்டத்தில் வரைவிலக்கணம் கூறல்.

## குடியேற்றத் திட்டங்கள்

(ஊ) மாவட்ட சபைகளின் அதிகாரங்களுக்குட்பட்ட பிரதேசத்தினுள் அமையும் குடியேற்றத்திட்டங்களில் காணிகளை ஒதுக்க வேண்டிய தகுதியானவர்களைத் தெரிவு செய்யும் அதிகாரம்; மேற்படி குடியேற்றத் திட்டங்களில் பணியாற்றுவதற்குரிய அலுவலர்களை தெரிவு செய்யும் அதிகாரம் என்பன குடியேற்றத்திட்டங்கள் தொடர்பாக மாவட்ட சபைகக்ளுக்கு இருக்க வேண்டிய அதிகாரங்களாகும் என உடன்பாடு காணப்பட்டது. இது தொடர்பாக தற்போது கல்ஓயா அபிவிருத்திச் சபையால் நிருவகிக்கப்படும் பிரதேசத்தின் நிலைமைகள் கவனத்திற் கொள்ளப்படும்.

## வரிவிதிப்பும் கடன்களும்

(எ) உத்தேச சட்டமூலத்தின் வரைவில் குறிப்பிட்டுள்ளவாறு மாவட்ட சபைகள் தொடர்பாக உள்ளூராட்சி அமைச்சருக்குரிய அதிகாரங்கள், தேவைக்கமைய பாராளுமன்றத்திடம் ஒப்படைக்கும் நோக்கில் வரைவில் திருத்தங்களை மேற்கொள்ளல்.

(ஏ) மாவட்ட சபைகளுக்கு மத்திய அரசாங்கம் தொகை நிதி வழங்கும். மானியங்களைக் கணிப்பீடு செய்யும் கொள்கைகளை நிர்ணயித்தல், வரிவிதித்தல், கடன் வாங்குதல் என்பன பற்றிய அதிகாரங்கள் மாவட்ட சபைகளுக்கே உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐக்கிய இலங்கை

**சமஷ்டியாட்சி அமைப்பு என்பது என்ன?**

1. சமஷ்டியாட்சி அமைப்பு என்பது தேசத்தின் ஐக்கியத்தையும் பிரதேச உணர்வுகளையும் ஒன்றிணைக்கக் கூடிய ஓர் உபாயமாகும்;
2. வேறுபட்ட தேவைகளைக் கொண்டோரிடையே உண்மையான ஐக்கியத்தை ஏற்படுத்துதலாகும்;
3. தனித்தனியாக இருந்து கொண்டே ஐக்கியத்தை நிலை நாட்டலாகும்;
4. சமஷ்டியமைப்பின் கீழ் முழு நாட்டின் பொதுத் தேவைகளை மத்திய அரசாங்கம் கவனிக்கும், அதே நேரத்தில் ஒவ்வொரு பிரதேசங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொறுப்பை அவ்வப் பிரதேசங்களே ஏற்று செயற்படுத்தும்;

**தமிழரசுக் கட்சியின் கோரிக்கைகள்**

1. தமிழ் மொழி பேசும் மக்களுக்கு தமது பாரம்பரியப் பிரதேசத்தின் நிருவாகத்தில் குறிப்பிடத்தக்க பங்கு வழங்கப்பட வேண்டும். அத்தகைய பங்கிலும் மேற்படி பிரதேசத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்த கல்வி, சுகாதாரம், உள்ளூராட்சி, காணி அபிவிருத்தி, நீர்ப்பாசனத்துறை ஆகியவற்றின் பொறுப்புக்களையே தமிழரசுக் கட்சி கோருகின்றது.

2. சமஷ்டி அமைப்பின் கீழ் உருவாகிய ஐக்கிய இலங்கை அரசு என்பதே தமிழரசுக் கட்சியின் அபிலாசையாகும். எனவே தமிழரசுக் கட்சி சிங்கள - தமிழ் மக்களிடையே பூரண ஒத்துழைப்பு, நல்லுறவு, ஐக்கியம் ஆகியவற்றையே எதிர்பார்க்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அனைவருக்கும் சுதந்திரமும் நீதியும் கிடைக்கவேண்டுமென வும் எமது இலங்கை சகல வழிவகைகளிலும் அபிவிருத்தி செய்யப்படவேண்டும் எனவும் தமிழரசுக் கட்சி கூறுகிறது. நீங்களும் நன்ருக வாழுங்கள்; எங்ஙமையும் வாழவிடுங்கள் என்றே தமிழரசுக் கட்சி சிங்கள மக்களிடம் கோருகின்றது.

## சமஷ்டியாட்சி என்பது புதிய கருத்தா?

சமஷ்டியாட்சி அமைப்பு புதிய கருத்தோ அல்லது பிசாசு களின் படைப்போ அல்ல; பல இன மக்கள் வாழும் வேறு நாடுகளிலும் தேசிய இன – பொருளாதார மொழிப் பிரச் சினைகளை மிக வெற்றிகரமாகத் தீர்ப்பதற்கு சமஷ்டியாட்சி முறை கையாளப்பட்டுள்ளது.

## மொழிப் பிரச்சினை என்பது என்ன?

சிங்கள மொழிக்குக் கிடைக்கும் அந்தஸ்து தமிழ் மொழிக் கும் கிடைத்தல் வேண்டும் என்பதே எமது கட்சியின் குறிக் கோளாகும். ஆனல், மொழிப் பிரச்சினை காரணமாக இலங்கை பல சிக்கல்களை எதிர்நோக்கியிருக்கும் இச் சந் தர்ப்பத்தில், பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஆரம்ப நட வடிக்கையாக, தமிழ் மொழிக்கு ஒரு பிராந்திய மொழிக் குரிய அந்தஸ்தும், பின்வரும் உரிமைகளும் வழங்கப்பட வேண்டும் என கோருகின்ருேம்.

1. சிங்கள மக்களுக்கு சிங்கள மொழி எவ்வாறு முக்கியத்துவம் வாய்ந்ததோ அதே போல தமிழ் மொழி தமிழ் மக்களுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது.

எனவே,

2. (அ) தமிழ் மொழியைத் தமிழ் பேசும் மக்களின் தேசிய மொ ழியாக சட்டரீதியாகவும், நிருவாக ரீதியாகவும் அங்கீகரிக்க வேண்டும்.

(ஆ) வடக்கு கிழக்கு மாகாணங்களின் ஆட்சி மொழியாகவும் நீதிமன்ற மொழியாகவும் தமிழ் மொழி அங்கீகரிக்கப்பட வேண்டும். அதே நேரத்தில் மேற்குறிப்பிட்ட மாகாணங் களில் வாழும் சிறுபான்மையினருக்கும் உரிய வசதிகளும் ஏற்பாடுகளும் செய்யப்படவேண்டும்.

(இ) i. பல்கலைக் கழக மட்டம் வரையிலான சகல கட்டங்களி லும் தமிழ் மொழி தமிழ்ப் பிள்ளைகளின் போதனு மொழி யாக இருத்தல் வேண்டும்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) அரசாங்க சேவையில் ஆள் சேர்க்கப்படுவதற்கான தெரிவுப் பரீட்சைகளுக்கு தமிழர் தமிழிலேயே எழுதும் உரிமை இருக்க வேண்டும்.

(iii) தமிழன் இலங்கையின் எப்பாகத்திலிருந்தாலும் அரசாங்கத்துடன் தமிழில் கருமமாற்றும் உரிமை இருக்க வேண்டும்.

இலங்கையின் எப்பாகத்திலிருக்கும் தமிழருக்கும் இவ்வுரிமைகள் சட்டரீதியாக வழங்கப்படவேண்டும். சட்ட விதிகள், கசற் அறிவித்தல்கள், அரசாங்கப் பிரசுரங்கள், அறிக்கைகள், விண்ணப்பப்பத்திரங்கள் ஆகிய அனைத்தும் தமிழ் மொழியிலும் பிரசுரிக்கப்படல் வேண்டும்.

## ஐக்கிய இலங்கையே எமது குறிக்கோளாகும்

தமிழ் மொழியைப் பேசுகின்ற மக்களின் பொதுத் தேவைகள்,வரலாறு, தேசிய இனம், கலாச்சாரம், மொழி என்பன சிங்கள மக்களிலிருந்து வேறுபடுகின்றன.

இவ்வேறுபாடுகளை புரிந்து கொள்ளாமை அவற்றைத் தீர்ப்பதற்குரிய வழிவகையல்ல, தமிழ் பேசும் மக்களின் மொழி உரிமையையும் ஏனைய உரிமைகளையும் புறக்கணிப்பது மூலமும், தமிழர்களை அடக்கியொடுக்குவது மூலமும், பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்படப்போவதில்லை. இச்சிக்கலான நிலைமையை எதிர்நோக்குவதற்கே அரசியல் விஞ்ஞானம் சமஷ்டிக் கொள்கையை வகுத்துத் தந்துள்ளது.

சமஷ்டியாட்சி அமைப்பு, மக்கள் தமது ஆற்றலுக்கேற்ப உருவாகி வளர்ச்சியடைந்து தமது அபிலாசைகளை நிறைவுபடுத்துவதற்கான மிகவும் பொருத்தமான ஆட்சி அமைப்பாகும்.

இதன் மூலம் நிலையான அரசியல் அமைப்பு உருவாகும். சிக்கல்களும் – துன்பங்களும் – அவநம்பிக்கைகளும் இல்லாதொழிக்கப்படும்; இது புத்துணர்வுக்கும் சுபீட்சத்துக்கும் வழிவகுக்கும் என்பது உறுதி.

இவ்வாறு உருவாகும் ஐக்கிய இலங்கையிலேயே பொருளாதாரத்துறையில் அருவிருத்தியும் சுபீட்சமும் ஏற்படும்.

(தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் 1960-6-1 ஆந் திகதி வெளியிட்ட ஒரு பிரகடனத்தின் சில பகுதிகள்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் விடுதலைக் கூட்டணியின்
# 1977 ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் விஞ்ஞாபனம்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் இந்நாட்டில் தமிழ் பேசும் மக்கள் பாரம்பரியமாக வாழும் தொடர்பான பிரதேசம் முழுவதையும் உள்ளடக்கியதான ஓர் சுதந்திர, இறைமையுள்ள, மதச்சார்பற்ற, சமதர்ம தமிழ் ஈழ அரசை நிறுவுவதற்குத் தமிழ் தேசிய இனத்தின் கட்டளையைத் தமிழர் விடுதலைக் கூட்டணி நாடி நின்கிறது.

அதே நேரத்தில் தமிழ் ஈழத்தில் அரசியல், சமூக, பொருளாதார அமைப்புப்பற்றிக் கீழ்க்காணும் உத்தரவாதங்களைத் தமிழர் விடுதலைக் கூட்டணி அளிக்கின்றது. இந்த உத்தரவாதங்களுக்கு அமைவாகவே தமிழ் ஈழ அரசு அமைக்கப்படுமென்று தமிழர் விடுதலைக் கூட்டணி உறுதி அளிக்கின்றது.

1. தமிழ் ஈழ அரசில் கீழ்க் கண்டோர் குடியுரிமை பெறுவர்

அ. தமிழ் ஈழத்தின் நிலப்பரப்பில் இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் எல்லோரும்;

ஆ. தமிழ் ஈழக் குடியுரிமையை நாடும் இலங்கையின் எப் பாகத்திலும் வாழும் தமிழ் பேசும் மக்கள்;

இ. தமிழ் ஈழக்குடியுரிமையை நாடும் உலகில் எப் பாகத்திலும் வசிக்கும் இலங்கை வம்சாவழித் தமிழ் பேசும் மக்கள்.

2. தமிழ் ஈழத்தில் அதிகாரம் பரவலாக்கப்பட்டு எந்தப் பிரதேசத்தவரோ மதத்தவரோ ஏனையோர் மீது அதிகாரம் செலுத்த இயலாத வகையில் அவ்வப் பகுதி மக்களின் சுயாட்சிக்கு வழிவகுக்கும் சுவிட்சர்லாந்து தேசத்திலுள்ளது போன்ற இணைப்பாட்சி முறை கைக்கொள்ளப்படும். குறிப்பாக தமிழ் ஈழத்தின் அங்கமான முஸ்லிம் மக்கள் சுய நிர்ணய உரிமையின் அடிப்படையில் பிரிந்து செல்லும் உரிமையுள்ள ஓர் சுயாட்சி மாகாணமாகத் தாம் பெரும்பாலாக வாழும் பிரதேசத்தில் அமைக்கப்படுவர் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி உத்தரவாதம் அளிக்கிறது.

3. தமிழ் ஈழத்தில் தமிழ் மக்கள் பெரும் பாலாக வாழும் பகுதிகளில் முஸ்லீம் மக்களையோ, முஸ்லீம் மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலாக வாழும் பகுதிகளில் தமிழ் மக்களையோ குடியேற்றுவதன் மூலம் பெரும்பான்மையினரைச் சிறுபான் மையினமாக்கும் எத்திட்டமும் இடமளிக்கப்படமாட்ட தென்று தமிழர் விடுதலைக்கூட்டணி உத்தரவாதம் அளிக்கிறது.

4. தமிழ் ஈழத்தில் சாதி ஒழிக்கப்படுவதோடு கொடிய தீண் டாமையும் பிறப்பினுல் மனிதனுக்கு மனிதன் உயர்வு தாழ்வு கற்பிக்கப்படும் அநீதியும் வேரோடு களையப்பட்டு அதை எவ்விதத் இலும் அனுட்டிப்பது சட்டத்தினுல் கடுமையான தண்டனைக்குள் ளாக்கப்படும்.

5. தமிழ் ஈழம் மதச் சார்பற்ற அரசாக இருக்கும். அதே நேரத்தில் அங்கு வாழும் மக்களினல் அனுட்டிக்கப்படும் மதங்கள் எல்லாவற்றிற்கும் சமமான பாதுகாப்பும் உதவியும் வழங்கப்படும்.

6. தமிழ் ஈழ ஆட்சி மொழியாகத் தமிழ் இருக்கும். அதே நேரத்தில் தமிழ் ஈழத்தில் வாழக்கூடிய சிங்கள மக்கள் தம் மொழி யில் கல்வி கற்க, அரசுடன் கருமம் ஆற்ற உள்ள உரிமை பாதுகாக் கப்படும். அதே போன்று சிங்கள அரசின் கீழ் வாழக்கூடிய தமிழ்ப் பேசும் மக்களின் மொழி உரிமைகளுக்கும் அவ்வரசிடம் உத்தர வாதம் நாடப்படும்.

7. அறிவியல் ரீதியான பூரண சமதர்ம அரசாக விளங்கும் தமிழ் ஈழத்தில்:-

அ. மனிதனை மனிதன் சுரண்டுவது சட்டத்தினுல் தடுக்கப்படும்.

ஆ. உழைப்பின் கௌரவம் பாதுகாக்கப்படும்.

இ. சட்டத்தினுல் விதிக்கப்பட்ட எல்லைகளுக்குட்பட்டு தனியார் துறை இயங்க அனுமதிக்கப்படும். அதே நேரத்தில் உற்பத்தி சாதனங்களும் விநியோக முறைகளும் அரசுடைமைக்கும், கட் டுப்பாட்டுக்கும் உட்பட்டவையாக இருக்கும்.

ஈ. குத்தகை விவசாயிக்கும் தனியாரா நிலங்களில் குடியிருப் போர்க்கும் பூரண பாதுகாப்பு அளிக்கப்படும்.

உ. சமதர்ம திட்டமிடுதலின் அடிப்படையில் தமிழ் ஈழத்தில் பொருளாதார அபிவிருத்தி மேற்கொள்ளப்படும்.

ஊ. தனி மனிதனே தனிக் குடும்பமோ சேர்த்து வைக்கக்கூடிய சொத்துக்கு உச்சவரம்பு விதிக்கப்படும்.

8. சமதர்ம அரசான தமிழ் ஈழம் அணிசேரா வெளிநாட்டுக் கொள்கையை கைக்கொள்ளும் அதே நேரத்தில் ஏகாதி பத்திய எதிர்ப்பு சக்திகளுக்கும் சனநாயக விடுதலை இயக் கங்களுக்கும் சர்வ தேச அரங்கில் ஆதரவு அளிக்கும்.

9. சகோதரத்துவ அடிப்படையில் சிங்கள அரசின் முற் போக்கு சக்திகளுடன் நட்புறவை வளர்த்து அதன் மூலம் இரு தேசிய இனங்களின் பரஸ்பர பிரச்சினைகளுக்கும் சமாதானத்தீர்வு காணத் தமிழ் ஈழ அரசு உழைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னிணைப்பு 5.

# தேசிய இனப்பிரச்சினை பற்றிய கூட்டுப் பிரகடனம்

தொடர்ந்து தீர்க்கப்படாத பிரச்சினையாக இருந்து வரும் இலங்கையின் தேசிய இனப் பிரச்சினை தற்போதைய அரசாங்கத்தின் கீழ் மிக உக்கிர நிலையை அடைந்துள்ளது. கடந்த சில ஆண்டுகளாக தொடர்ந்து வட மாகாணத்திற்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட அரச பயங்கரவாதத்தினதும், தோட்டப்பகுதிகளை முதன்மையாகக் கொண்டு இலங்கையின் ஏனைய பாகங்களில் தமிழ் மக்களுக்கெதிராக இன ரீதியில் தொடுக்கப்பட்ட குண்டர்களின் தாக்குதல்களினதும், காரணத்தால் வடபகுதியின் தமிழ் மக்களின் பல பிரிவினர் பிரிவினையே ஒரே தீர்வு என்று ஏற்றுக்கொள்ளும் நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தமது உயிருக்கே பாதுகாப்பற்ற நிலை உருவாகி உள்ள காரணத்தால் தமிழ் தோட்டத் தொழிலாளர்களில் பெரும்பான்மையினர் தமக்கு இந்தியாவிற்குப் போக சந்தர்ப்பம் அளிக்குமாறு வேண்டுகோள் விடுக்க முற்பட்டுள்ளனர்.

பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளுக்கெதிராக சிங்கள மக்களுடன் ஒருங்கிணைந்து இலங்கையின் தமிழ் மக்களும் போராடினர். ஆனால் இலங்கையின் முதலாளித்துவ அரசாங்கங்களும் மேற்படி அரசாங்கங்களால் தூண்டிவிடப்பட்ட இனவாதிகளும் கடைப்பிடித்த குறுகிய இனவாத நடவடிக்கைகளினால் இதே தமிழ் மக்கள் இன்று பிரிவினை கோரும் அளவிற்குத் தள்ளப்பட்டுள்ளனர். சம உரிமை கொண்ட பிரஜைகள் என்ற வகையில் தமது தாய் மொழியை பாவிப்பதற்கான உரிமை, நியாயமான முறையில் தொழில் வாய்ப்புக்களையும் காணிகளையும் பெறுவதற்கான உரிமை என்பவற்றையே தமிழ் மக்கள் ஆரம்பத்தில் தமது கோரிக்கைகளாக முன் வைத்தனர். இக் கோரிக்கைகள் புறக்கணிக்கப்பட்டது மாத்திரமின்றி தமிழ் மக்கள் மீது மேன் மேலும் அடக்குமுறை கட்டவிழ்த்து விடப்பட்டது. இந் நிலையில் அவர்கள் மிகவும் நீண்ட தூர போக்குடைய கோரிக்கைகளை முன் வைத்ததோடு தவறான போராட்ட மார்க்கங்களையும் கடைப்பிடிக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் என்பது பக்கச்சார்பற்ற நிலையில் இருந்து வரலாற்றைப் பின்னோக்கிப் பார்க்கும் போது தெளிவாகின்றது.

இது வரை பதவியில் இருந்த சகல அரசாங்கங்களும் 'பெரும்பான்மை இனத்திற்கு' பாதுகாப்பிற்கெனக் கூறிப் பெரும் ஆரவாரத்துடன், பிரகடனப்படுத்திய சிங்கள அரச கரும மொழிச் சட்டமும், பிரஜாவுரிமைச் சட்டங்களும், தமிழ் மக்களின் உரிமைகளைப் பறிப்பதற்கும் தேசிய இனங்களிடையே பிளவை வளர்ப்

பதற்கும் காரணமாக அமைந்து விட்டன. அதே நேரத்தில் இவை சிங்கள மக்களுக்கு எதுவித விசேட நன்மைகளையும் பெற்றுக் கொடுக்கவும் இல்லை. அரசாங்க நிர்வாகப் பணிகளில் இன்னமும் கூட ஆங்கிலத்திற்குரிய இடத்தைப் பார்க்கும் போது இற்றைக்கு 25 ஆண்டுகளுக்கு முன் பெரும் ஆரவாரத்துடன் அங்கீகரிக்கப்பட்ட சிங்கள அரச கரும மொழிச் சட்டத்தின் மூலம் சிங்கள மக்கள் எதிர்பார்த்த பெறுபேறுகளைக் கூட காண முடியவில்லை.

பிச்சைக்காரன் தனது புண்ணை குணமாக்காமல் வைத்திருப்பது போல சகல முதலாளித்துவ ஆட்சியாளர்களும் தேசிய இனப் பிரச்சினையயும் தீர்க்காது வைத்திருக்க நடவடிக்கை எடுத்துள்ளமையை அண்மைக்கால வரலாறு எடுத்துக் காட்டுகின்றது. முதலாளித்துவ அமைப்பின் கீழ் முற்போக்குத் தீர்வாக அமைந்த பண்டாரநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம் ஒரு தலைப்பட்சமாக கிழித்தெறியப்பட்டமை இதற்குச் சிறந்ததோர் உதாரணமாகும். தீவிர சிங்கள இனவாதிகளைத் தூண்டி விட்டு அன்று அதற்குத் தலைமை வகித்தது தற்போதைய ஜனாதிபதியின் தலைமையிலான ஐ. தே. கட்சியேயாகும். ஜே. ஆர். ஜயவர்தன அன்று இவ்வொப்பந்தத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்குமுகமாக 'பாதயாத்திரை' ஒன்றை ஒழுங்கு செய்தார்.

1965ல் திரு. டட்லி சேனநாயக்காவின் அரசாங்கம் தமிழ் மக்களுக்கு வழங்கவிருந்த சில உரிமைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக யூ. என். பி. விரோத பிரதான அரசியற் கட்சிகள் ஒன்றிணைந்து மேற்குறிப்பிட்டது போன்ற ஓர் எதிர்ப்பு நடவடிக்கையைக் கடைப்பிடித்தன.

''தமிழ் மக்கள் இலங்கையின் சலுகைகள் பெற்ற ஒரு பிரிவினராவர்'' என்ற சட்டுக்கதை கற்றோர் மத்தியில் கூட கணிசமானளவு வேரூன்றி உள்ளது. பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளின் ஆட்சிக் காலத்தில் பிரித்தாளுவதற்காக எடுக்கப்பட்ட சில நடவடிக்கைகளையும், மிசனரிக் கல்வித் திட்டம் காரணமாக யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த மத்தியதர வர்க்கம் மத்தியில் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு பிரிவினருக்கு மாத்திரம் வழங்கப்பட்ட விசேட சலுகைகளையும், மேற்போக்காக நோக்கி எடுக்கப்பட்ட இம் முடிவுகள் முற்றிலும் தவறானவையாகும். இன்று இலங்கையில் வாழும் தமிழ் மக்கள் இரண்டாந்தரப் பிரஜைகளாக வாழ்வதே உண்மை நிலைமையாகும். இது அனைத்துலகமும் ஏற்றுக் கொண்ட அடிப்படை மனித உரிமைகளுக்கும் முரணானதாகும். தமிழர்களாகப் பிறந்த ஒரே காரணத்திற்காக தமது தாய் மொழி மூலம் கருமமாற்றும் உரிமையை அவர்கள் இழந்துள்ளனர்; கல்வி, தொழில் வாய்ப்பு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணிகளைப்பெறல் என்பவற்றைப் பொறுத்த வரையிலும் பல புறக்கணிப்புகளுக்கு ஆளாகியுள்ளனர். முழு இலங்கையிலும் வாழும் பொது மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ள முதலாளித்துவ ஒடுக்குமுறைக்கு தமிழ் மக்களும் உள்ளாக்கப்பட்டிருப்பதோடு, மேலதிகமான விசேட இன அடக்கு முறைக்கும் அவர்கள் ஆளாக்கப்பட்டுள்ளனர்.

மலைநாட்டுத் தோட்டத் தொழிலாளர்களின் நிலைமை இதை விடக் கவலைக்கிடமானது. இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் 2/3க்கும் மேலதிகமாக ஈட்டித் தருவதுடன் பல பரம்பரைகளாக நாட்டின் அபிவிருத்திக்காக வியர்வையையும் இரத்தத்தையும் சிந்தி வரும் இவர்கள் மனிதத்தன்மைக்கே உசிதமற்ற நிலைமைகளிலேயே வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர். அண்மைக் காலம் முதல் இவர்கள் நிரந்தர மரண பயத்தால் வாழ கட்டாயப்படுத்தப்பட்டுள்ளனர். ஒவ்வொரு ஆண்டிலும் பல முறை வடமாகாணத்தில் அல்லது வேறு ஓர் பிரதேசத்தில் நிகழும் தாம் காணாத கேள்விப்படாத சம்பவம் காரணமாக தோட்டத் தொழிலாளர்கள் நயப்புடைக்கப்படுகின்றனர். அவர்களின் பொருட்கள் கொள்ளையடிக்கப்படுகின்றன. பெண்களின் கற்பு சூறையாடப்படுகின்றது; சில சமயங்களில் மரணத்தையும் தழுவநேரிடுகின்றது.

கடந்த சில ஆண்டுகளாக இனக்கலவரங்கள் தன்னியல்பாகத்தோன்றவில்லை. என்பதை விசேடமாகக் குறிப்பிடவேண்டும். வடமாகாணத்தின் தமிழ் போராளிகள் நடாத்தும் போராட்டங்களாவன தவறற்ற வழிமுறைகளைக் கொண்டிருந்த போதிலும் குறிபபாக அவற்றுள் சில தொழிலாள வர்க்க அரசியலுக்கெகிரானதாக இருந்தாலுங் கூட அவை சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல. மாறாக அவை தம்மை அடக்கியொடுக்கும் அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களேயாகும். அடக்கு முறைக் கருவிகளாக இளைஞர்களுக்குத்தென்படும் காவற்படையினருக்கு எதிராக - அத்தனி நபாகள் சிங்களவர்களா தமிழர்களா என்ற வித்தியாசத்தை கணக்கில் எடுக்காது - மோதுகின்றனர்.

சாதாரண சிங்கள இனவாதிகள் யாழ் நூல் நிலையத்திற்கு தீ மூட்டவில்லை; தோட்டப்பகுதிகளையும் - கொழும்பை அண்மித்த பிரதேசங்களையும் சார்ந்த தமிழ் மக்களை கடந்த மூன்று நான்கு ஆண்டுகளில் அடிக்கடி தாக்கவில்லை. பல அமைச்சர்களினதும் – பா. உ. க்களினதும், ஆயுதப்படையைச் சேர்ந்த இனவாதப்பிரிவினரதும் ஆசிர்வாதத்துடன் ஸ்தாபன ரீதியாக அணிதிரட்டப்பட்ட குண்டர்களே மேற்படி தாக்குதல்களுக்குத் தலைமை தாங்கினர். கடந்த கில ஆண்டுகளாக தொழிலாள வர்க்கத்தின் பல்வேறு போராட்டங்களை முறியடிப்பதற்கும் இவ்வரச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கரவாதமும் - ஸ்தாபன ரீதியாக அணிதிரட்டப்பட்ட குண்டர்களும் பயன்படுத்தப்பட்டமையை தொழிலாள வர்க்கம் புரிந்து கொள்ள வேண்டும்.

தொழிற் சங்கத் தலைவர்கள் மோசமான படுகாயங்களுக்குள்ளாக்கப்பட்ட 1978 வங்கி வேலை நிறுத்தம், அரச ஊழியர்களின் விடுமுறை நாட்கள் குறைக்கப்பட்டதை எதிர்த்து நடத்தப்பட்ட மறியற் போராட்டங்கள், சோமபால படுகொலை செய்யப்பட்ட தேசிய எதிர்ப்புத் தினம் ஆகிய சகல சந்தர்ப்பங்களிலும் இக் குண்டர்கள் அரசாங்கத்தின் பாதுகாப்புடன் எவ்வாறு வீதிகளில் சஞ்சரித்தனர் என்பதை தொழிலாள வர்க்கம் என்றும் மறக்க மாட்டாது.

இனவாதத்தை தூண்டிவிட்டு தொழிலாள வர்க்கத்தை பிளவு படுத்துவதோடு நின்று விடாது தொழிலாள வர்க்கப்போராட்டங்கள் தோன்றும் சகல சந்தர்ப்பங்களிலும் இனக்கலவரங்களின் சாட்டில் தொழிலாளப் போராட்டங்களை ஒடுக்குவதை இலங்கையின் சகல முதலாளித்துவ அரசாங்கங்களும் தமது மூல உபாயமாகக் (அடிப்படைக் கொள்கை) கையாண்டு வருகின்றன. இனவாதக் கலவரங்களின் சாட்டில் இன்று அமுலில் இருக்கும் அவசரக்காலச் சட்டம் கூட அடிப்படையில் வர்க்கப்போராட்டங்களை நசுக்குவதற்கே பயன்படுத்தப்படுகின்றது.

எந்தவொரு நிமிடத்திலும் வெடிக்கக்கூடிய கால இடையீட்டு வெடிகுண்டின் வடிவத்தை இன்று இனவாதம் எட்டிப்பிடித்துள்ளது. இனவாதத்தை இல்லாதொழித்தல் சகல சோசலிசவாதிகளினதும், நாட்டுப் பற்று கொண்ட சகல தேச பக்தர்களினதும் இன்றியமையாக் கடமையும் பொறுப்புமாகும். தொழிலாள வர்க்கம், விவசாயிகள், முற்போக்குப் புத்திஜீவிகள் ஆகிய சகல பிரிவினரும் இனவாதத்திற்கு எதிராக அணிதிரண்டால் மாத்திரமே அதனை ஒழித்துக் கட்ட முடியும். சமூகத்திலுள்ள பிற்போக்குச் சக்திகளினதும், தீவிரவாதிகளினதும், அரசாங்கத்தினதும் பயமுறுத்தல்களுக்கு அஞ்சாது இனவாதத்தை எதிர்த்து பிரச்சார ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டால் மாத்திரமே இனவாதத்தை ஒழித்துக் கட்டுவது சாத்தியமாகும்.

சோசலிச அமைப்பைக் கட்டியெழுப்பாது தேசிய இனப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வு காணமுடியாது. ஆனால் இன்றைய நிலைமைகளின் கீழ் பின்வரும் உடனடிக் கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கு அணிதிரளுமாறு சகல முற்போக்கு மக்களையும் அமைப்புகளையும் வேண்டுகின்றோம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. தமிழ் மொழியை உபயோகிக்கும் மக்கள், தமது நாளாந்தக் கடமைகளையும் - நிருவாகக் கருமங்களையும் தமது மொழியிலேயே செய்வதற்கு வழிவகை செய்தல் வேண்டும். இதற்குரிய உடனடித் தீர்வாக தமிழ் மக்கள் பெரும்பான்மையினராக வாழும் மாவட்டங்களில் காவல்துறை உட்பட அரசாங்கத்தின் நிருவாகக் கருமங்களில் ஈடுபடுத்தப்படும் உத்தியோகத்தர்களில் அதிகமானோர் தமிழ் மொழியை உபயோகிக்கக் கூடியவர்களாயிருப்போர் மத்தியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

2. சுதந்திரமான சகல தேசிய இனங்களுக்கும் இருக்க வேண்டிய அடிப்படை ஜனநாயக உரிமைகள் எதுவித வித்தியாசமும் இன்றி தமிழ் மக்களும் அனுபவிப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

3. தமிழ் மக்களின் நாளாந்த வாழ்வில் ஆயுதப்படைகள் தலையிடுவதை உடனடியாக நிறுத்த வேண்டும்.

4. அடிக்கடி நிகழும் துன்புறுத்தல்களைப் பற்றிய இராணுவ பொலிஸ் விசாரணைகளின் போது தமிழ் மக்களின் நம்பிக்கையை உறுதி செய்யும் வகையில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளையும் பங்கு பற்றச் செய்வதற்கு அபிவிருத்திச் சபைகளின் கீழ் நிரந்தர பாதுகாப்பு வேலைத் திட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட வேண்டும்.

5. இலங்கையில் தங்கி வாழ விரும்பும் தமிழ் தோட்டத் தொழிலாளர்களுக்கு முழுமையான பிரஜாவுரிமை அந்தஸ்த்து வழங்கப்பட வேண்டும். இலங்கையில் நடைபெறும் சம்பவங்கள் காரணமாக விரக்தியுற்று இலங்கையை விட்டு இந்தியா போக விரும்புவோருக்கு சாதாரண நடைமுறைக்கு அப்பாற்பட்ட விசேட வேலைத் திட்டம் மூலம் உடனடியாக வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும.

இங்ஙனம்

குணசேன மகாணும — தொழிலாளர் ஐக்கியத்திற்கான கமிட்டி

எச். என். பர்ணாந்து — இலங்கை ஆசிரியர் சங்கம்
ஒஸ்வின் பர்ணாந்து — ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம்
ஏ. எஸ். மூர்த்தி — தமிழ் தொழிற் சங்க சம்மேளனம்
ஜி. டீ. சவணதாஸ — அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம்
போலியர் குணவர்தன — ஸ்ரீ லங்கா ஜாதிக்க குரு சங்கமய
மகிந்த த சில்வா — உள்ளூராட்சி லிகிதர் சேவைச்சங்கம்
ச. சத்தியபால — அரசாங்க ஐக்கிய தொழிலாளர் சம்மேளனம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றொபர்ட் பெரேரா — தோட்ட ஊழியர் சங்கம்

றொனி பெரேரா — ஐக்கிய இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கம்

டீ. டப்ளியூ. அப்புஹாமி — அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம்

எஸ். ஜி. புஞ்சிஹேவா — ஜனநாயக உரிமைகளை வென்றெடுப்பதற்கான இயக்கம்

குளியாப்பிட்டியே பர்ஞநந்து — விமுக்தி தரும ஒன்றியம்

வீ. எல். பெரெய்ரா — மலையக இளைஞர் பேரவை

சரத் பெம்சிறி — இலங்கை மாணவர் சம்மேளனம்

கலாநிதி விக்ரமபாகு கருணாரத்ன — நவ சமசமாஜக் கட்சி

ஜீ. ஐ. டீ. தர்மசேக்கர — ஜனநாயகத் தேசிய முன்னணி

பிரேமபால ஹேவபட்டகே — ஜனதா சங்கமய

கல்யாணந்த திராணகம — நவ லங்கா கம்யூனிஸ்ட் கட்சி

பண்டிதர் ரண்தொம்பே ஞானரத்தின தேரோ

அக்கரெல்லே குணரத்ன தேரோ

பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திர

பேராசிரியர் சாந்த த அல்விஸ்

கலாநிதி நலீன் த சில்வா

கலாநிதி கோசல குணதிலக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனம், மதம், சாதி ஆகிய சகல மோதுதல்களினதும், அர்த்த மற்ற தன்மையை ஆதாரபூர்வமாக நிரூபித்து, மனித இனம் முழுமையுடனான ஒருமைப்பாட்டை, புத்தர் பெருமான் முன் வைத்த மிக உயரிய சமூகத்தத்துவத்தை வாசெட்ட, அஸ்ஸலாயன, மதுர ஆகிய சூத்திரங்கள் விளக்கியுள்ளன.

இன, தேச வரம்புகளுக்குள் உட்படுத்தப்படாத புத்தர் பெருமான், மகிந்தன், சங்கமித்த போன்ற மகத்தான சமயத் தலைவர்களைப் பற்றி கவனஞ் செலுத்தும் போது இலங்கைப் பௌத்தர்கள் எந்தவிதமான இனவாதத்துடனும் உடன்பட முடியாது.

எனவே எமது மக்களுக்கு இக் கால கட்டத்தில் இத்தகைய புத்தகம் ஒன்று மிக அவசியமாகும்.

**வண பட்டபொல அநோமதஸ்ஸி**

ஸ்ரீ கல்யாண வன்சு நிக்காயாவின் பிரதித் தலைவர்

---

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைகளைப் பற்றி பல முற்போக்கு இயக்கங்கள் ஒன்று சேர்ந்து புத்தகம் ஒன்று வெளியிடுவது எனது பெரு மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். பல கற்றறிவாளரின் கூட்டு முயற்சியாக வெளிவந்துள்ள இப்புத்தகம் தேசிய இனங்களுக்கிடையே நல்லுறவையும் ,சமாதானத்தையும் ஏற்படுத்துவதற்கு பெரிதும் உதவும்.

இப்புத்தகத்தை வாசிக்குமாறு பொது மக்களுக்கு சிபாரிசு செய்கின்றேன். இப் புத்தகத்தை வாசித்து இக் கருத்துக்களை நாத் திசைக்கும் எடுத்துச் செல்லுமாறு வேண்டிக்கொள்கிறேன்.

**அதி வண கலாநிதி லியோ நாணயக்கார**

பதுளை பிசொப்

---

இலங்கை ம[illegible]கள் முகங்கொடுக்கும் தேசிய இனப்பிரச்சினையையும் [illegible]க்கப் [illegible]ச்சினையையும் ஆராயும் புத்தகம் ஒன்றில்லாமை இத்துறையி[illegible] ஆர்வங்காட்டியோருக்கு இருந்து வந்த பெருங் குறைபாடா[illegible] இப்புத்தகம் மேற்படித் தேவையைப் பூர்த்தி செய்கின்றது.

தேசிய இனங்களுக்கிடையே நல்லுறவை வளர்க்கும் அரும் பணிக்குத் தோள்கொடுத்துள்ள பிரபல்யமான ஒரு பகுதியினர் இப் புத்தகத்தை எழுதியுள்ளனர். இப்புத்தகம் பிரசுரிக்கப்பட்டமையை பெரிதும் வரவேற்கின்றோம். தேசிய இனப் பிரச்சினையை புரிந்து கொள்வதற்கு இது பெரிதும் உதவும் என நம்புகின்றோம்.

**பேராசிரியர் க. கைலாசபதி**

யாழ்ப்பாண பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org